Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 12 செவ்வாய்க்கிழமை (29.10.2013) பக்கங்கள் 20 ஓசை - 029




# பொதுநலவாய மாநாட்டில் விக்னேஸ்வரன் பங்கேற்பு?

## கூட்டமைப்பின் கோரிக்கையும் நிராகரிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் நிராகரித்துள்ளதாக சண்டே ரைம்ஸ், மவ்பிம மற்றும் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகள் அனைத்தும் பங்குபற்றிய கூட்டம், சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை பகிஷ்கரிப்பதெனவும், பொதுநலவாய மாநாட்டிற்கு வெளியே அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து மாநாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு விளக்கப்படுமெனவும் மாவை சேனாதிராசா தெரிவித்திருந்தார். எனினும், பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்கும் கூட்டமைப்பின் முடிவினை முதல்வர் விக்னேஸ்வரன் நிராகரித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(19) பக்கம் பார்க்க...

# என்றும் முறியாத உறவு கொழும்புடன் வேண்டும்

## மணிசங்கர் ஐயர் தெரிவிப்பு



(புதுடில்லி)

இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசாங்கம் மேற்கொண்டு வரும நிலையில் எமது அயல்நாடான இலங்கையுடன் உறவுகளைப் பேணுவது மிகவும் அவசியமானது என காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான மணிசங்கர்ஜயர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது,

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள கொமன்வெல்த மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டுமென தமிழ்நாடு ஒரு தலைப்பட்சமாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆனால் இலங்கை தமிழர்களின் நல்வாழ்வு கருதி இந்தியா பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென வேறொரு தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இலங்கை எமது அயல்நாடு. அங்கு தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டத்திற்காக இந்தியா பல மில்லியன்களை செலவிடுகின்றது. இந்தநிலையில் நாம் இலங்கையுடன் சிறந்த உறவினைப் பேண வேண்டும் இலங்கைப் பிரச்சினை என்பது தமிழ்நாடு மட்டும் சார்ந்ததல்ல. அது தேசியப் பிரச்சினை.

(19) பக்கம் பார்க்க...

# யாழ்தேவியில் மோதுண்டு முறிகண்டியில் ஒருவர் மரணம்

கிளிநொச்சி, திருமுறிகண்டி, பொன்னகர் பகுதியில் யாழ்தேவி ரயிலில் மோதுண்ட முதியவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை 4.50 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருமுறிகண்டி பொன்னகரைச் சேர்ந்த அன்னிமுத்து கணேஸ் (வயது -65) என்பவரே விபத்தில் மரணமடைந்தவராவார்.

கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு வந்துகொண்டிருந்த யாழ்தேவி ரயிலில் மோதுண்டே குறித்த நபர் மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(கே, 77)

# கொமன்வெல்த் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்பார் மன்மோகன்?

அடுத்த மாதம் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் மாநாட்டின் தொடக்க நிகழ்வுக்கு, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், தனி விமானத்தில் வந்து விட்டு உடனடியாகத் திரும்பிச் செல்லக் கூடுமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொமன்வெல்த் மாநாட்டுக்கு இரண்டு வாரங்களே உள்ள நிலையில், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், இந்த மாநாட்டில் பங்கேற்பாரா இல்லையா என்று இன்னமும் அறிவிக்கவில்லை.

கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டுமென தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவும், ஏனைய அரசியல் கட்சிகளும் இந்தியப் பிரதமருக்கு கடும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

தமிழ்நாடு சட்டப் பேரவையிலும் இதுதொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், இந்தியப் பிரதமருக்கு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இந்தநிலையில், கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் போது, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், கொமன்வெல்த் மாநாட்டின் தொடக்க விழாவுக்கு மட்டும் தனி விமானத்தில் வரக்கூடும் என்று புதுடில்லியில் உள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மகிந்தவுடனோ அல்லது வேறெந்த நாட்டின்

(19) பக்கம் பார்க்க...

# அரியாலை பெண் கொலை; ஆனைக்கோட்டை வாசி கைது

யாழ். நாச்சிமார் கோவில் தேர் முட்டி கட்டடத்திலிருந்து மீட்கப்பட்ட' பெண்ணின் சடலம் தொடர்பாக ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிறுகுற்றத் தடுப்புப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

யாழ். அரியாலையைச் சேர்ந்த மார்க்கண்டு லோக ராணி (வயது -45) என்ற பெண் கடந்த வியாழக்கிழமை நாச்சிமார் கோவில் தேர்முட்டி கட்டடத்திலிருந்து கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில், ஆனைக்கோட்டை பகுதியினைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இக்கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளார்

(19) பக்கம் பார்க்க...

08



எனக்கு சொந்தம்

10



தெரியுமா?

11



தவறு

# புலம்பெயர் தமிழர்கள் மூலம் என்னை ஓரங்கட்ட முயற்சி

## ஆனந்தசங்கரி குற்றச்சாட்டு



தம்மை ஓரம்கட்ட புலம்பெயர் தமிழர்கள் முயற்சிப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி குற்றஞ்சாட்டியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியொன்றின் பின்னணியில் புலம்பெயர் தமிழர்கள் செயற்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமது கட்சி தொடர்ந்தும் அங்கம் வகிக்கின்றதா என்பதனை கேட்டறிந்து தெரிவிக்குமாறு அவர், ஆயரிடம் கோரியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில தரப்பினர் தாம் கூட்டணியில் அங்கம் வகிப்பதனை விரும்பவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தமிழ் சமூகத்தின்

(19) பக்கம் பார்க்க...

# வலி.வடக்கு பிரதேசத்தில் சரவணபவன் மீது அச்சுறுத்தலா?

## இல்லை என்கிறது இராணுவம்

வலிகாமம் வடக்கில், இராணுவ உயர் பாதுகாப்புப் பிரதேசத்தின் உள்ளே, பொதுமக்களின் வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்படுவதாக முறையிடப்பட்டதை அடுத்து, அந்த இடங்களைப் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுடன் அங்கு சென்று வீடுகள் உடைகப்படுவதைப் படம் பிடித்த ஊடகவியலாளர்களையும் இராணுவத்தினர் அச்சுறுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கட்டுவன் வடக்குப் பகுதியில் இராணுவ வேலிக்கு வெளியில் நின்று பார்த்தபோது, அங்குள்ள வீடுகளை

(19) பக்கம் பார்க்க...

## பால் சேகரிப்பு நிலையம் திறப்பு விழா

(முழங்காவில்)

பூநகரி கால்நடை வளர்ப்போர கூட்டுறவுச் சங்கத்தின் ஐ.ஓ.எம். நிறுவனத்தால் 20 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய பால் சேகரிப்பு உற்பத்தி சேவை நிலையு திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணியளவில் இ.கந்தசாமி தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய காணி, நீர்ப்பாசன அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண விவசாய காணி, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் யு.எல்.எம்.ஹால்டீ இலங்கை மற்றும் மாலைதீவுக்குரிய ஐ.ஒ.எம். அதிகாரி யொகபே ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் சி. வசிகரன், பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.தவராசாவும் கலந்துகொள்ளவுள்ளார். (112)

## மென்பொருள் போட்டியில் இரண்டாமிடம்

(மானிப்பாய்)

SLIIT இனால் தேசிய ரீதியில் கடந்தவாரம் நடாத்தப்பட்ட Code fest எனும் மென்பொருள் உருவாக்கப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஞானகீதன் பங்குபற்றி அப்போட்டியில் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டார். வெற்றிக்கேடயமும் ரூபா. 60,000 பணப்பரிசிலும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (48)

## பொதுக்கூட்டம்

(ஆனைக்கோட்டை)

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு சங்கத்தலைவர் இ.பௌலின் தலைமையில் நடைபெறவுள்ளது.

நவாலி கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (104)

# சுகாதாரத் தொண்டர்கள் பகிஷ்கரிப்பு

## நிரந்தர நியமனம் வழங்குவதில் சர்ச்சை



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் சுகாதாரத் தொழிலாளர்களாக பணியாற்றும் தொண்டர் பணியாளர்கள் நேற்று சில மணிநேரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சுகாதார அமைப்பினால் கடந்த சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு நியமனம் வழங்குவதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது கல்வித்தகைமை பார்க்கப்படுவதாகவும், அவ்வாறு கல்வித் தகைமைக்குட்படாத தமக்கு கல்வித்தகைமை பார்க்காது நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள அவர்கள் நேற்று முற்பகல் யாழ்.போதனா வைத்திய சாலையின் புதிய நான்கு மாடிக்கட்டடம் அமைந்திருக்கும் பகுதியில் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

அத்துடன் எமக்கு கல்வித் தகைமை இருப்பின் வேறு வேலைகள் பெற்றிருக்கமுடியும். 175 ரூபா நாளாந்த கொடுப்பனவில் தொண்டர்களாக பணியாற்றியிருக்கமாட்டோம் என்று தெரிவித்த அவர்கள் சுகாதார தொழிலாளர்கள் நியமனத்தில் தமக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று தெரிவித்தனர்.

இதேவேளை வடமாகாண எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமாகிய கந்தசாமி கமலேந்திரன் யாழ் போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் இரா. செல்வவடிவேல் ஆகியோர் யாழ்.போதனா வைத்திய சாலையில் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்ட தொண்டர் பணியாளர்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு அவர்களது கோரிக்கை குறித்து கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டு திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பவர்களுக்கு நியமனம் கொடுப்பது குறித்து சுகாதார அமைச்சுடன் பேசி நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டதாகவும், தொண்டர் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இருந்தும் அவ்வாறு கல்வித் தகைமை தம்மிடமில்லையெனவும், அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை முற்பகல் 11.50 மணியளவில் அனைத்து தொண்டர் பணியாளர்களும் கடமைக்குத் திரும்பியதாக யாழ்.போதனா வைத்திய சாலையின் தலைமைக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

இதற்கிடையில் பிற்பகல் 2.30 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் வட மாகாண சபை உறுப்பினருமாகிய எம்.கே. சிவாஜிலிங்கம் யாழ்.போதனா வைத்திய சாலைக்குச் சென்று தொண்டர் பணியாளர்களது பிரச்சினை குறித்து வைத்தியசாலை நிர்வாகத்தினருடனும், தொண்டர் பணியாளர்களுடனும் பேச்சுக்களில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## சீரற்ற காலநிலையால் மின்னல் தாக்கம் வருட இறுதிவரை நீடிக்கும்

காலநிலை மாற்றம் காரணமாக டிசம்பர் முதல் வாரம் வரையிலான காலப்பகுதியில் நாடு முழுவதும் மின்னல் தாக்கம் கடுமையாக காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ளும் வகையில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இடைப் பருவப் பெயர்ச்சியுடன் கூடிய காலநிலையே தற்போது நிலவி வருகின்றது. இதன்போது, மழையுடன் மின்னல் தாக்கமும் கடுமையாக காணப்படுமென சுட்டிக்காட்டிய வானிலை கடமைநேர அதிகாரி, வருடந்தோறும் இக்காலப் பகுதியிலேயே மின்னல் தாக்கத்தினால் பாதிப்படைவதுடன் உயிரிழப்பதாகவும் கூறினார்.

எனவே, பொதுமக்கள் இக் காலப் பகுதியில் மின்னல் தாக்கம் குறித்து கூடுதல் அக்கறை செலுத்த வேண்டியது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

மின்னல் தாக்கத்தின் போது மக்கள் வயல்வெளி, தோட்டம், மைதானம் போன்ற திறந்த வெளிகளில் நிற்பதனையும் திறந்த வாகனங்களில் பயணம் செய்வதனையும் அறவே தவிர்த்தல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மழையின் போது தனி மரங்களுக்குக் கீழ் ஒதுங்குதல் ஆகாது. அத்துடன் உலோகத்தினாலான பொருட்களை கையில் வைத்திருத்தலோ அல்லது அவ்வாறான பொருட்களுக்கு அண்மையில் நிற்பதோ முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மழை மற்றும் மின்னல் தாக்கம் ஏற்படப் போவதனை அறிந்ததும் பாதுகாப்பான கட்டடத்தின் கீழ் ஒதுங்குவது அவசியமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலை காரணமாக மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளைகளில் மழை பெய்யும். நண்பகல் மற்றும் மாலை வேளைகளில் மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யுமெனவும் கடமை நேர அதிகாரி கூறினார்.

கடல் பிரதேசத்தில் ஹிக்கடுவையிலிருந்து மாத்தறையூடாக ஹம்பாந்தோட்டை வரையிலும் திருகோணமலையிலிருந்து பொத்துவில் வரையான கடல் பிரதேசத்திலும் மழை பெய்வதுடன் காற்றின் வேகம் மணித்தியாலயத்திற்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கலாமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பயன்தரும் மரக்கன்றுகள் நடுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகமும், நல்லூர் வடக்கு சனசமூக நிலையமும் இணைந்து நேற்று முன்தினம் நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய சூழலில் மரக்கன்றுகள் நாட்டும் வைபவம் இடம்பெற்றது.

இதில் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், கிராம மக்கள், மற்றும் நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தினர் ஆகியோர் இணைந்து மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர். (48)

## குளவி கொட்டிய இளைஞருக்கு சிகிச்சை

(திருநெல்வேலி)

குளவிகளால் கொட்டப்பட்ட கல்வியங்காடு புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உடல் உபாதையால் மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டின் பின்புறத்தில் விழுந்து கிடந்த பனை ஓலை ஒன்றை எடுத்தபோது அதற்குள் இருந்த குளவிகளால் இவ்இளைஞர் சில தினங்களுக்கு முன்னர் உடல் முழுவதும் கொட்டப்பட்டார். உடனடியாக இவர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் விடுதிக்கு மாற்றப்பட்டு மறுநாள் சுகமாகி வீடு திரும்பியிருந்தார்.

ஆனால், இவருக்கு நேற்று முன்தினம் மீண்டும் உடலில் சில உபாதை ஏற்பட்டது. குடும்பத்தவர்களினால் இவர் திரும்பவும் வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்லப்பட்டபோது விடுதியில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (137)

## வாழும் கலைப்பயிற்சி

(திருநெல்வேலி)

கீரிமலை சிவபூமி மடத்தில், 'வாழும் கலைப்பயிற்சி' இடம் பெற்றது.

இந்தியாவில் இருந்து வருகைதந்திருந்த பயிற்சியாளர்கள் இப்பயிற்சி நெறியினை வழங்கியிருந்தனர். கடந்த வாரம் மூன்று தினங்கள் இவ்வதிவிடப் பயிற்சி நடைபெற்றது.

அறுபதுக்கும் மேற்பட்ட பயனாளிகள் மடத்தில் தங்கியிருந்து இவ்வாழும் கலைப்பயிற்சியைப் பெற்றுப் பயனடைந்தனர். (137)

## பெரும்போக விவசாயம்; கிளி. யில் திகதி நிர்ணயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய நடுகை மற்றும் பயிர்ச்செய்கை தீர்மானம் தொடர்பான கூட்டம் நேற்றுக்காலை 10 மணி முதல் 12 மணிவரை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் காலபோக செய்கை தொடர்பாக ஆராயப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் பயிர்ச்செய்கை தீர்மானம் எடுக்கப்பட்டது. இதன்படி நீர் விநியோகம் நாளை புதன்கிழமை எனவும், கால்நடை கட்டுப்பாடு நேற்று எனவும், இறுதி விதைப்பு எதிர்வரும் 10 ஆம் திகதி எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் கிளிநொச்சி இரணைமடு, அக்கராயன் குளத்தின் கீழ் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதை அடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய முன்னேற்றம் தொடர்பாகவும், எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் விவசாய திணைக்கள அதிகாரிகள், மாவட்ட விவசாய அமைப்புக்கள், கமக்கார அமைப்புக்கள், விவசாய பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (கே)

## வாசிப்பு மாத போட்டிகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் பொது நூலகங்கள் இணைந்து தத்தமது எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே ஆங்கில மொழி மூலமான போட்டிகளை நடத்தவுள்ளது.

இப்போட்டிகள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை ஊடாக விண்ணப்பித்த மாணவர்களை உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு நூலகங்களின் நூலகர் சார்பில் பிரதம நூலகர் வே.வித்தியானந்தன் அறிவித்துள்ளார். (11)

# சண்டிலிப்பாய் சுகாதாரப் பிரிவில்

# 7250 இடங்களில் டெங்கு பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் சுமார் 7 ஆயிரத்து 250 இற்கு மேற்பட்ட இடங்களில் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி சுகாதார அதிகாரி மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் மழை காலம் ஆரம்பமான நிலையில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன் அவர்களின் சுற்றுச் சூழலை துப்பரவான முறையில் பேண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த வாரத்தில் 7 ஆயிரத்து 50 இற்கு மேற்பட்ட வீடுகள் 39 அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட சுமார் 7 ஆயிரத்து 250 இற்கு மேற்பட்ட இடங்கள் பார்வையிடப்பட்டுள்ளன.

மேற்படி பரிசோதனையின் போது 1600 இற்கும் அதிகமான இடங்களில் டெங்கு பரவக்கூடிய அபாயமான நிலைமை காணப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதிகள் உடனடியாக சுத்தம் செய்யப்பட்டதுடன் அத்தகைய நிலையில் சுற்றுப்புறங்களை வைத்திருந்தவர்களுக்கு கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுகள் அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பட்டதாரிப் பயிலுனர்கள் சுகாதாரத் தொண்டர்கள், கிராமிய மட்ட சுகாதாரக் குழுக்கள், பொலிஸார், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏனைய பிரதி நிதிகள் எனப் பலரும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (48)

# மின்விளக்குகள் ஒளிரும் சாட்டி கடற்கரைப் பகுதி

(யாழ்ப்பாணம்)

வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரைப் பகுதியில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதால் சுற்றுலாப்பயணிகள் மட்டும் இன்றி கடற்கரை வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்களும் நன்மையடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் அதிகளவு உல்லாசப் பயணிகள் வந்து போகும் இடங்களில் வேலணை சாட்டி கடற்கரையும் ஒன்றாகும். இங்கு இதுவரை காலமும் மின்விளக்குகள் பொருத்தப்படாத நிலையில் காணப்பட்டது.

இந்த நிலையில் வேலணை வர்த்தக சங்கத் தலைவர் க.ஜெயச்சந்திரமூர்த்தி செயலாளர் க.மார்க்கண்டுதாசன் ஆகியோர் பிரதேச சபைத் தலைவர் சின்னையா சிவராசா(தோழர் போல்) கவனத்துக்கு கொண்டு சென்றதையடுத்தே இந்த மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியினை அபிவிருத்தி செய்யும நடவடிக்கையில் பிரதேச சபையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஓர் அங்கமாகவே மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் பிரதேச மக்கள் அச்சமின்றி இரவு வேளைகளில் பயணங்களை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது தென்னிலங்கையிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் தீவகத்திற்கு வந்து செல்வது குறிப்பிடத்தக்க விடயமாகும். (சி)

# சமூக சேவையாளனுக்கு உயர் கௌரவிப்பு

(வலிகாமம்)

சிறந்த கொடைவள்ளலும், சமூக சேவகனுமாகிய கல்விக் காருண்யன் நாகரத்தினம், அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் "சைவப்புலவர் பட்டம்" வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கௌரவிப்பு, சைவத்திற்கும், தமிழிற்கும் அவர் ஆற்றி வரும் பணிக்காக வழங்கப்பட்டுள்ளது. இந்த வைபவம் கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றிருந்த சைவப்புலவர் சங்கப்பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டது.

இந்தப் பட்டத்தை சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை வழங்கிக் கௌரவித்தார். (06)

# தம்பாலை இந்துமயானம் திருத்தப் பணிகள் ஆரம்பம்

தம்பாலை இந்து மயானத்தின் திருத்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அந்தப் பகுதிப் பொதுமக்களால் மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகின்றது.


இந்த மயானமானது கடந்த காலங்களில் ஏற்பட்ட போர்ச்சூழ்நிலையின் போது பல்வேறு பாதிப்புக்குள்ளாகி காணப்பட்டதுடன் தகனக் கிரியைகளையும் மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை அப் பகுதி மக்கள் எதிர் கொண்டு வந்தனர்.

மேலும் இந்த மயானம் புனரமைப்புப் பற்றி பத்திரிகைகளில் செய்தியும் வெளியிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பிலிருந்து இந்த மயானத்தின் திருத்தப்பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இந்தப் பணிகள் நிறைவடைந்தால் தகனக் கிரியைகளை மேற்கொள்வதற்கு வசதியாக அமையும் எனவும் இப்பகுதி மக்கள் தெரிவிப்பதுடன் நீண்ட காலமாக நிலவி வந்த சிரமங்கள் நீங்கும் எனவும் சமூக ஆர்வலர்களும் பெரியோர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர். (85)



கிளிநொச்சி புகையிரத கடவைக்கு குறுக்கான வீதிப்பகுதி உரிய முறையில் சீர் செய்யப்படாமையால் சிரமத்தில் மக்கள் செல்வதைக் காணலாம். (கே)




## வடக்கு மாகாண சபையா? அல்லது யாழ்ப்பாண மாகாண சபையா?

உலகில் எல்லாச் சமூகங்களும் ஏதோ ஒரு கனவோடு தான் வாழ்கின்றன. சில சமூகங்கள் அதீத கனவுகளைக் கொண்டவை. தமிழ்ச் சமூகமும் அவற்றில் ஒன்று.

குறிப்பாக ஈழத் தமிழர்கள் தனி நாடு ஒன்றைக் கனவு கண்டார்கள். அவற்றின் தலைநகரமாக திருகோணமலை அமையும் என்றார்கள். இறுதியாக அவர்களுக்கு கிடைத்தது துண்டாடப்பட்ட மாகாண சபை.

அந்த மாகாண சபையிலும் அதிகாரங்கள் போதாது என்ற நினைவு வேறு.

ஆனாலும் அந்த மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றவுடன் "**மலர்ந்தது தமிழர் அரசு**" என்று வெடி கொளுத்தினார்கள்.

கனவுகளின் உச்சம் இப்படியாயிற்று. இது வேற கதை.

சரி, எப்படியோ கிடைத்த மாகாண சபையை வடக்கில் – வன்னியின் மத்தியில் **வடக்கின் நிர்வாகம்** மாங்குளத்தில்தான் அமைய வேண்டும் என்று புலிகளின் காலத்திலும் கூறப்பட்டது.

அதற்காக அமைவிடம் தெரிவு செய்யப்பட்டு காணியும் ஒதுக்கப்பட்டது.

மாங்குளத்தில் அமைப்போம் என்று சில காலங்களுக்கு முன்னர் சொன்னார்கள். பிறகு, கிளிநொச்சியில் அறிவியல் நகர் பகுதியில் அதை அமைப்பதற்கான ஆயத்தங்கள் நடந்தன.

குறிப்பிட்ட தொகை நிதி ஒதுக்கப்பட்டு அறிவியல்நகர் பகுதியில் வடமாகாண சபையின் பணியாற்றும் அதிகாரிகளுக்கான இருப்பிடங்களும் தயார் செய்யப்பட்டன.

புலிகள் இது தொடர்பாக 1994 ஆம் ஆண்டு ஒரு விளக்க காட்சியை மாதிரி உருக்களோடு யாழ்ப்பாணம் நல்லூர் திருவிழாவில் காண்பித்தார்கள். அப்பொழுது அதை பலரும் விரும்பியோ விரும்பாமலோ தலையாட்டி ஆமோதித்தார்கள்.

இது நடந்தது 2010 – 2011 இல். ஆனால் யாழ்ப்பாண மூளை எல்லாவற்றிற்கும் 'தண்ணி காட்டிவிட்டு' யாழ்ப்பாணத்திலேயே மாகாண சபையை நிர்மாணிக்கத் தொடங்கிவிட்டது. மாகாண சபைத் தேர்தல் நடப்பதற்கு முதலே மிக இரகசியமாக மாகாண சபைக்கான கட்டடத்தை கைதடியில் இரவோடு இரவாக கட்டிவிட்டார்கள்.

இந்த விசயத்தை எந்தவொரு பத்திரிகையும் எந்தவொரு அரசியல் வாதியும் கண்டுகொள்ளவே இல்லை. ஆளுநருடைய கண்ணைக் கட்டி காதில் பூவைச் செருகி கையிலே வெங்காயத்தையும் வைத்து விட்டார்கள்.

மாகாண சபைத் தேர்தலும் முடிய வடமாகாண சபை தலைமைக் கட்டடத்திற்கான வேலையும் முடிந்துவிட்டது.

உண்மையில் இது ஒரு பச்சைத் துரோகம். வஞ்சகச் செயல்.

யாழ்ப்பாணத்திற்கு வெளியே 05 மாவட்டங்கள் உள்ளன. மாகாண சபை உறுப்பினர் தொகையில் யாழ்ப்பாணத்திற்கு வெளியேதான் அதிகம். யாழ்ப்பாணத்தின் 16 உறுப்பினர்கள் பிற மாவட்டங்களில் 20 உறுப்பினர்கள்.

அப்படிப் பார்த்தாலும் யாழ்ப்பாணத்தின் வெளியேதான் மாகாண சபை அமைந்திருக்க வேண்டும். மட்டுமல்ல போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமும் வன்னியே. தேவைகள் அதிகம் உள்ள பிரதேசமும் வன்னியே. பின்தங்கிய பிரதேசமும் வன்னியே.

நியாயத்தின்படி வன்னியில் மாகாண சபையின் தலைமைப் பீடமும் செயற்படும் மையங்களும் அமைய வேண்டும்.

வன்னி மக்களின் கனவும் அதுதான். உலகத் தமிழர்களின் கனவும் அதுதான்.

மனச்சாட்சி உள்ள இதயங்கள் நிச்சயம் விழி திறக்கும். நீதியும், அதிகாரப்பரவலாக்கமும் ஒன்றே அகவிழி திறப்பதே உயரிய நாகரீகம்.

நாகரீகத்தின் உச்சம் தாம் என்று சொல்லும் யாழ்ப்பாண மனத்தின் பதில் தான் என்ன?

மரணம் என்பது கடன். அந்தக் கடனை எல்லோரும் கொடுத்துத் தான் ஆகவேண்டும். - சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மூதாதையரின் சாம்பல்!

மிக்சிகன் பல்கலைக்கழக சுற்றுச் சூழல் ஆய்வகத்தைச் சேர்ந்தவர்கள், பூமிக் கோளத்தில் ஏற்படும் சீரழிவுகளை "பெரும் சீரழிவுகள் 5" எனப் பட்டியலிடுகிறார்கள். இதில், 3வது இடத்தைப் பெற்றுள்ளது பல்லுயிர் பெருக்க குறைபாடு. இதுதான் இவ்வுலகில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்கிறார்கள்.

முன்னர் நாம் அன்றாடம் பார்த்துவந்த பல சிற்றுயிர்கள் பேரழிவுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டன. குருவிகள் கூடுகட்ட இப்போதெல்லாம் வைக்கோல்களே கிடைப்பதில்லை. கூரை வேய்ந்த வீடுகளும் வழக்கொழிகின்றன. கிராமங்களிலும் இப்போது கொங்கிரீட் வீடுகளே. வீட்டுத்திட்டங்களாகவும் கல்வீடுகளே.

இந்த முன்னேற்றமடைந்த அறிவியலின் சூழல் பறவைகளுக்கு உணவு நெருக்கடியைக் கொண்டுவந்து அவைகளை நம்மிடமிருந்து அப்புறப்படுத்திவிட்டது.

இயற்கை சார்ந்த வாழ்க்கை முறையிலிருந்து நம்மை நாமே விலக்கிக் கொண்டுவிட்டோம். அந்த இரசாயன மருந்துகள் தம் கோரக் கரங்களால் நம்மையும் அழிக்க காத்துக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்து விடுகிறோம்.

இந்த உயிர் சூழல் பாதிப்பால் ஓசோன் மாசடைதல், அமில மழை, சத்துக் குறைவான நீரை மேகங்கள் மழையாகப் பொழிதல் போன்றவை ஏற்படுவதாகச் சொல்கின்றனர். பெருமரங்கள் வளராமல் இருப்பது அல்லது அதன் வளர்ச்சி குன்றுதல், பறவைகள் இடப்பெயர்ச்சி, வண்ணத்துபூச்சிகள் இனப்பெருக்க குறைவு, குளத்தில் மீன்கள் இறப்பது, அதன் பெருக்கம் குறைதல், மூலிகைச் செடிகள் முற்றாக அழிதல் என்பனவெல்லாம் இதன் தாக்கம்தான்.

ஒவ்வொரு மனிதரும், பல்லுயிர்ச் சூழலின் தேவையைப் புரிந்துகொண்டு தன்னையும் இப்பூவுலகையும் பாதுகாக்க வேண்டும்.

1854-ல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பிராங்ளின் பியர்ஸ் செவ்விந்தியர்கள் வசித்த நிலப்பகுதியை வாங்குவதற்காக அணுகியபோது, பழங்குடி இனத் தலைவரான சியாட்டில் மூப்பன் அளித்த பதில் சூழலியலாளர்களாலும், இயற்கை நேசர்களாலும் வேதப்புத்தகத்துக்கு நிகராக மதிக்கப்படுகிறது. அதில் அவர் சொல்கிறார்:

"எங்கள் காலடியில் உள்ள நிலம் எங்களுடைய மூதாதையரின் சாம்பல் என்பதை நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும். எனில் அவர்கள் நிலத்தை மதிப்பார்கள். இந்த பூமி எங்கள் தாய் என்பதை உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். பூமிக்கு எது நேர்ந்தாலும், அது பூமியின் பிள்ளைகளுக்கும் நேரிடும். நிலத்தின் மீது துப்பும்போது மனிதன் தனது உடம்பின் மீதே துப்பிக் கொள்கிறான்.

எங்களுக்குத் தெரியும் இது: பூமி மனிதனுக்கு உரிமையானதல்ல; மனிதன் பூமிக்கு உரிமையானவன். எங்களுக்குத் தெரியும் இது: ரத்தம் ஒரு குடும்பத்தை ஐக்கியப்படுத்துவது போல எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. பூமிக்கு எது நேர்ந்தாலும் அது பூமியின் பிள்ளைகளுக்கு நேரிடும்.

வாழ்க்கை வலையை நெய்தவன் மனிதனல்ல. அவன் அதில் வெறும் கண்ணி. வலைக்குச் செய்வது எதுவாயினும் அவன் தனக்கே செய்து கொள்கிறான்.

உங்களால் ஆகாயத்தையும், மண்ணின் வெதுவெதுப்பையும் எப்படி வாங்கவும் விற்கவும் முடியும்? இந்த எண்ணமே எங்களுக்கு விரோதமானது. காற்றின் புத்துணர்வும், நீரின் பிரகாசமும் எங்களுக்கு உரிமையானதல்ல என்னும்போது உங்களால் எப்படி அவற்றை வாங்க முடியும்?"

அன்று சியாட்டில் மூப்பன் கேட்ட கேள்வி இன்றும் பொருத்தமானதாகவே தோன்றுகிறது.

- ஆசிரியர்

# தென்பகுதியில் தமிழர்களின் இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ள விக்கியின் கூற்று

## -தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்-

வடக்கில் சிங்கள மக்களைக் குடியமர்த்த இடமளிக்கப்போவதில்லையென்ற விக்னேஸ்வரனின் இனவாதக் கருத்தானது கொழும்பிலும், தெற்கிலும் தமிழ மக்களுக்கு வாழ்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாதென்ற பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

விக்னேஸ்வரன் இக்கருத்தை வாபஸ் பெறவேண்டுமென்றும் இது தொடர்பாக அரசாங்கம் மௌனம் காப்பதையும் கண்டித்து அவ்வியக்கம் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று 'முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதன் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டுமென்ற வழமையான கோரிக்கையை மீறியுள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடமாகான சபையின் முதலாவது கன்னி அமர்வில் உச்சக்கட்டமாக தமிழ் இனவாத நஞ்சைக் கக்கியுள்ளார்.

அதுதான் வடமாகாணத்தில் சிங்கள மக்களை புதிதாக குடியேற்றவோ குடியமர்த்தவோ இடமளிக்கப்போவதில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

அப்படியென்றால் கொழும்பிலும், தென்பகுதியிலும் தமிழ் மக்களைக் குடியேற்ற இடமளிக்கப் போவதில்லையென்ற எதிர்ப்பு இங்கு உருவாகும். அதற்கான பொறுப்பை விக்னேஸ்வரனே ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் இனவாதிகளைப் போன்று சிங்கள இனவாதக் கும்பல்களும் இயங்குகின்றன.

எனவே விக்னேஸ்வரனின் கருத்தை மையமாக வைத்து தமிழர்களுக்கு எதிராக இனவாத மோதலைக் கொழும்பில் ஏற்படுத்தினால் என்ன நடக்கும்? அவ்வாறானதொரு நிலைமை உருவானால் அதற்கான முழுப் பொறுப்பையும் விக்னேஸ்வரனே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சிங்கள மக்களைக் குடியேற்ற இடமளிக்க முடியாது என எப்படிக் கூற முடியும். தற்போது நாவற்குழியில் தொடர் மாடி வீட்டுத்திட்டம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதில் வீடுகளைக் கேட்டு விண்ணப்பங்களை பொது மக்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு அனுப்பி வைப்பார்கள்.

அவ் விண்ணப்பங்களை தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என இன ரீதியாகப் பிரித்து ஆராயப்படமாட்டாது.

எனவே இனவாதத்தை, இன மோதல்களை ஏற்படுத்தக் கூடிய கருத்துக்களை வெளியிடலாகாது. எனவே தனது கருத்தை விக்னேஸ்வரன் வாபஸ் பெற வேண்டும். இல்லாவிட்டால் அதனால் ஏற்படும் அனைத்து இனவாத மோதல்களுக்கும் அவரே பொறுப்பாளியாவார் எனத் தெரிவித்துள்ளார்.

# சுதேச உணவின் முக்கியத்துவம் ஊடகவியலாளர்களுக்கு கருத்தரங்கு

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவதற்கு நச்சுத் தன்மையற்ற உணவின் முக்கியத்துவத்தை பற்றி ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று இன்று நாவின்ன ஆயுர் வேத ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சுதேச மருத்துவத்துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இந்த பயிற்சிக் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு ஆரோக்கியமான சந்ததி மிகப் பெரிய பலமாக அமையும். சரியான ஆயுர்வேத முறைகளை பின்பற்றாமையும் தவறான உணவு பழக்கமும் இன்று நீரிழிவு, சிறுநீரக பிரச்சினை, இதய நோய் உட்பட பல்வேறு நோய்களை தோற்றுவித்துள்ளது. தொற்றுநோய் போல இலங்கையில் அநேகமானவர்களுக்கு இந்நோய்கள் பரவியுள்ளன.

பல தசாப்தங்களாக எமது மூதாதையர் பின்பற்றிய வாழ்க்கை முறைகள் இன்று மாற்றப்பட்டுள்ளது. இதுவே இத்தகைய நோய்கள் ஏற்படுவதற்கான காரணம். இவை தொடர்பாக விழிப்புணர்வு வழங்கும் நோக்குடனேயே இந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என சுதேச மருத்துவத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

# கொழும்பு-கட்டுநாயக்க நெடுஞ்சாலையில் 13 மணி நேரத்திற்குள் 3 மில்லியன் வருமானம்

நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்ட கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மூலம், நேற்று முன்தினம் மாலை 6.00 மணி தொடக்கம் நேற்றுக்காலை 7.00 மணிவரையான காலப்பகுதியில் மூன்று மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் இந்தப் பாதையால் 11 ஆயிரம் வாகனங்கள் பயணித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

25.8 கிலோ மீற்றர் நீளமுள்ள இந்த அதிவேகப் பாதை சீன அரசின் அனுசரணையோடு அமைக்கப்பட்டுள்ளது.

# பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்

## கே.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வேலைத் திட்டங்களை வடமாகாண சபை உருவாக்க வேண்டும். அதேநேரம், வடக்கில் தனியார் காணிகளை மீள அதன் உரிமையாளர்களுக்கு வழங்கி, நியாயமான குடியேற்றத்தை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்று, புலிகள் இயக்கத்தின் முன்னாள் வெளிவிவகார பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையின் கன்னி அமர்வின் போது, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை, எதிர்காலம் நோக்கி சாதக தன்மையை வெளிப்படுத்தியுள்ளது.

நட்பு ரீதியான அணுகுமுறையே தமிழர்களுக்கான எதிர்காலத் தீர்வை நிர்ணயிக்கும்.

தற்போதைய தலைவர்களான ஜனாதிபதியும், வடமாகாண முதலமைச்சரும், இந்த தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கான பொருத்தமானவர்களாக இருக்கின்றனர்.

வடக்கில் உள்ள தனியார் காணிகளை மீள அதன் உரிமையாளர்களுக்கு வழங்கி, நியாயமான குடியேற்றத்தை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்றார்.

# போட்டியாக புத்தெழுச்சி பெற்றுவரும் சிங்கள, தமிழ் தேசியவாதங்கள்

## முத்துக்கிருஸ்ணா சர்வானந்தன் கட்டுரையிலிருந்து



செப்ரெம்பர் 21,2013ல் நடைபெற்ற வட மாகாணசபை தேர்தல்தான், சில வன்முறை சம்பவங்கள், சில எண்ணிக்கையிலான அச்சுறுத்தல்கள், மற்றும் பொது சொத்துக்களின் துஷ்பிரயோகம் என்பன இடம் பெற்றிருந்தாலும்கூட 1977இல் நடந்த நாடாளுமன்ற தேர்தலுக்குப்பின்பு வடக்கில் நடைபெற்ற மிகவும் அமைதி யான தேர்தல் என்று கூறலாம். வட மேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்களில் இதே தினத்தில் நடைபெற்ற தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் அவைகளையும் விட மிகவும் அமைதியான முறையில் முதன் முதலாக நடைபெற்றது இந்த வட மாகாணசபை தேர்தல். அரசாங்க பாதுகாப்பு படை-கள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு(ரி.என்.ஏ) என்பன இணைந்து தேர்தலை அமைதியாக நடத்தியது போற்றப்படவேண்டும்.

இங்கு நாங்கள் 1977, 2004 மற்றும் 2010 நாடாளுமன்றத் தேர்தல்களில் ரி.யு.எல்.எப் - ரி.என்.ஏ பெற்ற வாக்குகளின் பங்கினையும் மற்றும் கிழக்கில் 2012லும் மற்றும் 2013இல் வடக்கில் நடைபெற்ற மாகாண சபை தேர்தல்களில் அவை பெற்ற வாக்குகளின் பங்குகளிலும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றி ஆராய் வோம். குறிப்பாக நாங்கள் 1977 மற்றும் 2012 - 2013 தேர்தல்களின் முடிவுகளை ஒப்பிடுவதிலேயே ஆர்வமாக உள்ளோம், இதற்கான காரணம் இவை அரச மற்றும் அரச சார்பற்ற ஆயுதக்குழுக்களின் இடையூறுகள் இல்லாமல் மிகவும் அமைதியாக நடைபெற்ற தேர்தல்கள் என்பதுதான்.

1977இல் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் வாக்களிப்பு விகிதம் 80யும் கடந்திருந்தது, அம்பாறை 88 விகிதம், மட்டக்களப்பு 87 விகி தம், திருகோணமலை மற்றும் வன்னியில் ஒவ்வொன்றும் 85 விகிதமாகவும் மற்றும் யாழ்ப்பாணத்தில் 81 விகித மாகவும் வாக்களிப்பு இடம் பெற்றிருந்தது.

2004 நாடாளுமன்றத் தேர்தல் களில் வாக்களிப்பு விகிதம் மிக அதிகமாக (80 க்கும் அதிகம்) இருந்த அதேவேளை வடக்கில் அது குறைவடைந்திருந்தது (யாழ்ப்பாணத்தில் 47 விகித மாகவும் வன்னியில் 67 விகித மாகவும் இருந்தது). அது யுத்த நிறுத்த காலத்தில் நடைபெற்றதுடன் எல். ரீ.ரீ.ஈ, ரி.என்.ஏக்கு பகிரங்க ஆதரவு அளித்ததுடன் அதன் வெற்றிக்காக பிரசாரமும் செய்தது. 2010 நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கில் வாக்களிப்பு விகிதம் பரவலாக குறைவடைந்திருந்தது, அம்பாறை 61, திருகோணமலை 58, மட்டக்களப்பு 51, வன்னி 40, மற்றும் யாழ்ப்பாணம் 21 என்ற விகிதங்களில் வாக்களிப்பு இடம்பெற்றிருந்தது.

கிழக்கில் 2012இல் நடைபெற்ற மாகாணசபை தேர்தல்களிலும் மற்றும் 2013இல் வடக்கில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல் களிலும் வாக்களிப்பு விகிதம் அதிகரித்திருந்தது, வன்னி 68, அம்பாறை மற்றும் திருகோணமலை ஒவ்வொன்றிலும் 62, மற்றும் யாழ்ப்பாணத்தில் 60 மற்றும் மட்டக் களப்பில் 59 என்கிற விகிதங்களில் வாக்களிப்புகள் நடைபெற்றிருந்தன. 1977உடன் ஒப்பிடுகையில் வடக்கு மற்றும் கிழக்கில் 84 விகிதமாக இருந்த வாக்களிப்பு விகிதம் 2004ல் 64 விகிதமாகவும் 2010ல் 42 விகித மாகவும் குறைவடைந்திருந்தது, மற்றும் 2012 - 2013இல் அது 62 விகிதமாகவும் அதிகரித்திருந்தது.

1977 நாடாளுமன்றத் தேர்தல்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவான மொத்த செல்லுபடியான வாக்குகளில் 67 விகிதமான வாக்குகளை ரி.யு. எல். எப் - ரி.என்.ஏ கைப்பற்றியிருந்தது ஆனால் 2012 மாகாணசபை தேர்தல் களில் அது 51விகிதமாக வீழ்ச்சி யடைந்திருந்தது. மாறாக தமிழர்கள் சனத்தொகை 1981 க்கும் (71 விகிதம்) 2012க்கும் (73 விகிதம்) இடையில் அந்த மாவட்டத்தில் அதிகரித்திருந்தது. அதேபோல அம்பாறை மாவட்டத்தில் 1977இல் பதியப்பட்ட செல்லுபடியான மொத்த வாக்குகளில் 29 விகித மாக இருந்த ரி.யு.எல்.எப். இனது பங்கு, 2012இல் வெறும் 16 விகித மாக குறைவடைந்திருந்தது, இது அந்த மாவட்டத்தில் தமிழர்களின் சனத்தொகை குறைவடைந்ததும் அதற்கான காரணத்தின் ஒரு பகுதியாகவும் இருக்கலாம், ஏனெனில் 1981இல் 20 விகிதமாக இருந்த தமிழர்களின் எண்ணிக்கை 2012இல் 17 விகிதமாக குறைந்துவிட்டிருந்தது. மற்றும் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் ரி.என்.ஏக்கு கிடைக் கும் முஸ்லிம் வாக்குகள் குறை வடைந்ததுதான் அதற்கான மற்றொரு காரணம் (இதில் குறிப்பிடவேண்டியது என்னவென்றால் 1977இல் முஸ்லிம் இன - மத அரசியற்கட்சி ஒன்று இருக்கவில்லை என்பதுதான்).

திருகோணமலை மாவட்டத்தில் ரி.யு.எல்.எப். - ரி.என்.ஏ வாக்குகளின் பங்கு 1977இல் பதிவான மொத்த செல்லுபடியான வாக்குகளில் 27 விகிதமாக இருந்தது 2012இல் 29 விகிதமாக சற்று உயர்ச்சி அடைந்துள்ளது ஆயினும் அந்த மாவட்டத்தில் 1981ல் 34 விகித மாக இருந்த தமிழர்களின் சனத் தொகை 2012ல் 32 விகிதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது (2012இல் ரி.என்.ஏ பெற்ற வாக்குகளின் விகிதத் துடன் ஒப்பிடுகையில், சனத்தொகை விகிதம் அதிகம்தான்).

வடக்கில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் (அது நிருவாக மாவட்டங்களான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது) ரி.யு.எல்.எப். - ரி.என்.ஏ 1977இல் பதியப்பட்ட செல்லுபடியான மொத்த வாக்குகளில் 72 விகிதத்தை பெற்றிருந்தாலும் 2013இல் அது முரண்பாடாக 84 விகிதத்தை கைப்பற்றியது (வாக்களிப்பு விகிதம் குறைவாக இருந்தபோதிலும் கூட) அதற்கான காரணத்தின் ஒரு பகுதி அங்கு அதிகரித்துள்ள தமிழர்களின் சனத்தொகையாகவும் இருக்கலாம் ஏனெனில் 1981இல் 95 விகிதமாக இருந்த தமிழர்களின் சனத்தொகை 2013இல் 99 விகிதமாக உயர் வடைந்துள்ளது. இதேபோல வன்னி தேர்தல் மாவட்டத்தில் (நிருவாக மாவட்டங்களான மன்னார், முல்லைத்தீவு, மற்றும் வவுனியா மாவட்டங்களை ஒருங்கிணைத்தது) 2013இல் ரி.யு.எல்.எப். - ரி.என்.ஏ பதியப் பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளில் 68 விகிதத்தை கைப்பற்றியிருந்தது.

1977இல் பெற்ற வாக்குகளை இதனுடன் ஒப்பிட்டால் அது வெறும் 54விகிதம் மட்டுமே ஏனெனில் இந்த மாவட்டங்களில் தமிழர்களின் சனத்தொகையின் பிரதான-மாக உயர்வடைந்ததே அதற்கான காரணம், 1981ல் 77விகிதமாக இருந்த தமிழர்களின் சனத்தொகை 2012இல் 87விகிதமாக அதிகரித்திருந்தது.

ஒட்டு மொத்தத்தில் கிழக்கு மற்றும் வடக்கில் ரி.யு.எல்.எப். - ரி.என்.ஏ 1977இல் பெற்ற 57 விகிதமாக இருந்த பதியப்பட்ட செல்லுபடியான மொத்த வாக்குகளின் பெறுமானம், 2013-ல் 50 விகிதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது, அநேகமாக வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் ஒருங்கிணைந்த தமிழர்களின் சனத் தொகையில் ஏற்பட்ட குறைவு தான் இதற்கான காரணம், இந்த மாகாணங்களில் 1981-ல் 69 விகிதமாக இருந்த தமிழர்களின் ஒருங்கிணைந்த குடிசனமதிப்பீடு 2012-ல் 62 விகிதமாக குறைவடைந்துள்ளது, மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1977இல் 87 சதவிகிதமாக இருந்த வாக்களிப்பு விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2012இல் 59 விகிதமாக பெரும் வீழ்ச்சியடைந் திருக்கிறது, விசேடமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981க்கும் (734,474) 2012 க்கும் (583,071) இடையில் சனத்தொகையில் 20.6 சத விகித வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது, ஏனெனில் நாட்டின் இதர பகுதிகளுக்கும் மற்றும் வெளிநாடுகளுக்கும் தமிழ் மக்கள் திரளாக குடியேறியதுதான் இதற்கான காரணம்.

மொத்தமாக ஒப்பிடுகையில், அம் பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ரி.யு.எல்.எப்.- ரி.என்.ஏ க்கான ஆதரவு 1977 மற்றும் 2012 - 2013க்கு இடையில் சரிவடைந்துள்ள அதேவேளை, அதன் ஆதரவு திரு கோணமலை மற்றும் வடக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 1977 மற்றும் 2012 - 2013 க்கு இடையில் அதிகரித்து உள்ளது.

> **வடக்கு மற்றும் கிழக்கில் ரி.என்.ஏ. மற்றும் தமிழ்தேசியவாதம் ஆகியன பெற்றுவரும் புகழுக்கு தான்தான் பங்களிப்பு செய்து வருவதாக கோருவதற்கு மகிந்த ராஜபக்க்ஷவுக்கு சட்டபூர்வமாக உரிமை உள்ளது, அதேபோல ஒவ்வொரு முறையும் ரி.என்.ஏ. தலைவர்கள் பிரபாகரனையும் மற்றும் எல்.ரீ.ரீ யினையும் வீரர்கள் என்று புகழ்வதன் மூலம் தென்பகுதி சிங்கள தேசிய வாதத்துக்கும் ஜனாதிபதி யின் புகழை வளர்க்கவும் பங்களிப்பு செய்கிறார்கள்.**

தமிழ் தேசியவாதம் புத்தெழுச்சி பெற்றுவருகிறது என்பதற்கு 2004 மற்றும் 2010 நாடாளுமன்ற தேர்தல்களுக்கு நேரெதிராக 2012 - 2013 மாகாணசபை தேர்தல்களில் பெற்றுள்ள ஆதரவு ஒரு தெளிவான சாட்சியமாகும். உள்நாட்டு யுத்தத்துக்குப் பின்னர் இலங்கையின் தென்பகுதியில் புத்தெழுச்சி பெற்றுள்ள சிங்கள தேசியவாதத்துக்கு போட்டியாக பழிக்குப் பழிவாங்கும் முயற்சி யாகவே இந்த தமிழ் தேசியவாதம் புத்தெழுச்சி பெற்றுவருவதாக தோன்றுகிறது. ராஜபக்ஷ ஆட்சி, பிரதம நீதியரசர் மீதான குற்ற வியல் பிரேரணை மற்றும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான வெறுப்பு பிரசாரம் மீது மொத்தமாக நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருப்பது (அநேகமாக ஆட்சி யினரால்தான் அது தூண்டிவிடப் படுகிறது) போன்ற என்னதான் தவறுகள் செய்தாலும்கூட பெரும்பான்மை சமூகம், உறுதியாக அவர் பின்னால் நிற்பது போலவே தெரிகிறது. தமிழ் சமூகம் அதன் சொந்த தேசியவாதத்தை முன் னெடுத்துச் செல்வதன் மூலம் சிங்கள தேசியவாதம் மற்றும் ராஜபக்ஷவின் புகழ் என்பனவற்றை எதிர்கொள்வது போலத் தெரிகிறது. ஒரு தவறு மற்றொரு தவறை நியாயப்படுத்த முடியாது, அதாவது கடினமடையும் சிங்கள தேசியவாதத் துக்காக தமிழ் தேசியவாதத்தை கடினமாக்குவதை நியாயப்படுத்த முடியாது, அல்லது அதற்கு எதிர்மறையாக.

ஒவ்வொரு முறையும் ஜனாதிபதி “இந்த நாட்டிலுள்ள அனைத்து பிரதேசங்களில் வாழும் அனை வருக்கும் நான்தான் ஜனாதிபதி” என்று ஒவ்வெருமுறையும் வலியுறுத்தி வருகிறார், அது உண்மைதான் வடக்கு மற்றும் கிழக்கில் ரி.என்ஏ மற்றும் தமிழ் தேசியவாதம் ஆகியன பெற்றுவரும் புகழுக்கு தான்தான் பங்களிப்பு செய்து வருவதாக கோருவதற்கு அவருக்கு சட்டபூர்வமாக உரிமை உள்ளது, அதேபோல ஒவ்வொரு முறையும் ரி.என்.ஏ தலைவர்கள் பிரபாகரனையும் மற்றும் எல்.ரீ.ரீ யினையும் வீரர்கள் என்று புகழ் வதன் மூலம் தென்பகுதி சிங்கள தேசிய வாதத்துக்கும் ஜனாதிபதி யின் புகழை வளர்க்கவும் பங்களிப்பு செய்கிறார்கள். போட்டியிடும் தேசிய வாதங்களால் நாட்டின் நல்லிணக்கத் துக்கு நலன் எதுவும் ஏற்படப் போவ தில்லை. வடக்கு மற்றும் கிழக்கில் ரி.என்.ஏக்கு வளர்ந்து வரும் செல்வாக்கினை எதிர்காலத்தில் உதயமாகப்போகும் ஒரு மிதவாத தேசிய அரசாங்கத்தினால் அடக்கவும் முடியும்.

# தலைமைத்துவத்திலிருந்து விலகுவதாக வாக்குறுதி வழங்கவில்லை



## ஐ.தே.க. தலைவர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து தாம் விலகுவதாக மகா சங்கத்தினரிடம் வாக்குறுதியளிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த 15 ஆம் திகதி தம்முடனான கலந்துரையாடலில் தலைமைத்துவத்திலிருந்து விலகுவது உள்ளிட்ட எட்டு கோரிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஏற்றுக்கொண்டதாக ஐக்கிய பிக்குகள் முன்னணியின் அலோசகர் கிராம்பே ஆனந்த தேரர் உள்ளிட்ட தேரர்கள் அறிவித்தனர்.

ரணில் விக்ரமசிங்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்தே தேரர்கள் இந்த விடயத்தை தெரிவித்தனர்.

இதேவேளை அத்தகைய உறுதிமொழியொன்றை வழங்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற வகையில் தம்மால் செயற்குழுவின் ஐந்து பதவிகளை மாத்திரமே நியமிக்க முடியும்.

இதனைத் தவிர ஜே.ஆர். ஜயவர்தனவின காலத்தில் குறிப்பிட்ட சில அதிகாரங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய தவிசாளருக்கு வழங்கப்பட்ட போதிலும் அது செயற்குழுவின் தீர்மானத்திற்கு அமையவே செயற்படுத்தப்பட்டது என்றார்.

# சுற்றுலாத்துறை செய்தி வலையமைப்பு ஆரம்பம்




(கொழும்பு)

சுற்றுலாத்துறை செய்தி வலையமைப்பை கடந்த வெளிக்கிழமை கொழும்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இலங்கையில் முதற் தடவையாக சுற்றுல்லா கைத்தொழில் சம்மேளனத்தினால் சுற்றுலாத்துறை செய்தி வலையமைபபு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் சிரே'ட அமைச்சர் பி.தயாரத்ன, நீதி அமைச்சர் ரவுப் ஹக்கீம், பொருளாதார அபிவிருதத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோர் உட்பட சுற்றுல்லாதுறை சார்ந்த முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்

இலங்கையின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சுற்றுலாத்துறை செய்தி வலையமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த இணையத்தளத்தின் ஊடாக சுற்றுலா பயணிகளை கவரும் பிரதான இடங்கள் மற்றும் இலங்கையில் சுற்றுலாத்துறை சம்பந்தமான நிகழ்வுகள் போன்றவற்றை அறிய முடியும்.

# 'செலான்' பயணிகள் அட்டை அறிமுகம்




(கொழும்பு)

செலான் வங்கியானது வீசா அங்கீகாரம் பெற்ற ஒரு முற்கொடுப்பனவு அட்டையான செலான் பயணிகள் அட்டையை அண்மையில் அறிமுகம் செய்துள்ளது.

இதனால் வெளிநாட்டு பயணம் என்பது மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளதுடன் மேலும் சிரமம் அற்றதாகவும் தற்போது மாற்றமடைந்துள்ளது.

ஐக்கிய அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண்ஸ், யூரோ, சவூதி அரேபிய ரியால் மற்றும் அவுஸ்திரேலிய டொலர் ஆகிய நாணய அலகுகளில் விநியோகிக்கப்படுகின்ற செலான் பயணிகள் அட்டையானது, உலகெங்கும் உள்ள 30 மில்லியனுக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்களினாலும் 2.2 மில்லியன் விசா அங்கீகாரம் பெற்ற ஏ.ரி.எம். மையங்களிலும் உலகளவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

மிகவும் சிக்கலான தன்மையுள்ள வெளிநாட்டு நாணயததை பணமாக கொண்டு செல்லுதல் மற்றும் ஒரு காலத்தில் மிகவும் விரும்பப்பட்ட பயணிகள் காசோலைகளை எடுத்துச் செல்லல் போன்ற பாரம்பரிய தெரிவுகளை, தனிச்சிறப்புமிக்க இந்தப் பயண வழித்துணை வசதி பிரதியீடு செய்கின்றது. இவையனைத்தும் நேர்த்தியான வடிவிலான பயண அட்டையின் ஊடாக கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்தப் பயண அட்டையின் தொகையை நிரப்பிக் கொள்வதற்காக ஐந்து வெளிநாட்டு நாணயங்களுள் ஒன்றினை தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும் என்பதுடன் உலகின் எப்பாகத்திலும் உடனுக்குடன் பயன்படுத்தவும் முடியும்.

செலான் வங்கியின் தனிப்பட்ட வங்கியியல் பிரிவு சிரேஷட பிரதிப் பொது முகாமையாளரான திஸ்ஸ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## திருமணமாகி 4 ஆவது நாளிலேயே மனைவியைத் தாக்கியவர் கைது

திருமணமாகி நான்காவது நாளில் தனது மனைவியை கொடூரமான முறையில் தாக்கி காயம் ஏற்படுத்திய கணவரை களுத்துறை தெற்கு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களுக்கு கடந்த 22 ஆம் திகதி திருமணம் நடந்துள்ளது. இதன் பின்னர் நான்கு நாள் கழிந்த நிலையில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறை அடுத்து கணவர், மனைவியை கடுமையாகத் தாக்கியுள்ளார். சந்தேக நபரான கணவர் அரச புலனாய்வு பிரிவில் பணியாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் எனக் கூறப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான மனைவி நாகொட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிசிக்சை பெற்று வருகிறார்.

## பாவனைக்குதவாத உணவு விற்பனை 2,697 பேருக்கு எதிராக வழக்கு

பாவனைக்குதவாத உணவு வகைகளை தயாரித்து விற்பனை செய்த 2,697 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு வாரத்தில் நாடளாவிய ரீதியில் 38,291 வர்த்தக நிலையங்களை சோதனைக்குட்படுத்தியதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்போது பாவனைக்கு உதவாத உணவு வகைகள் தயாரிக்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட இடங்கள் கண்டுபிடிககப்பட்டதாக சங்கத்தின் உப செயலாளர் சி.எஸ். முத்துகுட தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை மூலம் 70 இலட்சம் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளதாகவும் இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# சித்த மருத்துவக் கண்காட்சி



கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் சித்த மருத்துவ பீட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மெடி சித்தா கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சியின் ஆரமப நிகழ்வில் எஸ்.பி.திசாநாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் கலாநிதி கே.கோவிந்தராஜன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

திருகோணமலை உட்துறைமுக வீதியிலுள்ள இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கண்காட்சி, சித்த மருத்துவ முறைகள், முன்னோர்கள் பயன்படுத்திய மருந்து உபகரணங்கள், அறுவை சிகிச்சையின் முன்னோடியாக விளங்கிய சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்பட் உபகரணங்கள், நீர் சுத்திகரிப்பு முறைகள், நரம்பு குருதிச் சுற்றோட்டம் போன்ற பல துறைகளில் இங்கு காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# தேசிய விசதடுப்பு வாரம் இலங்கையில் பிரகடனம்




நேற்றுமுன்தினம் தொடக்கம் எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி வரை தேசிய விச தடுப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆயிரக்கணக்கான மக்கள் உடலில் விசம் ஏறுவதால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விச தடுப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர் உடம்பில் விசம் ஏறுவதால் மருத்துவ்மனையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவர்களில் சுமார் ஆயிரத்து 500 பேர் உயிரிழக்கின்றனர். கிருமிநாசினிகளினால் பாதிக்கப்படுபவர்களின் தொகையே மிக அதிகமாக காணப்படுகிறது. கிருமிநாசினிகளினால் பாதிக்கப்பட்டு சுமார் 60 ஆயிரம் பேர் ஆண்டுதோறும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர் என தேசிய நஞ்சியல் மற்றும் விசதரவுகள் நிலையத்தின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் வருண குணதிலக்க தெரிவித்துள்ளார்.

மருந்துகள் மற்றும் வேறு வழிகளில் விசம் உட்செல்வதால் சுமார் 20 ஆயிரம் பேரும் பாம்பு தீண்டுவதன் காரணமாக சுமார் 40 ஆயிரம் பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர் என தேசிய நஞ்சியல் மற்றும் விச தரவுகள் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

## கொள்ளைகளுடன் தொடர்புடைய இராணுவ வீரர் உட்பட 4 பேர் கைது

குருணாகல் மாவட்டத்தில் வீடுகள் மற்றும் ஏனைய இடங்களில் நடந்த பல கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய இராணுவ வீரர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இராணுவ வீரர் இப்பாகமுவ பாண்கொல்ல இராணுவ முகாமில் கடமையாற்றி வருபவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து ரி 56 ரக துப்பாக்கிகளுக்கு பயனபடுத்தப்படும் தோட்டாக்கள் பயன்டுத்தக் கூடிய துப்பாக்கி, நவீன மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் வாரியபொல பிரதேசத்தில் பழங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருபவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கட்டுபொத்த என்ற இடத்தில் பொலிஸார் சோதனை சாவடியை அமைத்து வாகனங்களை பரிசோதித்து கொண்டிருந்தபோது அந்த வழியாக சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றை நிறுத்த முயற்சித்துள்ளனர். இதனையடுத்து அதனை பின் தொடர்ந்த பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்து நடத்திய விசாரணைகளின் பின்னர் ஏனையோர் கைது செய்யப்பட்டதாக கட்டுபொத்த பொலிஸார் கூறினர்.



காரைநகர் கருங்காலி ஐயனார் தேவஸ்தான பரிபாலன சபையால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 19 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், வடமாகாண பிரதிக்கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும், கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம். (150)

# கலை இலக்கியப் பணிக்கான விருதுகள்

# பொருத்தமானவர்களுக்கு வழங்கவேண்டும்

## -கிளிநொச்சி சமூக அமைப்புக்கள் கோரிக்கை-

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆண்டு தோறும் நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் கலாசார விழா நடாத்தப்பட்டு கலை, இலக்கியம், சமூகப் பணி என பல்வேறு துறைகளில் சேவை செய்தவர்களுக்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒவ்வொரு பெயர்களில் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகம் வருடாந்தம் தனது கலாசார விழாவில் கரை எழில் எனும் பெயரில் மேற்படி துறைகளில் சேவையாற்றியவர்கள் என சிலர் இனம் காணப்பட்டு அவர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்து வருகின்றனர். ஆனால் இந்த விருதுக்காக தெரிவு செய்யப்படுபவர்கள் தொடர்பில் காலத்திற்குக் காலம் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகிறது.

அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் என ஒரு சிலர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விருதுகள் வழங்குவதன் மூலம் விருது மீதான அவநம்பிக்கையினை மக்களிடம் ஏற்படுத்தி வருகிறது.

எனவே கலை, இலக்கிய, சமூகப்பணி என விருது வழங்கும் துறைகளில் பொருத்தமான பணியாற்றியமைக்கான தேர்ச்சி மிக்க குழுத் தீர்மானத்திற்கு அமைவாக விருதுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்படல் வேண்டும் என்பது கிளிநொச்சி மாவட்ட சமூக அமைப்புகளின் வேண்டுகோளாக உள்ளது.

எனவே வருங்காலங்களில் விமர்சனங்களுக்குரியவர்களுக்கு விருதுகளை வழங்கி விருது மீதான நம்பிக்கையீனத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தாமல் பொருத்தமானவர்களுக்கு வழங்குமாறும், உரிய தரப்பினர்கள் இதனை கருத்தில் எடுக்குமாறும் சமூக அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (29)

# நூலகங்களுக்கு விருது

(யாழ்ப்பாணம்)

2012 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத செயற்றிட்டங்களை சிறப்பாக நடாத்தி அதனை ஆவணப்படுத்தியமைக்காக ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனலைதீவு, நாரந்தனை பொது நூலகங்கள் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்கான விருதுகள் இன்று கொழும்பு ஸ்ரீலங்கா பவுண்டேசன் மண்டபத்தில் கல்வி சேவைகள் அமைச்சர் தலைமையில் நடைபெறும் தேசிய வாசிப்பு மாத தேசிய விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன.

# கடலுக்குள் வீழ்ந்தது ரெலிகொம் தூண்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து தீவகத்துக்கான ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தொலைத்தொடர்பு கம்பங்கள் பண்ணை பால வீதியின் மருங்கில் நாட்டப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த மழை காரணமாக இக்கம்பங்கள் சில முறிந்து கடலினுள் வீழ்ந்துள்ளன. எனினும் இதனை மேற்படி நிறுவனம் அப்புறப்படுத்தவில்லை மக்கள் தெரிவிக்கின்றனர். (சி)

# பண்ணை வீதியில் விபத்துக்கள் அதிவேக பயணமே காரணம்

## -பொதுமக்கள் சுட்டிக்காட்டு-

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை வீதியிலிருந்து அல்லைப்பிட்டி வரையான வீதியில் அதிகளவான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதற்கு அதிவேக பயணமும் கவனமின்மையுமே காரணம் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பண்ணை வீதியின் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு கற்களை உடைத்துக் கொண்டு அதிவேகமாக வரும் வாகனங்கள் கடலினுள் பாய்ந்து விபத்துக்களுக்கு உள்ளாகின்றன.

மேலும் வாகன சாரதிகள் மது போதையுடன் வாகனங்களை செலுத்திச் செல்வதால் பாதிக்கப்படுவது வாகன சாரதி மட்டுமல்லாது பின்னால் வரும் வாகனங்களும் விபத்துக்களை சந்திக்க நேரிடுவதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்விபத்துக்களைத் தடுப்பதற்கு ஊர்காவற்றுறை பொலிஸாருடன் இணைந்துவாகன சாரதிகள் சிந்தித்து வீதி நடைமுறைகளை கடைப்பிடிக்கவேண்டும் . வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இவ்வீதியில் வேகக் கட்டுப்பாட்டு அறிவுறுத்தலை குறிக்கும் குறியீட்டை அமைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கும் மக்கள் புனரமைக்கப்படாத பண்ணை வீதிப்பகுதியை உரிய வகையில் செப்பனிட வேண்டும் எனவும் இது தொடர்பாக உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (சி)

# மின்சார சபையின் புதிய கட்டடம் திறக்கப்படுமா?

(வடமராட்சி)

இலங்கை மின்சார சபையினால் பருத்தித்துறை பகுதிக்காக நிறுவப்பட்ட புதிய கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையிலும் இதுவரை திறந்து வைக்கப்பட வில்லை.

புதிய கட்டடம் பருத்தித்துறை கல்லூரி வீதியில் அமைந்துள்ளது. தற்போது மின்சார சபை கரவெட்டி முடக்காடு பகுதியில் அமைந்துள்ளது.

இதனால் பருத்தித்துறை பகுதி மக்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் கரவெட்டிக்கு வந்து முறைப்பாடு செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

மின்சார சபை உயரதிகாரிகள் மக்களின் மின்சார தேவைகளை கருத்தில் கொண்டு இக்கட்டடத்தை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (109)

# பொன்விழா நடத்த ஏற்பாடு

(பருத்தித்துறை)

அல்வாய் பாரதிதாஸன் சனசமூக நிலையம் 2014 ஆம் ஆண்டு பொன்விழாவை நடத்தவுள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை நிலையம் மேற்கொண்டு வருகிறது. சனசமூக நிலையத்தின் புலம் பெயர்ந்த அங்கத்தவர்கள் இதற்கான நிதியை சேகரித்து அனுப்புவதாக உறுதியளித்துள்ளதாக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (109)

# முரசின் இன்றைய பலன்



(29.10.2013 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி.மக நட்சத்திரம் மு.இ 10.29 வரை பின் பூரம் தசமித்திதி, சித்தநாமயோகம்

இராகுகாலம 03.03- 04.33 வரை. சுபநேரம 10.33- 12.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** வாழ்வெழுச்சித்திட்டத்தின் கீழ் உதவி பெற்றதால் மகிழ்ச்சி, விவாகம் செய்து வைத்த தரகுப்பணம் கொடாமையினால் காவல்துறை சென்று முறையிட முயற்சி.

**ரிஷபம்** விளம்பரம் மூலம் வாகனம் கொள்வனவு செய்து பாவனை பற்றிய நம்பிக்கையீனத்தால் அச்சமடைதல், அனுமதிக்காக அலைந்ததில் தேகநலம் பாதிக்கப்படல்.

**மிதுனம்** நிறைவு நிகழ்வுகளில் பங்குபற்றி அழைப்பிதழ் வருதல், பணம் கொண்டுவருகையின் போது திருடர் பின் தொடர்பு பற்றிய அச்சம்.

**கடகம்** சுபகாரியம் நடந்த இரவில் ஆபரணங்கள் திருட்டுப்போனதால் கவலை, குழந்தைப்பேற்றுக்காக சிசேரியன் செய்ய நாட்குறித்தல்.

**சிம்மம்** புதிய மனை அமைக்கும் நோக்கில் காணி துப்புரவு செய்யும் முயற்சியில் இறங்கல், மாமனின் கருணையால் புதிய வாகனம் விலைக்கு வாங்குதல்.

**கன்னி** கடனுக்கு கொடுத்த பணத்தைப்பெற அலைச்சலும் அகால போஜனமும் தக்கவைத்தல், தொலைபேசி மூலம் வெளிநாட்டில் உள்ள மகளுக்கு சமையல் பற்றி சம்பாஷணை.

**துலாம்** நீரிழிவு காரணமாக நீண்ட நாட்களாக புண் மாறாமல் வருந்துதல், பரீட்சையில் சிறந்த பெறுபேறு கிட்டுவதால் உயர் கல்விபெற அயல்நாட்டுயோகம் ஏற்படல்.

**விருச்சிகம்** வாக்குவாதம் கைகலப்பாக மாறி எதிரித்தன்மை உருவாகுதல், ஒலிபெருக்கியின் சத்தத்தினால் வியாபார விற்பனை பாதிக்கப்படல்.

**தனுசு** நிரந்தர வேலை வாய்ப்புக்கோரி உண்ணாவிரதம் இருக்க ஆட்களைத் திரட்டல், காலாவதியான மருந்து வில்லைகளைப்பாவிக்க முயன்று தேகநிலை பாதிக்கப்படல்.

**மகரம்** மனைவியுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டு பிரிந்து செல்ல முயற்சி எடுத்தல், வரன்தேட பத்திரிகையில் விளம்பரம் செய்ததால் காரியம் கைகூடுதல்.

**கும்பம்** விவாகரத்துப்பெறாமலே மறுமணம் செய்ய முயற்சித்ததால் காரியம் கைகூடும் நேரத்தில் கெட்டு விடுதல், தொழில்பெற அரசியல்வாதிகளைச் சந்தித்து ஆவணங்கள் கையளிக்க முயற்சி எடுத்தல்.

**மீனம்** சாகச விளையாட்டில் ஈடுபட்டதால் அங்கப்பழுதேற்படும் ஆபத்துவரல், சொத்துப்பிரச்சினை தீர மத்தியஸ்தர் சபை கைவிரித்து விட்டதால் நீதிமன்றை நாட வெளிக்கிடல்.

# டெஸ்டில் வில்லியர்ஸ் முதலிடம்



(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியலில் தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸ் முதலிடத்தைப் பிடித்துள்ளார். டுபாயில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் சதம் (164 ஓட்டங்கள்) விளாசியதன் மூலம், சக நாட்டவர் அம்லாவை 2ஆவது இடத்திற்கு தள்ளினார். டிவில்லியர்ஸ் மொத்தம் 909 புள்ளிகளுடன் முதலிட அரியணையில் ஏறியிருக்கிறார். இது அவரது அதிகபட்ச தரவரிசை புள்ளியாகும்.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் இடத்தை ஆக்கிரமித்திருந்த அம்லா, மனைவிக்கு குழந்தை பிறந்ததால் பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் விலகினார். இதனால் தான் அவர் முதலிடத்தை பறிகொடுக்க வேண்டியதாகிவிட்டது. இதே டெஸ்டில் இரட்டை சதம் அடித்த தென்னாபிரிக்க கப்டன் ஸ்மித் 7 இடங்கள் எகிறி 8ஆவது இடத்தை எட்டியுள்ளார். முதல்10இற்குள் அவர் நுழைவது 2012ஆம் ஆண்டு ஏப்ரலுக்கு பின்னர் இதுவே முதல முறையாகும். பாகிஸ்தான் கப்டன் மிஸ்பா உல்ஹக் ஒரு இடம் முன்னேறி தனது சிறந்த நிலையாக 6ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளோர் விபரம் வருமாறு:, டி. வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), அம்லா (தென்னாபிரிக்கா), சந்திரபோல் (மே.தீவுகள்), சங்கக்கார (இலங்கை), மைக்கல் கிளார்க் (அவுஸ்ரேலியா), மிஸ்பா உல் ஹக் (பாகிஸ்தான்), புஜாரா (இந்தியா), ஸ்மித் (தென்னாபிரிக்கா), யூனிஸ்கான் (பாகிஸ்தான்), இயன் பெல் (இங்கிலாந்து)

பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் முதல் 10 இடங்களில் எந்த மாற்றமும் இல்லை. தென்னாபிரிக்காவின் ஸ்ரென், பிலாண்டர் முதல் இரு இடங்களையும், இலங்கை வீரர் ரங்கண ஹேரத் மூன்றாவது இடத்திலுமுள்ளனர்.

# டெஸ்டில் 100ஆவது வெற்றி

டெஸ்ட் அரங்கில் 100ஆவது வெற்றியை பதிவு செய்த தென்னாபிரிக்க அணிக்கு, அந்நாட்டு கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி ஹாரூண் லோர்கட் பாராட்டு தெரிவித்தார்.

போர்ட் எலிசபெத் நகரில், 1889இல் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான போட்டி மூலம், தென்னாபிரிக்க அணி முதன்முதலில் டெஸ்ட் அரங்கில் காலடி வைத்தது. கடந்த 1970இல் தென்னாபிரிக்க அரசின் இனவெறி கொள்கையை எதிர்த்த சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,), சர்வதேச போட்டிகளில் விளையாட தென்னாபிரிக்காவுக்கு தடைவிதித்தது. பின், 1991இல் இந்தத் தடை நீக்கப்பட்டு, மீண்டும் சர்வதேச போட்டிகளில் விளையாட அனுமதி வழங்கியது.

இதனையடுத்து 1992இல் மே.தீவுகளுக்குச் சென்ற தென்னாபிரிக்கா, பிரிட்ஜ்டவுனில் முதன்முறையாக டெஸ்ட் போட்டியில் விளையாடியது. சமீபத்தில் டுபாயில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில், தென்னாபிரிக்க அணி இனிங்ஸ் மற்றும் 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இது, தடை நீக்கப்பட்டதற்கு பின் (1991), தென்னாபிரிக்காவுக்கு கிடைத்த 100ஆவது டெஸ்ட் வெற்றி. இதில், ஸ்மித் தலைமையிலான அணி 51 வெற்றிகளை பதிவு செய்தது. குரேன்யே (27 வெற்றி), போலக் (14 வெற்றி), வெசல்ஸ் (5 வெற்றி), பௌச்சர் (2 வெற்றி), கலிஸ் (ஒரு வெற்றி), கிறிஸ்டன் (ஒரு வெற்றி), பிரின்ஸ் (ஒரு வெற்றி) ஆகியோரது தலைமையிலான தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

இவ் வெற்றி குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் (சி.எஸ்.ஏ.,) தலைமை அதிகாரி ஹாரூண் லோர்கட் கூறுகையில், தென்னாபிரிக்க அணியின் 100ஆவது டெஸ்ட் வெற்றி, ஒரு புதிய மைல்கல். தற்போதுள்ள ஸ்மித் தலைமையிலான அணி, இதுவரை விளையாடிய தென்னாபிரிக்க டெஸ்ட் அணிகளில் சிறந்த அணியாக வலம் வருகிறது. இந்த அணியின் வெற்றிநடை தொடர்ந்து, நிறைய சாதனைகள் படைக்க வாழ்த்துகிறேன் என்றார்.

# தலையைத் தாக்கியது பந்து


## தென்னாபிரிக்க உள்ளூர் வீரர் பலி

(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உள்ளூர் கிரிக்கெட் போட்டியில், டார்ரின் ராண்டால் (வயது-32) என்ற உள்ளூர் கிரிக்கெட் வீரர் துடுப்பாடிக் கொண்டிருந்தபோது தலையில் பந்து வேகமாக தாக்கியது. இதில் நிலைகுலைந்த அவர் மைதானத்திலேயே சுருண்டு விழுந்தார்.உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ராண்டால் மறைவுக்கு தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளது.

# செரீனா சம்பியன்




(இஸ்தான்புல்)

பெண்கள் சம்பியன்ஷிப் ரென்னிஸ் போட்டியில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

8 முன்னணி வீராங்கனைகள் இடையிலான பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி துருக்கியில் நடைபெற்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சீனாவில் லீநாவை எதிர்கொண்டார்.

இதில் 6-2 என்ற செட் கணக்கில் லீநா வெற்றிபெற்று முன்னிலை பெற்றார். பின்னர் சுதாகரித்துக் கொண்ட செரீனா ஆக்ரோஷமாக ஆடி அடுத்தடுத்து இரு செட்களையும் வென்று கிண்ணத்தை வென்றார். இறுதியில் செரீனா வில்லியம்ஸ் 2-6, 6-3, 6-0 என்ற செட் கணக்கில் வென்று வாகை சூடினார். ஒரு ஆட்டத்திலும் தோல்வியைச் சந்திக்காத செரீனாவுக்கு 13 கோடி பரிசுத்தொகையாக கிடைத்தது.



சுவிட்சர்லாந்தின் பாசல் நகரில் நடைபெற்ற சுவிஸ் இன்டோர்ஸ் ரென்னிஸ் இறுதியப் போட்டியில் சுவிஸின் ரோஜர் பெடரர், ஆர்ஜென்ரீனாவின் மார்ட்டின் டெல்போர்ட்டோவுடன் மோதினார். இதில் டெல்போர்ட்டோ 7-6, 2-6, 6-4 என்ற நேர்செட்டில் பெடரரை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றினார். கிண்ணத்துடன் டெல்போர்ட்டோ நிற்பதைக் காணலாம்.

# எச்சரிக்கை

(லண்டன்)

கால்பந்தாட்டத்தில், இன ரீதியாகவும் பாகுபாடான தன்மையுடனும் செயல்படுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் செப் பிளற்றர் தெரிவித்துள்ளார்.

அப்படியாக செயல்படும் அணிகளை வெளியேற்றுதல் மற்றும் புள்ளிகளைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணிகளுக்கு அபராதம் விதித்தல் அல்லது இரசிகர்கள் அற்ற நிலையில் போட்டிகளை நடத்துவது போன்ற தண்டனைகள் போதுமானதாக கருத முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

லண்டனில் இடம்பெற்ற கால்பந்தாட்ட சங்கத்தின் 150ஆவது வருடாந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

இதில் ஒவ்வொரு நாடுகளுடைய கால்பந்து சம்மேளனத் தலைவர்கள் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உலக கிண்ண ருவென்ரி-20 அட்டவணை

ICC WORLD TWENTY20
Bangladesh 2014

(டுபாய்)

பங்களாதேஷில் அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

2012, ஒக்ரோபர் 8ஆம் திகதி வரையிலான உலக ருவென்ரி-20 தரவரிசையில் முதல் 8 இடத்தை பிடித்த அணிகள், சூப்பர் 10 சுற்றில் நேரடியாக இடம் பெற்றுள்ளன. மீதமுள்ள 2 அணிகளை தேர்வு செய்வதற்கான தகுதி சுற்றுப் போட்டியில் (மார்ச் 16,21) மொத்தம் 8 அணிகள் இரு பிரிவுகளாக லீக் ஆட்டங்களில் மோதுகின்றன. இதில் பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகளும் அடங்கும்.

இரு பிரிவிலும் முதல் இடத்தை பிடிக்கும் அணிகள் சூப்பர் 10 சுற்றுக்கு முன்னேறும். மார்ச் 21ஆம் திகதி மாலை இடம்பெறும் முதல் லீக் ஆட்டத்தில் இந்தியா , பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இறுதிப் போட்டி ஏப். 6ஆம் திகதி நடக்க உள்ளது. எல்லா போட்டிகளும் சிட்டகொங், டாக்கா, சைலெட் மைதானங்களில் நடைபெறும். இதே திகதிகளில் மகளிர் ருவென்ரி-20 உலக கோப்பையும் இடம்பெறவுள்ளது. அதில் 10 அணிகள் பங்கேற்கின்றன.

சூப்பர் 10 சுற்றில் (ஆண்கள் பிரிவு) இடம் பெற்றுள்ள அணிகள் : பிரிவு 1: இலங்கை, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, தகுதி அணி பி1. பிரிவு 2: இந்தியா, பாகிஸ்தான், மே.தீவுகள், அவுஸ்ரேலியா, தகுதி அணி ஏ1.


# வென்றது பார்சிலோனா



(பார்சிலோனா)

ரியல் மட்ரிட் அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்துத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, ரியல் மட்ரிட் அணிகள் மோதின. இதன் முதல் பாதியின் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் (19ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மட்ரிட் அணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. விறுவிறுப்பான இரண்டாவது பாதியில் பார்சிலோனா அணிக்கு அலெக்ஸ் (78ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். ரியல் மட்ரிக் அணியின் ஜெஸ்சி ஸ்டாப்பேஜ் நேரத்தில் (90ஆவது) ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார். முடிவில், பார்சிலோனா அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



# இன்று அணித் தேர்வு சகீர்கானுக்கு வாய்ப்பு

மேற்கிந்தியத்தீவுகளுடன் இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி இன்று தேர்வாகவுள்ளது. இதில் சகீர்கான் அணியில் இடம்பிடித்துக்கொள்ளக்கூடிய அதிக வாய்ப்பிருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்களிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கிந்தியத்தீவு, இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் கொல்கத்தா (6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை), மும்பை (14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை) இடம்பெறவுள்ளது. இப்போட்டிக்கான இந்திய அணி இன்று தேர்வாகவுள்ளது. இதில் உள்ளூர் போட்டியில் சிறப்பாக பந்து வீசி வரும் சகீர்கான் மீண்டும் இந்திய அணியில் இடம்பிடித்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருப்பதாக கிரிக்கெட் சபை வட்டாரத்தை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விளையாட்டு செய்திகள்

# முரளி கிண்ண ருவென்ரி-20 வெளியானது போட்டி அட்டவணை

## நவம்பர் முதலாம் திகதி போட்டிகள் ஆரம்பம்




பத்திரிகையாளர் சந்திப்பின்போது...

(கொழும்பு)

முரளி நல்லிணக்க கிண்ண கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அத்தியாயம் வடபகுதியின் ஐந்து இடங்களில் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

யுத்தம் ஓய்ந்துள்ள இக்காலப் பகுதியில் சமூக ஒற்றுமையையும் நட்புறவையும் கட்டியெழுப்பும் நோக்கில் 20 அணிகள் பங்கேற்கும் முரளி நல்லிணக்க கிண்ண ருவென்ரி-20 போட்டிகள் அமைகின்றன.

கடந்த வருடம் போன்றே இவ்வருடமும் 12 கனிஷ்ட ஆண்கள் அணிகளும், எட்டு மகளிர் (23 வயதின் கீழ்) அணிகளும் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டிகள் யாழ்ப்பாணம், ஒட்டுசுட்டான், [illegible]ங்குளம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய ஐந்து இடங்களில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிக்கு போர்ச்சூன் ஒல்,எம்.ஏ.எஸ்., கியா மோட்டார்ஸ், அக்வா.ஃப்ரெஷ், இலங்கை காப்புறுதி நிறுவனம் ஆகிய பிரதான அனுசரணையை வழங்குகின்றன. ஐந்து நாட்கள் இடம்பெறவுள்ள இப்போட்டிகள் முரளி நற்பண்பு மன்றத்தினாலும் ரெட்டொட் டுவர்ஸ் நிறுவனத்தினாலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது.

இவ்வருடம் பங்குபற்றும் அணிகள்

குழு சி யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ள அணிகள்:

யாழ். கூட்டுப் பாடசாலைகள் அணி, மன்னார் - வவுனியா கூட்டுப் பாடசாலைகள் அணி, பம்பலப்பிட்டி புனித பேதுருவானவர் கல்லூரி, அநுராதபுரம் மத்திய கல்லூரி.

குழு டி ஒட்டுசுட்டான் மைதானத்தில் மோதவுள்ள அணிகள்: முல்லைத்தீவு கூட்டுப் பாடசாலை அணி, காலி றிச்மண்ட் கல்லூரி அணி, கட்டுநேரிய புனித செபஸ்தியார் கல்லூரி அணி, ஊவா மாகாண [illegible]டுப் பாடசாலை அணி.

குழு ஈ. கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் மோதவுள்ள அணிகள்:

கிளிநொச்சி கூட்டுப் பாடசாலை அணி, மட்டக்களப்பு -திருகோணமலை கூட்டுப் பாடசாலை அணி, கண்டி திரித்துவ அணி, கிரிக்கெட் சீனிகம அணி.

23 வயதுப் பிரிவு பெண்கள்

குழு ஏ மாங்குளம் ம.வி. மைதானத்தில் மோதவுள்ள அணிகள்:

சீனிகம மகளிர் அணி, கலம்போ கோல்ட்ஸ் மகளிர் அணி, கிழக்கு மாகாண மகளிர் அணி.

குழு பி வவுனியா மகாவித்தியாலய மைதானத்தில் மோதவுள்ள அணிகள்

வடமாகாண மகளிர் அணி, சக்தி மகளிர் அணி, இராணுவ மகளிர் அணி, வடமத்திய மாகாண அணி ஆகிய அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டி தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இதில் முத்தையா முரளிதரன், மஹேல ஜெயவர்த்தன, சங்கக்கார ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டிகளின்போது மூன்று வீரர்களின் ஆற்றல்கள் இனங்காணப்பட்டதாகவும், தற்போது மேலும் ஒரு வீரரிடம் (ரீ பிரியலஷன்) வேகப்பந்து வீச்சு ஆற்றல் இருப்பதைக் காண முடிந்ததாகவும் முன்னாள் இலங்கை அணியின் தலைவரும் நற்பண்பு மன்றத்தின் அறங்காவலர்களில் ஒருவருமான மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இப்போட்டிகள் வடக்கு கிழக்கில் கிரிக்கெட் அபிவிருத்தி அடைவதற்கு உதவும் எனவும் அவர் தெரிவித்தார்.

2012 முரளி நல்லிணக்கக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட்வேர்ட் எடின், ரிஷாந்த் ரியூடர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஜே.சஞ்சீவன் ஆகியோரின்ஆற்றல்கள்இனங் காணப்பட்டு மூன்றாம் பிரிவு கழக மட்டப் போட்டிகளில் அவர்கள் தற்போது விளையாடி வருகின்றனர்.

இவ்வருடமும் இன்னும் சில வீரர்களின் ஆற்றல்கள் முரளி நல்லிணக்க கிண்ண போட்டி களின்போது இனங்காணப்படலாம் என ஏற்பாட்டாளர்கள் கருதுகின்றனர்.

பல்வேறு பின்புலங்களைக் கொண்ட இலங்கையின் இளம் வீரர்களை ஓரிடத்திற்குக் கொண்டுவரும் ஓர் உன்னத சுற்றுப் போட்டியாக இது அமைகின்றது. அவர்கள் தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ள இதன் மூலம் வழிவகுக்கப்பட்டுள்ளது என முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

கடந்த வருடம் இப்போட்டிகள் பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்ததுடன் அவர்கள் மத்தியில் பிரபல்யமும் அடைந்தது. அப்போட்டிகளை சனக்கூட்டம் கண்டுகளித்ததுடன் இப்போட்டிகள் தொடரப்பட வேண்டும் என அனைவரும் எதிர்பார்த்தனர்.. எனவே, இவ்வருடமும் போட்டிகளை நடாத்த நாங்கள் முடிவெடுத்தோம் எனவும் முரளிதரன் மேலும் குறிப்பிட்டார்.

# வென்றது ஹென்றிஸ், ஞானமுருகன்

(உரும்பிராய்)

யாழ்ப்பாணத்துச் சமர் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியில் இளவாலை ஹென்றிஸ் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் அணிகள் வெற்றிபெற்றன.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்ட கால்ப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்ப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை நடத்தி வருகின்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 64 அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப்போட்டியில் 3 சுற்றுக்கள் விலகல் முறையில் நடைபெற்று தற்போது 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி 8 அணிகளுக்குமிடையில் நான்காம் சுற்றுப் போட்டிகள் லீக் முறையில் கடந்த சனிக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன.

முதலாவது போட்டியில் யாழ். றெட் றேஞ்சர்ஸ் அணியினை எதிர்த்து இளவாலை ஹென்றிஸ் அணி மோதியது. இப்போட்டியில் இளவாலை ஹென்றிஸ் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியினை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதியது. இப்போட்டியில் ஞானமுருகன் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (48)



அரச அலுவலர்களுக்கிடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்த யாழ். செயலக அணியைக் காணலாம்.

# இறுதிக்கு தெரிவான அணிகள்

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு கரவெட்டி மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரி சங்கத்தினால் பிரதேச செயலக பணியாளர்களுக்கான அதிபர் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடர் கடந்த வெள்ளிக்கிழமை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 16 பிரதேச செயலக அணியுடன் யாழ். மாவட்ட செயலக அணியும் மோதின. இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதியில் கரவெட்டி பிரதேச செயலக அணியும், மருதங்கேணிப் பிரதேச செயலக அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கரவெட்டி பிரதேச செயலக அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் இரு அணிகளும் முதலிரு செட்களை கைப்பற்றியிருந்தது. இதனால் வெற்றியாளர்களைத் தீர்மானிக்கும் இறுதி செட்டில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதின. இறுதியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# விபுலானந்தன் நினைவு கூடைப்பந்து இறுதியில் மோதும் அணிகள்

விபுலானந்தன் நினைவுக் கிண்ண கூடைப் பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரி அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் அமரர் விபுலானந்தன் நினைவுக் கூடைப்பந்தாட்டத் தொடர் கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வந்தது. இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல பாடசாலை அணிகள் பங்குகொண்டன.

விலகல் முறையில் இடம்பெற்ற இப்போட்டித் தொடர் ஆண், பெண் என இருபாலாருக்கும் இடையில் இடம்பெற்றது.

ஆண்கள் பிரிவின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும்மோதின. ஆரம்பத்தில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்று வந்தன. இருப்பினும் இடைவேளையின் பின்னர் யாழ். மத்திய கல்லூரியின் ஆதிக்கமே அதிகரித்தது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 49-29 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். இந்துக் கல்லூரி அணி 72-27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின.விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 32-28 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் சுன்னாகம் இராமநாதன் பெண்கள் கல்லூரி அணியும், யாழ். திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலை அணியும் மோதின. இதில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணி 26-23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.






# வடக்கிலிருந்து முஸ்லிம்கள் பெருந்திரளாக வெளியேற்றப்பட்டதன் 23ஆவது ஆண்டு நிறைவு

**——— கலாநிதி றிபாய் நலீமி கட்டுரையிலிருந்து.**



வடமாகாணத்தைச் சேர்ந்த முஸ்லீம்கள் தங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற அந்த இருண்ட நாட்களை இன்னமும் தெளிவாக நினைவில் கொண்டுள்ளார்கள். அது 1990 ஒக்ரோபர் மாதக் கடைசி, சில மணி நேரக் காலக்கெடுவுக்குள் தங்கள் சொந்த வீடுகளையும் சொத்துக்களையும் விட்டு உடனடியாக வெளியேறும்படி திடீரென கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். எந்தவிதமான பெறுமதி வாய்ந்த பொருட்களையும் தங்களுடன் எடுத்துச் செல்லக்கூடாது என அவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டார்கள். அவர்கள் கஷ்டப் பட்டு உழைத்து தேடிய தங்கள் பணத்தையோ அல்லது நகைகளையோ தங்களுடன் எடுத்துச் செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அவர்கள் தங்கள் சொத்துக்களையோ அல்லது உடமைகளையோ விற்பதற்கும் அவர்கள் அனு மதிக்கப் படவில்லை. தங்கள் சொந்தக் கிராமங்களைவிட்டு வெறுங்கையுடன் செல்லும்படி அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டார்கள். உடுத்த உடையுடனே தாங்கள் பிறந்த இடங்களை விட்டு அவர்கள் கட்டாயப்படுத்தி வெளியே தள்ளப்பட்டார்கள். நவீன நாகரிக உலகம் என்று அழைக்கப்படும் இந்த உலகத்தில்தான் இது நடைபெற்றது.

சுதந்திரப் போராட்டம் என்ற பெயரின் கீழ்த்தான் இது நடத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட இந்த அப்பாவி மக்களின் தாங்கமுடியாத துன்பங்களையும் மற்றும் கஷ்டங்களையும் கூறும் உருக்கமான உண்மை வரலாறுகள் மற்றும் கதைகள் யாவும் நிபுணத்துவம் வாய்ந்த வகையில் இன்னமும் ஆவணப்படுத்தப்படவில்லை. பாதிப்புக்கு உள்ளான இந்த அப்பாவிகளின் கதறல், இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோரின் காதுகளுக்கும் மற்றும் இதயங்களுக்கும் இன்னமும் எட்டவில்லை. இந்த தீவின் அநேக பகுதிகளில் இந்த மக்கள் இன்னமும் இடம் பெயர்ந்தவர்களாகவே வாழும்படி விதிக்கப்பட்டுள்ளது.

1990களில் இந்தச் சோதனைக் கதை கட்டவிழ்த்து விடப்பட்ட சமயத்தில் எனக்கு புத்தளத்தில் இருக்கவேண்டி நேர்ந்தது. வீசிய கையும் வெறுங்கையுமாக, வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் எதுவுமின்றி புத்தளத்துக்கு வந்து சேர்ந்த இந்த மக்களின் துயரங்களை என்னால் காண நேர்ந்தது. அவர்களில் சிலர் நூற்றுக்கணக்கான மைல் தூரம் நடந்தே வந்திருந்தார்கள். சிலர் பசியுடன் வெறும் வயிறாக வந்திருந்தார்கள். இன்னும் சிலர் தங்களுக்கு ஏற்பட்ட வேதனைகளாலும், துயரங்களாலும் அதிர்ச்சி அடைந்திருந்தார்கள். அவர்களில் சிலர் சுகவீனமுற்றவர்களாகவும் மற்றும் துயரத்தினாலும் மனவுறுத்தலினாலும் பாதிப்படைந்தும் இருந்தார்கள். இந்த கடும் அதிர்ச்சியான சோதனைகளுக்கும் மற்றும் கலக்கத்துக்கும் இலங்கையில் வாழும் முழு முஸ்லிம் சமூகமும் சாட்சியாக இருந்தது.

முஸ்லிம் சமூகம் இந்த அப்பாவி மக்களுக்கு ஆறுதல் வழங்க முயற்சித்தது, இருந்தாலும் இந்த துன்பத்தின் அளவு மிகப் பெரிதானதாகவும் மற்றும் மனிதர்களால் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்வதற்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருந்தது. பூமியில் வாழும் எந்த ஒரு மானிட ஜென்மமும் இப்படியான துன்பங்களுக்கு உள்ளாகக் கூடாது என நான் எண்ணுகிறேன். உண்மையில் அது ஒரு பரிதாபகரமான நிலைமை.

கடந்த 23 வருடங்களாக அவர்கள் வாழ்வின் பல அம்சங்களிலும் அவர்கள் பல்வேறு துயரங்களை அனுபவித்துள்ளார்கள். அவர்கள் வறுமையில் வாடினார்கள். அவர்களுக்கு தங்கள் குடும்பத்துடன் வசிப்பதற்கு ஏற்றதான நல்ல இல்லிடம் கிடைக்கவில்லை. அவர்களால் அவர்கள் குழந்தைகளை உரியமுறையில் படிப்பிக்க முடியவில்லை. அவர்களுக்கு நல்ல தொழில் வாய்ப்புகள் கிட்டவில்லை. இந்த இடம்பெயர்ந்த இடங்களில் அவர்களால் ஒரு கௌரவமான வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. அவர்களுக்கு நடந்தது ஒரு வரலாற்று கணக்கு, இன்னும் அதிலிருந்து பாடம் கற்பதற்காக நாங்கள் அவைகளை பதிவு செய்தல் வேண்டும்.

ஆட்சியிலிருந்த இலங்கை அரசாங்கங்கள் யாவும் இந்த மக்களை தங்கள் சொந்த

---



# தெரியுமா?

- தன் கழுத்தை வட்டமாக சுழற்றும் பறவை ஆந்தை.
- நீருக்கடியில் பறக்கும் பறவை பெங்குவின்.
- மூக்கில் பல் உள்ள விலங்கு முதலை.
- உயிரினங்களில் அதிக நேரம் மூச்சை அடக்கும் பிராணி, முதலை.
- கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினால் அதனால் குதிரைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.
- மனிதனைப் போல கண்களில் நீர் சிந்தக் கூடிய விலங்கு யானை.
- அடிபட்டால் மனிதனைப் போல் அழும் விலங்கு கரடி.
- ஆற்றுக்குதிரை என்று அழைக்கப்படும் ஒரு மிருகம் உள்ளது. அதுதான் நீர் யானை.
- நத்தையின் எடை 15 கிராம்தான் இருக்கும். ஆனால், 450 கிராம் எடையைக் கூட இழுத்துச் செல்லும் வலிமை உடையது.
- நெருப்புக் கோழிக்கு மட்டும் இமை உண்டு.
- நட்டுவாக்காலி எனப்படும் பெரிய தேளின் கொடுக்கில் சுமார் 0.5. மில்லிகிராம் நஞ்சு உள்ளது.
- பெரிய ஈக்கள் மணிக்கு 60 மைல் வேகத்தில் பறக்கும். சாதாரண ஈக்கள் மணிக்கு 50 மைல் வேகத்தில் பறக்கும். தேனீக்களின் வேகம் மணிக்கு 20 மைல்.
- பலசாலி மனிதனால் ஒருநாளைக்கு பூமியில் 30 அடிக்கு மேல் தோண்ட முடியாது. ஆனால் சுண்டெலி ஒரே நாளில் 300 அடி வரை தோண்டி விடும்.

---

முன்னொரு காலத்தில் உலூபி என்றொரு வித்தை காட்டுபவன் வாழ்ந்து வந்தான். அவன் ஊர் ஊராகச் சென்று வித்தை காட்டி பிழைப்பு நடத்தி வந்தான். பல்வேறு வித்தைகளைச் செய்து காட்டி மக்களை மகிழ்விப்பதில் அவன் கெட்டிக்காரனாக இருந்தான்.

கயிற்றின் மீது நடப்பான்! தன் தோள் மீது இருவரை அமர வைத்துக் கொண்டு ஒற்றைக் காலில் பல மணி நேரம் நிற்பான். எப்படிப்பட்ட பூட்டையும் திறப்பான். கண்களைக் கட்டிக் கொண்டு தனக்கு எதிரில் நிற்பவரின் தலையில் வைக்கப்பட்டிருக்கும் பழத்தை இரு துண்டுகளாகக் கத்தியால் பிளப்பான்.

இதைக் கண்டுகளிக்கும் மக்கள், தங்களிடம் உள்ள நாணயங்களையோ தானியங்களையோ காய்கறிகளையோ பழங்களையோ கொடுத்துவிட்டுச் செல்வர். வருமானம் மிகக் குறைவாக இருப்பினும், உலூபி தனது மனைவியுடன் மன நிறைவோடு வாழ்ந்து வந்தான்.

இப்படி இருக்கையில், ஒருநாள் கிராமத் திருவிழாவில் உலூபி தனக்குத் தெரிந்த பல்வேறு வித்தைகளைச் செய்து காட்டிக் கொண்டிருந்தான்.

கடைசி நிகழ்ச்சியாக, ஓர் இரும்பு வளையத்தை எடுத்து, அதனுள் தனது உடலை நுழைத்து வெளிவந்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தினர் கரவொலி எழுப்பினர்.

பிறகு, அதைவிட அளவில் சிறிய இரும்பு வளையத்தை எடுத்து, அதனுள்ளும் நுழைந்து வெளி வந்தான்.

இப்பொழுது கூட்டம் மிகுந்த கரகோஷம் எழுப்பி ஆர்ப்பரித்தது. அதன் பிறகு இன்னும் மிகச் சிறிய வளையம் ஒன்றை எடுத்தான். அதை மக்கள் முன்பு காட்டி, “உங்களில் யாராவது இந்த வளையத்துக்குள் நுழைந்து வெளிவர முடியுமா?” என்று கேட்டான்.

கூட்டத்தினர் எவரும் முன்வராத நிலையில், அந்தச் சிறிய வளையத்துக்குள் தனது உடலை நுழைத்து வெற்றிகரமாக வெளிவந்தான்.

கூட்டத்தினரின் பலத்த கைதட்டல்களோடு நிகழ்ச்சி முடிவடைந்தது. கூட்டத்தினர் அனைவரும் கலைந்து சென்ற பிறகும், நன்கு உடையணிந்த ஒரு மனிதன் மட்டும் உலூபியை உற்றுப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தான்.

வழக்கம் போல உலூபியும் அவனது மனைவியும் தரையில் சிதறிக்கிடந்த நாணயங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த மனிதன் உலூபியின் அருகே வந்தான். உலூபியிடம், “இவ்வளவு வித்தைகளை உடலை வருத்திச் செய்கிறாய். ஆனால் உனக்குக் கிடைப்பது என்ன? மிகச் சொற்பமான வருமானம். இதற்காக நீ எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது? ஒரே ஒரு இரவு மட்டும், என்னோடு வந்து ஒரு உதவி செய்தால் உனக்கு ஆயிரம் பொற்காசுகள் தருகிறேன்! சம்மதமா?” என்று கேட்டான்.

இவர்கள் இருவரும் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்த உலூபியின் மனைவி, “இந்த மனிதர் யார் என்பதே நமக்குத் தெரியாது. நமக்குத் தெரிந்த தொழிலைச் செய்து, கிடைப்பதைக் கொண்டு வாழ்வதே நல்லது. முன்பின் அறிமுகம் இல்லாத நபரை நம்பிச் சென்று இருப்பதையும் இழந்து விடக்கூடாது. இது ஆபத்தாகக் கூட முடியலாம். அதனால் போக வேண்டாம்...” என்று கூறினாள்.

அவள் கூறியதை காதிலேயே வாங்கிக் கொள்ளாத உலூபி, அந்த மனிதனிடம், “எங்கு வர வேண்டும்? என்ன உதவி செய்ய வேண்டும்?” என்று கேட்டான்.

உலூபியுடன் பேசிய அந்த மனிதன், ஒரு பொற்கொல்லன். அவனிடம் அந்நாட்டு மன்னர், சில தங்கக் கட்டிகளைக் கொடுத்து, ஆபரணங்கள் செய்து தருமாறு கட்டளையிட்டிருந்தார்.

ஆனால் அந்தத் தங்கக் கட்டிகளை, அந்தப் பொற்கொல்லன் சூதாட்டத்தில் தோற்றுப்

இலங்கையர்கள் மற்றும் பிரஜைகளைப்போல நடத்தவில்லை என்பதை இங்கு நாங்கள் வலியுறுத்திக் கூறவேண்டும். இலங்கை ஒரு ஜனநாயக நாடு மற்றும் அதன் அரசியலமைப்பு சகலருக்கும் சமமான உரிமையை வழங்கியுள்ளது. இருந்தும் வடபகுதி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட விடயத்தில் அவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு பதவியிலுள்ள இலங்கை அதிகாரிகள் தவறிவிட்டார்கள்? இன்று நாடாளுமன்றத்தில் 18இற்கும் மேற்பட்ட முஸ்லிம் அங்கத்தவர்கள் உள்ளனர், இருந்தும் இந்த மக்களுக்கான தார்மீக மற்றும் மதப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவர்கள் கூடத் தவறிவிட்டார்கள்? இந்த மக்களுக்கு உதவுவதற்கு அவர்கள் போதுமானவற்றை செய்யவில்லை. இந்த முஸ்லிம் அரசியல்வாதிகளில் ஒரு சிலரைத் தவிர, ஏனையோர் சுயநலவாதிகளும் மற்றும் சமூகத்துக்கு உதவிசெய்ய தகுதியற்றவர்களும் ஆவார்கள். இந்த விடயத்தைப் பற்றி நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக விவாதிப்பதற்குக்கூட அவர்கள் தவறிவிட்டார்கள். அதிகம் என்ன சர்வதேச முஸ்லிம் சமூகம்கூட இந்த விடயத்தில் பெரிதும் தவறிழைத்துள்ளது? இஸ்லாம், சர்வதேச இஸ்லாமிய சகோதரத்துவ விசுவாசத்தைப் பற்றி உபதேசித்த போதும்கூட, எந்தவொரு முஸ்லிம் நாடோ அல்லது சர்வதேச இஸ்லாமிய அமைப்போ இந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு உதவ முன்வரவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமாவது கண்களை திறந்து, இந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்காக ஆக்கபூர்வமான ஏதாவது செய்வதற்கு முன்வரவேண்டும்.




# அடையாளங்களை அழிக்கலாமா?

— அருண். மோ —

புதிய தமிழ் படங்கள் தொடர்ச்சியாக ஒரு தவறைச் செய்துவருகின்றன. பழைய தமிழ்ப் படங்களின் பெயர்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டுவருவதுதான் அந்தத் தவறு. இது அத்தனை ஆரோக்கியமானது அல்ல. இதில் உள்ள நுட்பமான அரசியலும், வியாபாரத் தன்மையும் மிக ஆபத்தானவை. எம்.ஜி.ஆரின் படங்களை வெவ்வேறு நடிகர்கள், ரஜினி தொடங்கி விஜய் வரை தொடர்ச்சியாகத் தங்கள் படங்களுக்குச் சூட்டிக்கொள்கிறார்கள். எப்போதும் போல் இதிலும் கமல் முன்னோடியாகவே இருக்கிறார். மைக்கேல் மதன காமராஜன், உன்னைப் போல் ஒருவன் என்று அவர் பயன்படுத்திய பழைய படங்களின் தலைப்புகளுக்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. உன்னைப் போல் ஒருவன் என்று ஒருவர் ஜெயகாந்தனின் படத்தைத் தேடினால், அவருக்குக் கமலின் படம்தான் கிடைக்கும். ஜெயகாந்தனின் திரைப்படம் பற்றிய தகவல் கிடைக்காமல் போவதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே இருக்கின்றன. ஆய்வு செய்பவர்கள், வெளிநாட்டில் இருந்து தமிழ் திரைப் படங்களைப் பற்றி தெரிந்துகொள்ள ஆர்வத்துடன் வரும் பல நண்பர்களுக்கு, படத்தின் பெயரைத் தாண்டி வேறு எந்தத் தகவலும் தெரியவில்லை என்றால், அவர்கள்தேடும் படங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. உதாரணமாக, கே. ராம்நாத்தின் மனிதன் திரைப்படத்தை அதன் உள்ளடக்கத்திற்காக ஒருவர் தேடினால், ரஜினிகாந்த் நடித்த மனிதன் திரைப்படம்தான் அவருக்குக் கிடைக்கும்.

பல நல்ல பழைய படங்களின் பெயர்களைப் புதிய படங்களுக்குச் சூட்டுவது எத்தகைய வியாபார தந்திரம்! நல்ல படங்களைத் தேடித் தேடிப் பார்த்துத் திரைப்பட ரசனையை ஒருவர் வளர்த்துக்கொள்ள இந்தப் பெயர் வைக்கும் முறை பெரும் தடையாகவே இருக்கிறது. சமீபத்தில் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் ராஜாராணி என்கிற பெயரும் கூட ஒரு பழைய படத்தின் பெயர்தான். உலகில் வேறெந்த நாட்டிலும், வேறெந்த மொழியிலும் ஒரு முறை வெளியான படங்களின் பெயரைப் புதிய படங்களுக்குச் சூட்டுவதில்லை. பழைய படங்களின் பெயரை மீண்டும் சூட்டுவதை அவர்கள் பெரும்பாலும் தவிர்க்கிறார்கள். அனைத்து நாடுகளிலும் வெளியாகும் திரைப்படங்களின் தகவல் களஞ்சியமான ஐ.எம்.டி.பி. (IMDB) இணையதளத்தில் மிக தெளிவாக படங்கள் பற்றிய தகவல் வெளிவர வேண்டுமென்றால், ஒருமுறை பயன்படுத்தப்பட்ட படத்தின் தலைப்பை மீண்டும் பயன்படுத்தக் கூடாது. உலகின் மற்ற நாடுகளின் படங்கள் எல்லாம் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் ஐ.எம்.டி.பி. இணையத்தில் பதிவு செய்யப்படும்போது, தமிழ்த் திரைப் படங்களுக்கு மட்டுமே நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. இணையம் எல்லாவற்றையும் ஜனநாயகப்படுத்தியிருக்கிறது,

எனவே இணயத்தில் தேடினால், நிச்சயம் பழைய படங்களும் கிடைக்கும் என்றெல்லாம் பேச முடியாது. அதிகமாகத் தேடப்படும், அல்லது பார்க்கப்படும் ஒன்றையே இணையம் முன்னிறுத்துகிறது. உன்னைப் போல் ஒருவன் என்று நீங்கள் தேடினால், அதிகப்படியான இணைய வாசகர்கள் கமல் நடித்த உன்னைப் போல் ஒருவனைத்தான் தேடியிருப்பார்கள். எனவே இணையமும், கமல் நடித்த உன்னைப் போல் ஒருவனைத்தான் முதலில் உங்களுக்கு கொடுக்கும். ஜெயகாந்தனின் உன்னைப் போல் ஒருவன் கிடைக்காது. இப்படித்தான் இந்தப் போக்கு பழைய படங்களைச் சுவடு தெரியாமல் அழிக்கும். தமிழில் யாராவது நாவல்களுக்கோ மற்ற முக்கியமான புத்தகங்களுக்கோ பழைய பெயரைச் சூட்டுகிறார்களா? மகாபாரதம் என்று புதிய புத்தகம் ஒன்று வெளிவந்திருக்கிறதா? புயலிலே ஒரு தோணி பெயரைப் புதிய நாவல் ஒன்றிற்குச் சூட்டியிருக்கிறார்களா? அம்மா வந்தாள், கடல் புறா, கனவுத் தொழிற்சாலை என்று பழைய சிறுகதை அல்லது நாவலின் பெயரைப் புதிய நாவல் அல்லது சிறுகதைக்கு யாராவது சூட்டுகிறார்களா? உலகில் வேறெந்த நாட்டிலும், வேறெந்த மொழியிலும் ஒரு முறை வெளியான படங்களின் பெயரைப் புதிய படங்களுக்குச் சூட்டுவதில்லை.






## சிறுவர் கதை
# உலோபி

- ந.லட்சுமி -

போய் இழந்துவிட்டான். சொன்னபடி, அரசருக்கு ஆபரணங்கள் செய்து தர வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இருந்தான் அவன். இன்னும் ஒரு வாரத்துக்குள் ஆபரணங்களைச் செய்து தரவில்லை என்றால் மன்னர், அவனது தலையைச் சீவி விடுவார் என்பது அவனுக்குத் தெரியும். எனவே பிரச்சினையைத் தீர்க்க ஒரு குறுக்கு வழியை யோசித்து வைத்திருந்தான். அந்த யோசனையைச் செயலாற்றத்தான் உலூபி அவனுக்குத் தேவைப்பட்டான்.

அரண்மனையில் தங்கம் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் இடம் அவனுக்குத் தெரியும். அந்த இடத்திலிருந்து சில தங்கக் கட்டிகளைத் திருடி எடுத்து வந்துவிட்டால், ஒரு வாரத்துக்குள் ஆபரணங்களைச் செய்து மன்னரிடம் ஒப்படைத்துவிடலாம் என்று நினைத்திருந்தான் அந்த மனிதன்.

பகல் நேரத்தில் அந்த அறைக்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கும். ஆனால், இரவு நேரங்களில் ஒரே ஒரு காவலாளி மட்டும் இருப்பான். அவனும் பல சமயங்களில் தூங்கிக் கொண்டுதான் இருப்பான். எனவே தங்கக் கட்டிகளை யாருக்கும் தெரியாமல் திருடுவதில் எந்த சிரமமும் இருக்காது என்று அவன் நினைத்திருந்தான்.

தன்னுடன் வந்த உலூபியை அழைத்துக் கொண்டு அன்றிரவே, காவலாளிகள் யார் கண்ணிலும் படாமல் பொக்கிஷம் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் அறைக்கு வந்தான்.

வழக்கம்போல காவலாளி நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். தனது திறமையால் ஜன்னல் மேல் ஏறிய உலூபி, ஜன்னல் கம்பிகளுக்கு இடையே தனது தலையை நுழைக்கத் தொடங்கினான்.

சுவரின் ஓரமாகப் பொற்கொல்லன் படபடக்கும் இதயத்தோடு நின்று கவனித்துக் கொண்டிருந்தான்.

உலூபி ஒருவாறு தனது தலையை கம்பிகளுக்கிடையே நுழைத்துவிட்டான். இப்போது சிறிது சிறிதாக உடலை உள்ளே 'நுழைத்துவிட்டால் போதும்! சத்தமில்லாமல் உள்ளே குதித்து, பூட்டைத் திறந்து தங்கக் கட்டிகளை எடுத்து வந்து விடலாம். பொற்கொல்லன் பரபரத்துக் கொண்டிருந்தான்.

ஆனால் உலூபியால் அவனது உடலை உள்ளே நுழைக்க முடியவில்லை!

இதைக் கண்ட பொற்கொல்லன் நிலைகொள்ளாமல் தவித்தான். "என்ன ஆயிற்று?" என்று சைகையாலேயே உலூபியிடம் கேட்டான்.

உலூபி மெல்லிய குரலில், "ஐயா, மக்கள் கரவொலி கேட்டுக் கொண்டே எத்தகைய கடினமான வித்தையையும் எளிதாகச் செய்து விடுவேன். இங்கோ கரவொலி எழுப்ப யாருமே இல்லையே... ஒரே ஒரு ஆளாவது கைதட்டினால் போதும்... உள்ளே உடலை நுழைத்து விடுவேன்...." என்றான்.

தங்கக்கட்டிகளை எப்படியாவது எடுத்துவிட வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே பொற்கொல்லனின் மனதில் ஓடிக் கொண்டிருந்ததால் படபடப்பில்... தனது மதியிழந்து தனது கைகளைத் தட்ட ஆரம்பித்தான்....

கரவொலி கேட்ட காவலர்கள் ஓடி வந்து இரண்டு பேரையும் கையும் களவுமாகப் பிடித்தனர்.

தனது மனைவி கூறியது எவ்வளவு உண்மை என்பதை உணர்ந்த உலூபி அழத் தொடங்கினான்....




# வழி தவறாத பூனை

நாராயணசாமியின் மனைவி ஒரு பூனை வளர்த்து வந்தாள்.

அது நாராயணசாமிக்கு சுத்தமாக பிடிக்கவில்லை. அதனை எப்படியாவது விரட்டிவிட வேண்டும் என்று நினைத்தார்.

ஒரு நாள் மனைவிக்குத் தெரியாமல் அந்த பூனையைத் தூக்கி கொண்டு இருபது வீடுகள் தள்ளி விட்டுவிட்டு வந்தார். வீட்டிற்கு வந்தால் பூனை வாசலில் நின்று கொண்டிருக்கிறது.

அடுத்தநாள் அப்பூனையை அடுத்த தெருவில் விட்டு வந்தார். அன்றும் பூனை அவருக்கு முன்னால் வந்து மாடியில் இருந்து அவரைப் பார்த்துக் கொண்டிருந்தது.

வெறுப்படைந்த அவர் அடுத்த நாள் பூனையைக் காரில் ஏற்றிக் கொண்டு வலது புறம், இடது புறம் என்று மாறி மாறி நீண்ட தூரம் சென்று பூனையை விட்டு வந்தார்.

சிறிது நேரம் கழித்து நாராயணசாமி தன் மனைவிக்கு போன் செய்து கேட்டார்; உன் பூனை வீட்டிற்கு வந்து விட்டதா? ஆம என்று மனைவி சொல்ல - எனக்கு வீட்டிற்கு வர வழி தெரியவில்லை, வழியைச் சொல் என்றாராம்.

# உலகின் மிகப் பெரிய பயணிகள் வானூர்தி..

அதிக எண்ணிக்கையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் உலகின் மிகப் பெரிய சொகுசு விமானத்தை அமெரிக்காவின் போயிங் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

250 அடி நீளமுள்ள போயிங் 747-8 இண்டர்காண்டினென்டல் என்ற அந்த விமானத்தில் 467 பயணிகள் செல்லலாம். இது போயிங் நிறுவனத்தின் போட்டியாளரான பிரான்சின் ஏர்பஸ் நிறுவனம் அறிமுகப்படுத்திய ஏ380இல் செல்லக்கூடிய பயணிகள் எண்ணிக்கையை விட 51 பேர் அதிகமாகும்.

போயிங்கின் முந்தைய தயாரிப்பான 747-400 விமானத்தை விட இந்த புதிய அறிமுக விமானத்தின் சத்த அளவு 30 விழுக்காடு குறைவு என்றும், அதன் கரியமில வாயு வெளிப்பாடு ஒரு பயணி அளவோடு மதிப்பீடு செய்கையில் 16 விழுக்காடு குறைவு என்றும் போயிங் நிறுவனம் கூறியுள்ளது.

இந்த விமானத்தின் குறைந்த இயக்கச் செலவும், உள் அமைப்பும் பயணிகளை மிகவும் கவரும் என்று எதிர்பார்பதாக போயிங் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ஜிம் ஆல்பாக் கூறியுள்ளார்.


இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் போயிங் 747-8 விமானத்தின் முதல் தயாரிப்பு சேவைக்கு வரவுள்ளது. இதுவரை 33 விமானங்களுக்கு விற்பனை ஒப்பந்தம் செய்துள்ளதாகவும், அதில் லு.ஃ.ப்தான்சா, கொரியன் ஏர் ஆகியனவும் அடக்கம் என்றும் போயிங் கூறியுள்ளது.

இந்த விமானத்தின் அறிமுக விலை 31.75 கோடி டாலர்களாகும் ('ரூ.1,430 கோடி). இந்த புதிய விமானம் வோஷிங்டனில் உள்ள போயிங் நிறுவனத்தில் 10 ஆயிரம் பேருக்கு நடுவில் கோலாகலமான விழா நடத்தப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டது.

## போற்றி பாடும் போது 'ஓம்' என்பது ஏன்?

108 போற்றி, 1008 போற்றி சொல்லும் போது, சுவாமியின் பெயரின் முன்னால் "ஓம்" சேர்க்கிறோம். முடியும் இடத்தில் "போற்றி" என்கிறோம். உதாரணத்துக்கு "ஓம் முருகா போற்றி". "ஓம்" என்னும் மந்திரத்திற்கு பல விளக்கங்கள் உள்ளன. 1. ஆதிபகவானாகிய இறைவனே! ஜீவனாகிய என்னை சேர்த்துக்கொள், என்பது இதன் பொருள். ஒவ்வொரு தடவையும் "ஓம்" என்று சொன்ன பிறகு, விஷ்ணுவே, சிவனே, சக்தியே, விநாயகா, ஐயப்பா, முருகா என்றெல்லாம் அவரவர் இஷ்ட தெய்வத்தை அழைக்கிறோம். அப்படி சொல்லும்போது, அந்தந்த தெய்வங்களிடம் "என்னை உன்னோடு சேர்த்துக்கொள்" என்று பொருள். தெரிந்தோ, தெரியாமலோ கெஞ்சுகிறோம். காலம் வரும்போது, இந்த மந்திரம் சொன்னதற்குரிய பலன் உறுதியாக கிடைக்கும். பிறப்பற்ற நிலையும் பரமாந்தமும் ஏற்படும்.

# சூரிய குடும்பம்



### சூரியன்

சூரியனும் ஒரு விண்மீனே. இது பூமிக்கு மிக அருகில் உள்ள விண்மீன் (கோள்கள் வேறு விண்மீன்கள் வேறு). இது ஒரு நெருப்புக்கோளம். எனவே, இதன் அருகில் செல்லவே முடியாது. இது பூமியைப் போலப் பல மடங்கு பெரியது. பூமியிலிருந்து சுமார் 15 கோடி கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ளது. சூரியன், சூரிய மண்டலத்தின் மையத்தில் உள்ள சூரிய மண்டலத்தின் ஆதாரமான விண்மீன் ஆகும். பூமி உடபட பல கோள்களும், கோடிக்கணக்கான விண் கற்களும், வால்வெள்ளிகளும், அண்டத்தூசி ஆகியனவும் பல்வேறு கோளப் பாதைகளில் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனின் எடை மட்டுமே சூரிய மண்டலத்தின் நிறையில் 98.6 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள சராசரி தொலைவு சுமார் 149 ,600 ,000 கிலோமீட்டர்கள். சூரியனில் இருந்து ஒரு ஒளிக்கற்றை பூமியை வந்தடைய சுமார் 8 நிமிடங்கள், 19 வினாடிகள கடக்கிறது. கதிரவன் பெருமளவில் ஐதரசன் (சுமார் 74% நிறை, மற்றும் 92% கனவளவு) மற்றும் ஈலியம் (சுமார் 24% நிறை, 7% கனவளவு) ஆகியவற்றையும், சிறிய அளவில் பிற தனிமங்களான, இரும்பு, நிக்கல், ஆக்சிசன், சிலிக்கன், கந்தகம், மக்னீசியம், கரிமம், நியான், கல்சியம், குரோமியம் ஆகியவற்றையும் கொண்டுள்ளது.

### புதன்

இது சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள். எனவே இது மிகவும் வெப்பமாக இருக்கும். இதனை ஆங்கிலத்தில் "மெர்க்கூரி" என்று அழைக்கின்றனர். அனைத்துக் கிரகங்களுக்குள்ளும் புதனே மிகச் சிறிய கிரகமாகும். இக்கிரகத்தின் விட்டம் 4800 கிலோ மீற்றராகும். இது சந்திரனைவிட சிறிய பருமனுடையது. நாம் வாழுகின்ற பூமியானது இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்கு ஒருமுறை தன்னைத்தானே சுற்றுவதினால் புவியின் எல்லாப் பகுதிகளுக்கும் இரவு, பகல் மாறி மாறிக்கிடைக்கின்றது. ஆனால் புதனில் நீண்டநாட்களுக்கு இரவும் பகலும் மாறிமாறி வருகின்றன. புதன் சூரியனுக்கு அருகில் இருக்கும்போது கதிரவனின் ஒளி படுகின்ற பகுதியின் வெப்பநிலை சுமார் 400 பாகை செல்ஸியஸ் ஆகவும் தூரத்தில் இருக்கும் வேளையில் ஏறத்தாழ 280 பாகை செல்ஸியஸாகவும் தென்படுகின்றது என வானிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பூமிக்கும் சூரியனுக்கும் இடையே புதன் ஒரே நேர் கோட்டில் வலம்வரும்போது அது சூரிய பிம்பத்திற்குக் குறுக்காக ஒருசிறு கரும் புள்ளியாக ஊர்ந்து செல்லும். இதனைக் கிரகணம் என்று கூறுவதற்குப் பதிலாக புதசந்திரணம் என்று அழைக்கின்றனர்.

### வெள்ளி

சூரியனிலிருந்து இரண்டாவது கோள் வெள்ளி. இது மிகவும் வெப்பமான கோள். இதில் காரீயம் கூட உருகிவிடும். பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் இது. இதை அதிகாலையில் வானத்தில் பார்க்கலாம். இக்கிரகம் பருமனிலும் திணிவிலும் பூமியை ஓரளவிற்கு ஒத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இதனுடைய விட்டம் 12320 கிலோமீற்றராகும். இது சூரியனை ஒருமுறை சுற்றிவர 224 நாட்கள் ஆகின்றது. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே ஒரு நேர்கோட்டில் வரும்போது இதுவும் கரும்புள்ளியாகத்தான் தோற்றமளிக்கும். இந்நிகழ்வை சுக்கிர சந்திரணம் என அழைப்பார்கள். இது வெகு அபூர்வமாக நிகழுகின்றது.

இறுதியாக இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு யூன் எட்டாம் திகதி நடைபெற்றது. எட்டு ஆண்டுகள் இடைக்காலத்தைக் கொண்ட இச்சுக்கிரசந்தரணம் இரண்டாயிரத்துப் பன்னிரெண்டுக்குப் பின்னர் நூற்றாண்டு காலப் பகுதியைக் கடந்ததும் நிகழுமாம், இக்கிரகத்தைச் சுற்றி வென்நிற மேகப்படலம் பரிணமித்துள்ளது. இதனால் சுக்கிரனின் மேற்பரப்பைத் துல்லியமாக ஆராய்வதில் சிக்கல் நிலை தோற்றியுள்ளது.

### பூமி

சூரியக் குடும்பத்தில் மூன்றாவது கோள் தான் நமது பூமி. இது ஒரு பாறைக்கோளம். பூமியைக் காற்று மண்டலம் சூழ்ந்துள்ளது. இதன் மேற்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு நீர் உள்ளது. காற்றும் நீரும் உள்ளதால் உயிரினங்கள் இங்கு வாழமுடிகிறது. பூமி உருண்டை வடிவமென ஏற்றுக்கொண்டாலும் அது சரியான உருண்டை வடிவாக அமைந்திருக்கவில்லை. இருதுருவங்களும் சிறிது தட்டையாகவும், கற்பனைக் கோடான பூமததிய ரேகைப்பகுதியில் சற்று பருத்தும் காணப்படுகின்றது. பூமத்திய ரேகையின் ஊடாகச் செல்லும் விட்டம் 12742 கிலோ மீற்றரும் துருவங்கள் இரண்டிற்குமிடையில் உள்ள விட்டம் 12713 கிலோ மீற்றராகும். பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் மூன்றாம் திகதி அளவில் பூமியானது சூரியனுக்கு அருகில் வருகின்றது.

பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றி வரும் நேரத்தை ஒரு நாளென்றும் சூரியனை ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம் ஒரு வருடமென்றும் கொள்ளப்படுகின்றது. பூமி தன்னைத்தானே சுற்றுவதினால் இரவு, பகல் உண்டாவதும், சூரியனைச் சுற்றி வருவ்தனால் பருவ காலங்களும் ஏற்படுகின்றன.

### செவ்வாய்

செவ்வாய் நான்காவது கோளாகும். இதைச் சிவப்புக் கோள் என்றும் அழைப்பர். செவ்வாயின் ஒருநாள் என்பது 24.5 மணி நேரம் செவ்வாயில் உயிரினங்கள் இருக்கக்கூடும் இதுவரை மெய்ப்பிக்கப்படவில்லை. செவ்வாய் சூரியனை ஒருமுறை சுற்றிவருவதற்கு 687 நாட்கள் எடுக்கின்றது. தன்னைத்தானே சுற்ற 24 மணி 37 நிமிடங்களும் ஆகின்றது. ஆகவே புவியைப் போலவே அங்கும் இரவு பகல் மாறிமாறி உண்டாகும். பூமியின் அச்சு இருபத்து மூன்று அரை பாகை சரிந்துள்ளது. செவ்வாய் தனனைத்தானே சுற்றும் அச்சு இருபத்து நான்கு பாகையில் சரிந்துள்ளமையினால் பருவகாலம் புவியை ஒத்ததாகவே காணப்படுகிறது.

செவ்வாய் சூரியனைச் சுற்ற எடுக்கும் காலம் ஏறக்குறைய பூமி கதிரவனைச் சுற்ற எடுக்கும் காலப்பகுதியைக் காட்டிலும் இருமடங்காக உள்ளதினால் காலநிலையும் இருமடங்காகின்றது. தொலைநோக்கி வாயிலாக செவ்வாயை உற்று நோக்கும் வேளையில் அது செம்மஞ்சள் நிறமாகத் தோன்றும்.

(தொடரும்....)

# உலகில் மிகச்சிறிய உலங்கு வானூர்தி



உயர்வு மற்றும் வேகம் ஆகியவற்றைக் கட்டுப் படுத்தலாம். அத்துடன் Moving the control bar மூலம் பயண திசை, வலது அல்லது இடது பக்கம் திரும்புதல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

GEN H-4 ஆனது இரண்டு அங்குல அலுமினிய குழாய்கள் மூலம் உருவாக்கபபட்டது. 10hp, 125cc வலுவுள்ள நான்கு GEN125 இயந்திரங்கள் இந்த உலங்கு வானூர்தியை இயக்குகின்றன. இரண்டு சுழலிகளும் எதிர் எதிர் திசையில் பயணிப்பதன் மூலம் இதன் torque கட்டுப்படுத்தப்படுகிறது.

அதனால் வால்ப்பக்க சுழலி தேவை இல்லை. Yaw திருப்பம் ஒரு சிறிய மின் இயந்திரத்தின் மூலம் கட்டுப்படுத்தப் படுகிறது. இதன் எரிபொருள் automobile gasoline மற்றும் two stroke oil ஆகியவற்றின் 30:1 கலவையாகும்.

இதில் பாதுகாப்புக்காக ballistic parachute (thd;Fil) வழங்கப்படுகிறது மற்றும் கூடுதலாக இரண்டு இயந்திரங்கள் மூலம் ஒரு பாதுகாப்பான அவசர தரையிறக்கம் செய்ய முடியும்.

எதிர்கால வளர்ச்சி திட்டங்களை கருத்தில் கொண்டு இதில் automatic altitude controller (தனிச்சை உயரக் கட்டுப்பாட்டாளர்) அமைக்கவும் மற்றும் இருக்கையின் கீழ் air bags (காற்று பைகள்) பொருத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாகன நெரிசல் அதிகரித்த நிலையில் இந்த தனி மனித ஓரச்சு உலங்கு வானூர்தியானது மனிதனுக்கு ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு செல்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும்.

GEN H-4 ஆனது உலகின் மிகச்சிறிய ஓரச்சு உலங்கு வானூர்தி (co-axial helicopter) ஆகும். இது ஆளில்லாமல் 155 இறாத்தல் (70kg) எடையுள்ளதாகவும், மற்றும் 55 mph (88 km / h) அதிகபட்ச வேகத்தை அடையும் திறனையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

GEN H-4 ஆனது எதிரெதிர் திசையில் திருப் பும் சுழலிகள் (Rotors) இரண்டின் உதவியுடனும் நான்கு இரட்டை சிலிண்டர் இயந்திரங்களின் உதவியுடனும் இயக்கப் படுகிறது. இதன் ஒரு இயந்திரம் பழுதானாலும் மிகுதி மூன்று இயந்திரங்களினாலும் சிறப்பானதாக செயறபட முடியும்.

இந்த தனி மனித ஓரச்சு உலங்கு வானூர்தியை ஜப்பானில் உள்ள Engineering System Co.எனும் நிறுவனத்தின் தலைவர் திரு Gennai Yanagisawa என்பவர் வடிவமைத்தார் . இது தற்போது $ 30,000 விலைக்கு விற்கப்படுகிறது.

GEN H-4 முதன் முதலில் 1998 இல் வெள்ளோட்டத்திற்கு விடப்பட்டது. இதன் இயக்கவியல் மிகவும் எளிதானது. வானோடியின் கழுத்துப்பகுதியில் உள்ள throttle lever மூலம் உலங்கு வானூர்தியின்

# புகையிரதத்தில் திடீர் மின்தடை அச்சத்தில் பயணம் செய்த மக்கள்

இரவுவேளை ஓடிக்கொண்டிருந்த புகையிரதத்தின் மின் ஒளி தடைப்பட்டதால் அதில் பயணம் செய்துகொண்டிருநத பயணிகள் பெரும் அவதிகளும் அச்சத்திற்கும் உள்ளாகினர்.

இச்சம்பவம் கடந்த 6 ஆம் திகதி கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த புகையிரதத்தில் இடம் பெற்றது.

கொழும்பிலிருந்து பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா நோக்கிப் புறப்பட்ட புகைவண்டி அனுராதபுரத்துக்கு சிறிது நேரம் கழித்து நின்றபின், பயணிகளின் தொகை குறைவு காரணமாக குறைந்தளவு பெட்டிகள் உள்ள இன்னொரு புகைவண்டிக்குப் பயணிகள் மாறி ஏறுமாறு பணிக்கப்பட்டனர்.

அவ்வாறு மாறி ஏறிய பின் புறப்பட்ட புகைவண்டியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. குறித்த புகைவண்டி மதவாச்சியை அடைந்து, அங்கிருந்து வவுனியா நோக்கிப் புறப்பட்ட சில நிமிடங்களில் புகைவண்டியின் மின் ஒளி திடீரென துண்டிக்கப்பட்டு விட்டது. மின் ஒளி மீண்டும் வரும் வரும் என அச்சத்துடன் எதிர்பார்த்துக் காத்திருந்த பயணிகளுக்கு அச்சமும், அவதியும் ஏமாற்றமுமே மிகுதியாயிருந்தது.

பயணிகள் சிலர் கைத்தொலைபேசியின் மின் ஒளியில் பயணத்தைத் தொடர்ந்தனர். சிறுவர்களும், குழந்தைகளும் அழுது புலம்பி கூச்சலிட்ட வண்ணமாக இருந்தனர்.

புகைவண்டி வவுனியா புகையிரத நிலையத்தை அண்மித்த வேளையே மின் ஒளி வந்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்நிலை ஏற்பட்டதா? அலலது ஏதாவது சதிவேலையா என்பது தெரியாமல் பயணிகள் அவதிப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (06)

# சேவைக்கழகத்தின் ஆண்டு நிறைவுவிழா



(மானிப்பாய்)

யாழ். இந்துக் கல்லூரி சேவைக்கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த 23 ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் செல்வன் சோ.திரியம்பகசர்மா தலைமையில் இடம்பெற்றது.

8 ஆவது மனிதம் சஞ்சிகையும், 2 ஆவது இந்துவின் சேவையாளன் இறுவட்டு வெளியீடும் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன், சிறப்பு விருந்தினராக நீதி அமைச்சின் நிதி உதவியாளர் மெ.பாபுஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதற்பிரதியினை யாழ். வலயக் கல்வி நிர்வாக உத்தியோகத்தர் திருமதி நந்தினி நற்குணராஜா பெற்றுக்கொண்டார். (48)

# சங்கிலி திருட்டில் பெண் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செல்வபுரம் யூதாததேயு தேவாலயத்தில் வருடாந்த திருநாள் திருவிழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்கு பற்றியவர்களின் 9 பவுண் மதிக்கத்தக்க 6 சங்கலிகளை திருடினார் என்ற சந்தேகத்தின் பேரில் முல்லைத்தீவு பொலிஸார் பெண் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

மேற்படி ஆலயத்திலிருந்து சங்கிலிகளை அபகரித்துக் கொண்டு தப்பிச் செல்ல முற்பட்ட சமயம் தண்ணீரூற்றுப் பகுதியில் வைத்து பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (125)

# செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச முதியோர் பேரவை சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென மேற்படி சங்கத்தின் செயலாளர் என்.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

# நூலக வார நிகழ்வு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச பொது நூலகத்தின் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக வார நிகழ்வு மேற்படி நூலகத்தில் வெற்றிவேல் தலைமையில் பிற்பகல் 1 மணியளவில் இடம்பெற்றது.

கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் ரவீந்திரன் புத்தகக் கண்காட்சியை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். (140)

# நீர்வள முகாமைத்துவ அமைச்சின் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை வயது 21 - 45 உட்பட்ட நன்னடத்தையுள்ள நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல், உள நலமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமை பல்கலைக் கழகமொன்றில் சட்டத்துறைசார் பட்டத்துடன், உயர் நீதிமன்றில் சட்டத்தரணியாகவிருத்தலுடன் 3 வருட அனுபவம் தேவை.

விண்ணப்பங்கள் 11.11.2013 இற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் சேவைகள், சம்பளம், நேர்முகப் பரீட்சை விபரங்களை பெற்றுக்கொள்ள 11.10.2013 அரச வர்த்தக மானியை பார்வையிடலாம். (105)



பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலையின் சிறுவர் தின நிகழ்விற்கு பாடசாலை மாணவர்கள் பொதுநோக்கு மண்டபத்தில் இருந்து அழைத்து வருவதைக் காணலாம். (130)

# பதிவிருக்கப் பெட்டகம்

'குருகுலக் கல்வி முறை சிறந்தது', 'அது தர்க்கத்தையும் அறிதல் முறையையும் கற்றுத் தந்தது' என்று ஜெயமோகன் சொல்லும்போது 'குருகுலக் கல்வி முறையில் கற்பதற்கு யாருக்கெல்லாம் வாய்ப்பிருந்தது?' என்கிற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததுதான். தர்க்கத்தின் வழியாக விஷயங்களை அணுகுவது, அறிவைப் பரவலாக்குவது ஆகியவற்றை இந்தியச் சமூகத்தில் செய்தவை பவுத்தமும் சமணமும்தான். எல்லோரும் அறிவு பெறுவதற்கான 'பள்ளி'யை உருவாக்கியது சமணம். 'பொது' என்கிற வார்த்தையே பாலி மொழிச்சொல். அது பௌத்தத்தின் வழியாகத்தான் தமிழை வந்தடைந்தது. ஆனால் பலரும் பழக்கக்கூடாது என்று மறைக்கப்பட்டதாலேயே வேதம் 'மறை' ஆனது. இது குருகுலக் கல்விமுறையின் ஒர் அம்சம்தான். அறிதல்முறை எப்படிப்பட்டது என்பது மட்டுமல்ல, அது பரவலாக்கப்பட்டதா என்பதும் முக்கியம்.

குமாஸ்தா கல்வி முறை என்று விமர்சிக்கப்படும் மெக்காலே கல்விமுறையில் கடுமையாக விமர்சிக்கப்படும் அம்சங்கள் இரண்டு. மனப்பாடக் கல்வி முறை மற்றும் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான அதிகாரப் படிநிலை. இவை இரண்டும் குருகுலக் கல்விமுறையில் இருந்தன. அதனாலேயே காலங்காலமாக வேத வாக்கியங்களை மனப்பாடம் செய்துவந்த பார்ப்பனர்களுக்கு மெகாலே கல்வி முறை இங்கு அறிமுகமானபோது வெற்றிகரமாகப் பயனளித்தது. அதேபோல் குருகுலக் கல்விமுறையில் குரு என்பவர் வணங்கத்தக்கவராகவே இருந்தார். இன்றைய கல்வி நிறுவனங்கள் யாரைச் சேர்ப்பது, யாரைச் சேர்க்கக்கூடாது என்ற பாகுபாட்டைக் கடைப்பிடிப்பதைப் போலத்தான் குருகுலக் கல்விமுறை என்பதும் பாகுபாடான கல்விமுறையே. ஆனால் பௌத்த சங்கத்திலோ புத்தருக்கும் அவரது சீடர்களுக்கும் இடையிலான உரையாடல்கள் தோழமையோடும் தர்க்கபூர்வமாகவும் அமைந்தன. புத்தருக்கும் ஆனந்தருக்கும் இடையிலான உரையாடல்களைக் கவனித்தால் புரியும். அங்கே காலங்காலமாக மனனம் செய்து பின்பற்றத்தக்க சூத்திரங்கள் கையளிக்கப்படவில்லை. மாறாக உலகியல் குறித்தும் அறமதிப்பீடுகள் குறித்தும் எளிய உரையாடல்களே நிகழ்ந்தன. சங்கத்தில் சேரக்கூடாது என விலக்கப்பட்டவர்கள் யாருமில்லை. அங்குலிமாலா என்னும் திருடரில் இருந்து தோட்டிப் பெண் வரை அனைவரும் சங்கத்தில் சேர்க்கப்பட்டனர். தர்க்கம், தோழமையுடன் கூடிய ஆசிரிய– மாணவ உறவு, கல்வியைப் பரவலாக்கல் ஆகியவற்றை பௌத்த சங்கங்களே முன்வைத்தன. எனவே இன்றைய வறட்டுத்தனமான கல்விமுறைக்கான மாற்றாக முன்வைக்கப்பட வேண்டியது குருகுலக் கல்வி முறையல்ல, பௌத்த சங்க மாதிரிகளே.

– சுகுணா திவாகர்

ஒரு மனிதனுடைய தர்மம் அல்லது சுபாவமான பழக்க வழக்கங்கள், அவனையுமறியாமல் இன்னொரு மனிதனை வடுப்படுத்தும் சாதனங்களாகியும் விடுகின்றன. ராமன் தன் தர்மத்தைக் காப்பாற்ற முயல முயல, லட்சுமணன், பரதன், ஊர்மிளை, சீதை, வாலி, ராவணன் முதலிய பலருடைய வாழ்க்கைகள் வெவ்வேறு விதங்களி.ல் நிலைகுலைந்து சிதறிப் போயின. – ஆதவன்

ஆணுக்கும் பெண்ணுக்குமான இனக்கவர்ச்சியின் உணர்வுகள் பொதுவாக இருந்தாலும் உடற்கூற்று ரீதியாக பெண்ணே அதிக பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது. கர்ப்பப்பை, தாய்மை, பாசம் போன்ற அகவயமான உணர்வுகள் அவளை குடும்பம் என்கிற நிறுவனத்தோடு காலங்காலமாக இணைத்துப் போடுகிறது. குழந்தையைப் பெற்றுக் கொள்ளவும் அதைப் பார்த்துக் கொள்ளவுமான கடமை ஆணை விட பெண்ணுக்கே அதிகமாக போதிக்கப்பட்டிருக்கிறது. மாறாக ஆணுக்கு இதில் அதிக பொறுப்பில்லை. இதனாலேயே பெண் தன் கர்ப்பப்பை குறித்த பிரக்ஞையையும் பயத்தையும் பொறுப்பையும் தொடர்ந்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நிலவுடைமைச் சமுதாய சிந்தனையைத் தொடர்ந்து தன்னுடைய வாரிசு குறித்த அடையாளத்தை நிச்சயித்துக் கொள்ளவும் சொத்தை பாதுகாத்துக் கொள்ளவும், திருமணம், குடும்பம் என்று உருவாக்கப்பட்டிருக்கும் ஆணாதிக்க கற்பிதங்களுக்கு பெண் பிணைக்கப்பட்டிருக்கும் சூழல் தொடர்ந்து கொண்டேயி ருக்கிறது. – சுரேஷ் கண்ணன்



யாழ்ப்பாணம் சோனகதெரு வடக்கு பகுதி கிராமிய சிவில் பாதுகாப்புக் குழுவின் விசேட கூட்டம் பொலிஸ் சிவில் அதிகாரி வி.தர்மவம்ச தலைமையில் பொம்மைவெளி இணையும் கரங்கள் சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது. (105)

# நாய்க்கடிக்கு இலக்காவோர் குடாநாட்டில் அதிகரிப்பு

## -ஒரே நாளில் 30 பேர் போதனாவைத்தியசாலையில் அனுமதி-


(யாழ்ப்பாணம்)

நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெறுவோர் தொகை சடுதியாக யாழ். மாவட்டத்தில் அதிகரித்திருப்பதாக வைத்திய சாலைப்புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

வளர்ப்பு நாய்கள் மற்றும் கட்டாக்காலி தெரு நாய்கள் போன்றவற்றினால் கடியுண்டவர்களின் எண்ணிக்கையே இவ்வாறு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா வைத்திய சாலையில் மட்டும் இவ்வாறு நாய்க்கடிக்கு இலக்காகிய சுமார் 30 பேர் வரை சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில சிறுவர்களும் முதியவர்களும் அடங்குகின்றனர் வீதியோரங்களில் திரியும் கட்டாக்காலி நாய்கள் வழியால் செல்லும் சிறுவர்களையும் மற்றும் வயோதிபர்களையும் கடித்ததன் காரண மாகவும் பல சிறுவர் களும், முதியவர்களும் இவ் வாறு சிகிச்சைக்கு அனும திக்கப்பட்டதுடன் இதேவேளை இலங்கையில் கட்டாக்காலி நாய்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு காத்திர மான நடவடிக்கை இல்லாததன் காரணமாக நாய்கள் பெருக்க மடைந்து இவ்வாறான பாதக நிலை ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)



நெல்லியடி ஹற்றன்நஷனல் வங்கிக் கிளையில் கடந்த சனிக்கிழமை சிங்கிதி சேமிப்பு மாதத்தை முன்னிட்டு சித்திரப் போட்டி நடைபெற்றது. இதற்கு மத்தியஸ்தம் வகித்தவர்களையும் மற்றும் வங்கி ஊழியர்களையும் காணலாம்.

# உளவியல் நிபுணர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

சுகாதார அமைச்சில் உளவியல் நிபுணர் பதவி தரம் II இற்கான வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமையாக பல்கலைக்கழகத்தில் உளவியல் சம்பந்தமான விசேட பட்டம் மற்றும் உள்வியல் தொடர்பான பட்டப்படிப்பின் பட்டம் பெற்றிருத்தல் அத்துடன் க.பொ.த சா.த பரீட்சையில் ஆங்கிலப்பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் தொழில்சார் தகைமையாக 2 வருட அனுபவமும் தேவை. விண்ணப்பதாரி இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல்,உள ரீதியான தகுதியுடன் சிறந்த நற்பண்புடையவராகவும், 21-35 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். பதவி நிரந்தரமானது,ஓய்வூதியத்திற்குரியதுமாகும் எழுத்துப்பரீட்சையான வினாத்தாள் நுண்ணறிவுப் பரீட்சையும். பொது அறிவுப்பரீட்சையும் நடைபெறும்.

பரீட்சைக்கட்டணம் 500ரூபாவாகும். விண்ணப்பங்கள் பதி[illegible] தபால் மூலம் செயலாளர் (ப[illegible] பாளர் நிர்வாகம் பிரிவு 06) சுகாதார அமைச்சு 385, வண .பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கடித உறையின் இடது மேல் மூலையில் உளவியல் நிபுணர் பதவிக்கான விண்ணப்பம் என குறிப்பிடல் வேண்டும்மாதிரி விண்ணப்ப படிவம் மற்றும் மேலதிக விபரங்களை 17.10.2013 அரச வர்த்தக மானியை பார்வையிடலாம். (105)

# தாண்டிக்குளத்தில் விதை நெல் அறிமுகம்

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழுள்ள வவுனியா தாண்டிக்குளம் அரச விதை உற்பத்திப் பண்ணையில் நல்லின விதை நெல் அறிமுகமும் ஏல விற்பனையும் நாளை நடைபெறவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.சகீலாபானு தெரிவித்துள்ளார்.

நெல் இனங்களை அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும் என்பதுடன், ஏலத்தில் நெல்லை கொளவனவு செய்ய விரும்புவர்கள் வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள வவுனியா பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10 ஆயிரம் ரூபா செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

மேலும் ஏலத்தில் எடுப்பவர்கள அன்றையதினமே அதற்குரிய பணத்தைச் செலுத்தி பண்ணையிலிருந்து நெல்லை எடுத்து செல்லலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

# 15 ஆவது வருடமாகவும் இராஜேஸ்வரன் தலைவராக தெரிவு

(வவுனியா)

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவராக எஸ்.ரி.கே. இராஜேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

15ஆவது வருடமாக வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவராக இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 15ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை வவுனியா அருந்ததி ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பதவிகளுக்கான தேர்வு இடம்பெற்றது. இதன்போது செயலாளராக கே.சிவஞானமும் பொருளாளராக ஏ.ரசீமும் உபதலைவராக எம்.விஜயரட்ணமும் உப செயலாளராக பி.காமராஜாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன், வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், அ.தியாகராஜா மற்றும் ஐ.இந்திரராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.



# பாதிப்புக்குள்ளானவர்களுக்கு தொழில் வழங்கும் "சிவனருள் இல்லம்"

சிவனருள் இல்லமானது 'பாதிப்புக்குள்ளான உறவுகளுக்கான நிலைத்து நிற்கக் கூடிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல்' எனும் தனது தொலைநோக்குடன் செயற்பட்டு வருகின்றது.

இக்கனவினை நனவாக்கும் பொருட்டு அது 'வியாபாரரீதியாக சாத்தியமான சமூக பொருளாதார தொழில் முயற்சிகளூடாக பாதிப்புக்குள்ளான எம் உறவுகளுக்கான நிலைத்து நிற்கக்கூடிய தொழில் வாய்ப்புக்களையும் அதன் வழியான வாழ்வாதாரத்தையும்' உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக உருத்திரபுரம் (டி7) கிளிநொச்சியில் 2012 இல் ஸ்தாபிக்கப்பட்ட சிவனருள் தொழிற்பயிற்சி உற்பத்தி மையத்தினூடாக முதற்கட்டமாக வாழ்வாதார உதவி நாடி நின்ற 43 மகளிர் உட்பட 50 எம் மக்களுக்கு நேரடியான வேலை வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளதுடன் அதனை 100 வரையாக விரிவாக்க எண்ணியுள்ளது. இத்தொழிற்சாலையானது'சிவனருள உற்பத்திகள்' என்ற வியாபார பெயரில் தரமான உணவுசார் உற்பத்திப்பொருட்களை நியாய விலையில் சந்தைப்படுத்தி வருகின்றது. இத்தகைய இரண்டாவது முயற்சி ஒன்று புதுக்குடியிருப்பில் மெற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பி.ரி.கே. பேகர்ஸ் இந்நிறுவனத்திலும் திம்பிலியில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள காணியில் அமையவுள்ள உணவுப் பொருள் உற்பத்தி நிலையத்தினூடாகவும் ஆதரவை நாடி நிற்கும் மக்களுக்காக 30 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க உருவாக்க எண்ணம் கொண்டுள்ளது.

மேலும் முத்தையன்கட்டில் பாற்பண்ணை உள்ளிட்ட ஒன்றினைந்த பண்ணை ஒன்றை அமைத்து இத்தகைய வாழ்வாதார முயற்சிகளை விரிவாக்கவும் சிவனருள் இல்லமானது திடசங்கற்பம் கொண்டுள்ளது.

பயனாளிகளான மக்களை பங்காளிகளாகவும் உரித்துடையோராகவும் கொண்டமையும் இந்தச் சிறு முயற்சிகள் நிலையான வெற்றி பெற்று பெரு விருட்சமாகி மேலும் பலருக்கு வாழ்வளிக்க அனைவரினதும் ஆதரவினை வேண்டி நிற்கின்றது.

புதுக்குடியிருப்பு வெதுப்பகத்தினர்
திருக்கேதீச்சரம் சிவனருள் இல்லம்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

# கல்வி முரசு

விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

பகுதி - I - II

2 மணி



**01) புவியிலிருந்து பெறக்கூடிய பயன்மிகு கனிப்பொருட்கள் பல உள்ளன. அவற்றினை மூலப்பொருளாகக் கொண்டு பல்வேறு வகையான கைத்தொழில்கள் உருவாக்கப்படுகின்றன.**

1. புவியிலிருந்து பெறக்கூடிய பயன்மிகு பொருட்கள் நான்கை பெயரிடுக.
2. உலகில் இரத்தினக்கற்கள் காணப்படும் இடங்களில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
3. இரத்தினக் கற்களின் நிறையை அளக்கப் பயன்படும் அலகு எது?
4. இரத்தினக் கற்களின் சிறப்பியல்புகள் தங்கியுள்ள காரணிகள் எவை?
5. 
   அ. களிமண்ணைப் பயன்படுத்திச் செய்யப்படும் கைத்தொழில்கள் இரண்டு கூறுக.
   ஆ. பதப்படுத்தப்பட்ட களிமண் கொண்டுள்ள சிறப்பியல்புகள் இரண்டு கூறுக.
6. 
   அ. மணல் மண்ணின் பிரதான கூறு எது?
   ஆ. கண்ணாடி உற்பத்திற்குப் பயன்படும் மணல் மண் காணப்படும் பிரதேசங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
7. 
   அ. கல்சியம் காபனேற்றை மூலப்பொருளாகக் கொண்டு மேற் கொள்ளப்படும் கைத்தொழில்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   ஆ.இலங்கையில் சுண்ணாம்பு உற்பத்தியில் காணப்படும் குறைபாடுகள் 2 தருக.
8. i) வானிலையாலழிதல் எனும் பதத்தினை வரையறுக்குக.
   ii) பாறைகள் சிதைவடையும் இரண்டு வழிமுறைகளை குறிப்பிடுக.

**02) இலங்கைக்கு அந்நியச் செலாவணியினை ஈட்டித்தருகின்ற பெருந்தோட்டப் பயிர்களில் இறப்பரும் ஒன்றாகும்.**

1. இறப்பரில் காணப்படும் சிறப்பியல்புகள் 2 தருக. இறப்பர் தாவர தண்டின் எப்பகுதியில் அதிகளவு பால் காணப்படுகிறது?

2. பாற்கலங்களை வெட்டும்போது அவற்றிலிருந்து பால் வெளியேறக் காணரமான செயற்பாடு எது?

3. உறைந்த இறப்பர் பால் கொண்டுள்ள கூறுகள் எவை?

4. அ. இறப்பர் பால் திரட்சியடைவதை தடுக்கும் பதார்த்தங்கள் எவ்வாறு அழைக்கப்படும்.
   ஆ. அவ்வாறான பதார்த்தங்கள் இரண்டு கூறுக.

5. பதப்படுத்தப்பட்ட இறப்பர் பால் நான்கு வகைப்படும் அவை எவை?

6. கிறேப் இறப்பர் உற்பத்தியின்போது வெளிற்றியாகப் பயன்படும் இரசாயனப் பதார்த்தம் எது?

7. அ. இறப்பரில் காணப்படும் சில இயல்புகள் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறான இயல்புகள் மூன்று தருக.
   ஆ. இறப்பரிலுள்ள இயல்புகளை மாற்றும் முறை எவ்வாறு அழைக்கப்படும்.

8. அ. இறப்பர் பாலிலுள்ள இறப்பரின் செறிவை அளக்கப் பயன் படும் உபகரணம் எது?
   ஆ. மரத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பால் எவ்வளவு நேரத்தினுள் திரட்சியடைகிறது?

**03) இன்றைய நவீன உலகில் கனியநெய்யின் கைத்தொழில் பயன்பாடு பெரிதும் இன்றியமையாததாகும்.**

1. அ. பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் 4 கூறுக.
   ஆ. பெற்றோலில் அடங்கியுள்ள மூலகங்கள் எவை?

2. அ. L.P வாயு என்பதன் விரிவாக்கத்தினை எழுதுக.
   ஆ. இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் எது?

3. அ.சேர்வையொன்றிலுள்ள காபனின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அச்சேர்வையின் இயல்புகளில் எவை அதிகரிக்கின்றன?

ஆ. இரும்பிற்குப் பதிலாக பயன்படுத்தப்படும் பிரதியீட்டுப் பொருளொன்றினைக் குறிப்பிடுக.

4. பண்படுத்தப்படாத எண்ணெயின் பக்கவிளைபொருட்கள் சில கீழே தரப்பட்டுள்ளது. அவற்றிலிருந்து உருவாகும் பிரதியீட்டுப் பொருட்கள் ஒவ்வொன்று தருக.
   1) எதிலீன் 2) புறப்பலீன் 3) வீனைல் குளோரைட்டு

5. தரப்பட்டுள்ள சில பிரதியீட்டுப் பதார்த்தங்களுக்கு ஒவ்வோர் அனுகூலமும் பிரதிகூலமும் தருக.
   1) பொலித்தீன் 2) பிளாஸ்ரிக் 3) நைலோன்


6. பல்பகுதியங்கள் என்றால் என்ன? வித்தியாசமான காபன் அணுக்களைக் கொண்ட பதார்த்தங்கள் எம்முறையில் பிரித்தெடுத்து வேறுபடுத்தப்படுகிறது?

7. அ. எதேன் வாயுவின் கட்டமைப்பை வரைக.
   ஆ. இதிலுள்ள காபன்களின் எண்ணிக்கை யாது?

8. புவியில் பெற்றோலியம் எவ்வாறு உருவாகியிருக்கலாம் என்பதை சுருக்கமாக விளக்குக.


## B பகுதி

**04) செப்புச் சல்பேற் கரைசலை காபன் மின் வாய்க்கள் கொண்டு மின் பகுப்பதற்கான அமைப்பை கீழே உள்ள அமைப்பு காட்டு கின்றது.**




1. நேர், மறை மின் வாய்களை X,Y களால் குறிப்பிடுக.
2. செப்புசல்பேற் கரைசலிலுள்ள அயன்கள் எவை?
3. மின்பகுப்பின் போது நடைபெறும் சக்திமாற்றத்தை குறிப்பிடுக.
4. நேர்மின்வாய் அருகில் நடைபெறும் இரசாயன மாற்றத்திற்கான சமன்பாட்டைத் தருக.
5. மறைமின் வாய் அருகில் நடைபெறும் இரசாயன மாற்றத்திற்கான சமன்பாட்டை தருக.
6. செப்புசல்பேற் கரைசல் மின்பகு பொருளாக இருப்பதற்கான காரணம் யாது?
7. இச் செயற்பாட்டின்போது குறிப்பிடத்தக்க அவதானம் யாது?
8. மின்பகாப்பொருட்கள் சிலவற்றை குறிப்பிடுக.
9. மின்பகாப்பொருளுக்கும், மின்பகுபொருளுக்கும் இடையிலான இரு வேறுபாடுகளைத் தருக.
10. எந்த மின் வாய் அருகில் வாயுக்குமிழியை எதிர்பார்க்கலாம்.

05)





மேற்காட்டப்பட்ட மின்சுற்றில் ஒவ்வொரு 2 குமிழினதும் தடை 8Ω ஆகும். வோல்ற் மானி 12V வாசிப்பைக் காட்டியது.

1. மின்குமிழ்கள் A, B எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
2. மின்குமிழ்கள் C, D எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
3. மின்குமிழ் C பழுதடைந்தால் ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
4. மின்குமிழ் A பழுதடைந்தால் ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
5. மின்சுற்றில் விளையுள் தடை யாது?

6. பழுதடைந்த மின்குமிழ் A ஊடுபாயும் ஓட்டம்

| | | |
|---|---|---|
| 1. | A | ........................ |
| 2. | B | ........................ |
| 3. | C | ........................ |
| 4. | D | ........................ |


7. நான்கு குமிழும் நல்ல நிலையில் இருக்க A மானி காட்டும் வாசிப்பு யாது?




கடத்தியூடாக மின் பாயும்போது கடத்தியை சூழ காந்தப்புலம் உருவாகும் என்ற கருத்தை முன்வைத்தவர் எர் ஸ்ரார் என்ப வராவார். கடத்தியூடாக மின் பாயும் போது அதைச் சூழ உருவாகும் காந்தப்புலக் கோலம் அருகே காட்டப்பட்டுள்ளது.


1. கடத்தியூடாக எத்திசையில் மின்பாய்கின்றது? (உள் நோக்கியா - வெளிநோக்கியா)
2. கடத்தியை சூழ உருவாகும் காந்தப்புலத் திசையை அறிய உதவும் விதி யாது?
3. புலத்திசையை அமைப்பில் குறித்துக் காட்டுக.

**B. இக்கோட்பாட்டின் அடிப்படையில் உருவாகியதுதான் மின்காந்தம். மின்காந்தத் தயாரிப்புக்கு காவலிடப்பட்ட செப்புக்கம்பிச் சுருள் மெல்லியரும்பு அகணி இரண்டும் அவசியமாகும்.**





1. வரிச்சுருளில் மின்பாயும் திசையை குறித்துக் காட்டுக.
2. X, Y ஆகிய காந்தமுனைவுகளை அறிக.
3. காந்த முனைவுகளை இனமறிவதில் நீர் பயன்படுத்திய விதி யாது?
4. மின் காந்த அளவைப் பாதிக்கும் காரணிகள் இரண்டு தருக.
5. இங்கு செப்புக்கம்பியே பயன்படக்காரணம் யாது?
6. மின்காந்தம் பயன்படும் இரு சந்தர்ப்பங்கள் தருக.

**07) வீட்டு மின்சுற்றில் உள்ள கூறுகளைக் கொண்ட குற்றிப்படம் அருகே தரப்பட்டுள்ளது.**




1. வீட்டு மின்வழங்கலின் வோல்ற், மீடிறனை தருக
2. X, B,C,D,E என்பவற்றைத் தருக.
3. B இன் பயன்பாடு என்ன?
4. B, Y இல் உயிர், நொதுமல் கம்பிகள் எவை?
5. எந்த ஒரு மின் சாதனமும் எம்மூடாக புவித் தொடுப்பு ஆகினால் தொழிற்படும் அமைப்பு எது?
6. விளக்குச் சுற்றுக்குச் செல்லும் X, Y தொடுகை யுறின் தொழிற்படும் அமைப்பு எது?
7. விளக்குச் சுற்றில் சாதாரணமாகப் பயன்படும் மின் வடத்துக்குரிய குறியீட்டு இலக்கம் என்ன?

**08)**




A,B,C ஐ இனங்காண்க.

**09) ஒரு சந்தர்ப்பத்தில் 100W வலுவுடைய 8 மின்குமிழ்களும் 1500 W வலுவுடைய மின் அடுப்பும் 2 மணி நேரம் வேலை செய்தால்,**
a. விரயமாகும் மின்சக்தி அளவை KWh அறிக.
b. விரயமாகும் மின்சக்தி அளவை Kj அறிக.

**10)** 1000g திணிவுடைய நீரின் வெப்பநிலையை $30^0C$ இலிருந்து $100^0C$ இற்கு உயர்த்த அமிழ்ப்பு வெப்பமாக்கி ஒன்றிற்கு 5 நிமிடங்கள் எடுத்தது. (நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $4200 jkg^{-1}\,{}^0C^{-1}$)
a. வெப்பமாக்கியின் வலு யாது?
b. இக்கணித்தலின் உமது எடுகோள் யாது?

**11)** அணுக்கள் இணைந்து மூலக்கூறுகளை உருவாக்குகின்றன.
i) மூலக்கூறுகள் ஒரே இன அணுக்கள் இணைந்ததாகவோ வெவ்வேறு இன அணுக்கள் இணைந்ததாகவோ இருக்கலாம்.

A) மூலக்கூறுகள் உருவாகும்போது அணுக்களுக்கிடையே ஏற்படக்கூடிய பிணைப்பு வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.

B) நைதரசனின் அணுவெண் 7 ஆகும். இரு நைதரசன் அணுக்கள் இணைந்து நைதரசன் மூலக்கூறு உருவாகும்போது (இரு நைதரசன் அணுக்கள் இணைந்து மூலக்கூறு உருவாகும்போது) நைதரசன் அணுக் களுக்கிடையே இலத்திரன்கள் பங்கிடப்படும் முறையைக் காட்ட புள்ளி புள்ளடிப்படம் வரைக.

C) மக்னீசியம் கந்தகம் ஆகியவற்றின் அணு எண்கள் முறையே 12 உம் 16 உம் ஆகும். மக்னீசியம், கந்தகம் ஆகியவை உறுதியான அயனை உருவாக்கும்போது அவற்றின் இலத்திரன் நிலையமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுக.

d) உமக்கு நீரில் கரையக்கூடிய ஒரு சேர்வை தரப்பட்டுள்ளது. இச்சேர்வையில் அணுக்களுக்கிடையே உள்ள பிணைப்பின் தன்மையை அறிவதற்கு நீர் மேற்கொள்ளும் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக.

ii) ஒரு அணுவின் இலத்திரன் நிலையமைப்பிற்கும் அவ் அணுவைக் கொண்ட மூலகம் ஆவர்த்தன அட்டவணையில் இருக்கும் நிலைக்கும் இடையே தொடர்பு உள்ளது.
M என்னும் மூலகம் மூன்றாம் ஆவர்த்தனத்திலும் மூன்றாம் குடும்பத்திலும் உள்ளது. அதன் கருவில 14 நியூத்திரன்கள் உண்டு.

a) அம் மூலகத்தின் அணு எண், திணிவெண் ஆகியவற்றை தருக.

b) அம்மூலகம் ஒட்சிசனுடன் தாக்கமடைந்து ஒட்சைட்டை உருவாக்கு வதற்கான ஈடுசெய்த சமன்பாடு தருக.

iii) மக்னீசியம் ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்துடன் தாக்கமடைந்து ஐதரசன் வாயுவை வெளியேற்றும்.

a) ஐதரசன் வாயுவை இனங்காண சோதனை ஒன்றைக் குறிப்பிடுக.

b) நாடாநிலையில் உள்ள மக்னீசியா தூள் நிலையில் உள்ள மக்னீசியமா விரைவாக ஐதரோக் குளோரிக் அமிலத்துடன் தாக்கமடையும் என்பதை அறிவதற்கு நீர் அமைக்கும் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக.

**12) விஞ்ஞான விளக்கம் தருக.**

1) அண்மையில் உள்ள பொருட்களை தெளிவாகப் பார்க்க முடியாதவர்கள் குவிவு வில்லை கொண்ட மூக்குக் கண்ணாடியால் அண்மையில் உள்ள பொருட்களை தெளிவாகப் பார்க்கலாம்.

2) வெல்ல நீரிழிவு உள்ளவர்கள் மாப்பொருள் நிறைந்த உணவுகளை தவிர்த்தல் நல்லது.

3) தொலைவில் இடிமின்னல் ஏற்படும் போது மின்னல் பனிச்சீட்டை அவதானித்து சொற்ப நேரத்தின் பின்னரே இடி ஒலி கேட்கிறது.

4) மக்னீசியம் ஒட்சைட்டை காபனுடன் சேர்த்து வெப்பமேற்றுவதன் மூலம் மக்னீசியத்தை பிரித்தெடுக்க முடியாது. ஆனால் ஈய ஒட்சைட்டை காபனுடன் சேர்த்து வெப்பமேற்றுதல் மூலம் ஈயத்தைப் பிரித்தெடுக்க லாம்.

5) நீரல் இடப்பட்ட உருளைக்கிழங்குத் துண்டுகள் விறைப்பாகக் காணப்படு கின்றன. ஆனால் செறிவான உப்புக்கரைசலில் இடப்பட்ட உருளைக் கிழங்கு துண்டுகள் மென்மையாகக் காணப்படுகின்றது.

6) இனிமையான சுவையுடைய தோடம்பழ வித்துக்களில் இருந்து உருவாக்கப்பட்ட தோடம்பழ மரங்கள் சில சமயம் புளிப்பான சுவை யுடைய தோடம்பழங்களை தருகின்றன. ஆனால் நல்ல இன கிளையை ஒட்டுதல் மூலம் விருத்தி செய்யப்பட்ட தோடம்பழ மரங்களில் இருந்து கிடைக்கும் பழங்கள் எப்பொழுதும் இனிப்பான சுவையுடையதாக உள்ளது.

**13)**
1) முற்றிய வாழைக்காய்களை பழமாக்குவதற்கு மனிதன் பல நடவடிக்கைகளை கையாள்கின்றான். ஒரு முறை புகையூட்டுதல் ஆகும். சிலர் வைக்கோலை எரித்து அதன் புகையைப் பயன்படுத்துகின்றனர். சிலர் ஊதுபத்திகளை எரித்து அதன் புகையைப் பயன்படுத்துகின்றனர்.

a) வாழைக்காயில் பெருமளவில் காணப்படும் உணவின் கூறையும் வாழைப்பழத்தில் பெருமளவு காணப்படும் உணவின் கூறையும் தருக.

b) நீரானது குறிப்பிட்ட ஒரு கூறு வாழைக்காயிலும் வாழைப்பழத்திலும் வெவ்வேறு அளவில் உள்ளது என்பதை எடுத்துக்காட்ட எளிய சோதனை தருக.

c) வாழைப்பழத்தில் வித்துக்கள் காணப்படுகின்றன. ஆனால் இவ்வித் துக்களில் இருந்து வாழைமரத்தை உருவாக்க இயலாது. இதற்கான காரணத்தை விளக்குக.

ii) வாழைக்காயை பழுக்க வைப்பதில் எவ்வகை புகை பழுத்தலை விரைவுபடுத்தும் என்பதை அறிய ஒரு மாணவன் பரிசோதனையில் ஈடுபடுகின்றான்.
a) அவன் முன்வைத்த கருதுகோள் யாது?

b) வாழைக்காய்கள் பழுத்துள்ளன என்பதை அவன் அறிவதற்கு உதவும் காட்டி ஒன்றைக் குறிப்பிடுக.

c) வாழைக்காய்களை இரு தொகுதிகளாக எடுத்துப் பரிசோதனையில் ஈடுபடும் போது இரு தொகுதிக்கும் சமநிபந்தனைகளை அளிப்பதற்கு அவன் யாது செய்யவேண்டும்?

d) இப்பரிசோதனையில் மாணவன் மேற்கொண்ட இரு எடுகோள்களைத் தருக.

iii) காய்கள் பழங்களாக மாறுவதற்கு நொதியங்கள் உதவுகின்றன.
a) நொதியங்கள் எவ்வகையான ஊக்கி என அழைக்கின்றோம்?
b) எமது உணவுச் சமிபாட்டில் உதவும் இரு நொதியங்களின் பெயர் தருக.

# தமிழைப் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்

## முன்னாள் அரச அதிபர் இராசநாயகம்



(யாழ்ப்பாணம்)

கடந்த கால நிகழ்வுகள் மாத்திரமின்றி நிகழ்கால நிகழ்வுகளும் இந்தத் தேவையை வலியுறுத்தி நிற்பதாகவும் தமிழைப் பாதுகாக்க வேண்டிய காலத்தில் உள்ளதாக முன்னாள் அரச அதிபரும் மகோதேவ சைவச் சிறுவர் இல்லத்தின் (குருகுலம்) தலைவருமான தி. இராசநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் ஜெயந்தி நகரில் உள்ள குருகுலம் சிறுவர் இல்லத்தின் வளரும் 12 குழந்தைகளுக்கு தமிழ் முறைப்படி கொண்டாடப்பட்ட பிறந்தநாள் நிகழ்வில் தலைமை தாங்கிப் பேசிய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவடட்ட அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் அரச அலுவலகங்களில் தமிழ் மொழியை பயன்படுத்துவது தொடர்பில் நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்டத் தமிழச்சங்கம் ஊடாக மேற்கொண்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் தமிழில் திருமணம் செய்தல், தமிழில் ஆலயங்களில் பூசை செய்தல், தமிழில் மாணக் கிரியைகளைக் கொண்டுதல் எனப் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் ஈடுபடுகின்றது.

குருகுலம் சிறுவர் இல்லத்தில் தொடர்ச்சியாக தமிழ் முறைப்படியே பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன இன்றி ஆங்கில முறையில் மெழுகுதிரியை அணைத்து கேக் வெட்டப்பட்டு கொண்டாடுவதற்கு பதிலாக தமிழ் முறையில் விளக்கை ஏற்றி அமுதூட்டுதல் மேற்கொள்ளப்படுகின்றது. ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்பாக கொண்டாடபபட்ட பண்டைத் தமிழர் முறை இதுவாகும்.

இந்த நிகழ்வானது எங்கள் வாழ்க்கையில் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற வார்த்தைக்கு செயலுருவம் கொடுக்கின்ற வகையில் அமைந்திருக்கின்றது. இது ஒரு மகத்தான பணி என்றும் இதற்கு தமிழ்ச் சங்கம் பெரும் பங்களிப்பு செய்துள்ளது.

கடந்த காலத்தில் மொழிக் கலப்பு காரணமாக பல மொழிகள் வழக்கிழந்திருக்கின்றன கலப்பு மிகவும் ஆபத்தானது அது தனித்து வமான மொழியை மெல்ல மெல்ல அழித்துவிடும்.

வருங்காலத்தில் தூய தமிழைப் பாவிப்பது அவசியமானது இப்பொழுது ஆங்கில மொழியுடன் சிங்கள மொழிகூட தமிழ் மொழியுடன் கலந்து பேசப்படுகிறது எனக் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்திலேயே தூய தமிழ் பேசப்படுகின்றது இப் பொழுது அதிலும் ஆங்கிலமும் சிங்களமும் கலக்கப்படுகிறது.

இந்த நிலைப்பாடுகளுக்கு இடம்கொடுக்காமல் எல்லோரும் இணைந்து தமிழ்மொழி ஆக்க நடவடிக்கையில் முற்றுமுழுதாக ஈடுபடவேண்டும் அலுவலகங்கள் மற்றும் கல்விச்சாலைகள் என்பன இந்தப் பணியில் திட்டமிட்டு ஈடுபடவேண்டும் என்றார்.

நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் விசேட ஆணையாளர் நித்தியானந்தன், கிளிநொச்சி மாவட்ட காணி ஆணையாளர் பத்மநாதன், கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கச் செயலாளர் இறைபிள்ளை முதலியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தமிழ்நெறியில் பிறந்தநாள் கொண்டாடுவது எப்படி என்ற வழிகாட்டிக் கையேடு வெளியிடப்பட்டது. அத்துடன் குருகுலம் சிறுவர் இல்லக் குழந்தைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.



மாந்தை கிழக்கு பாலி ஆறு தொடக்கம் கரும்புள்ளியான் வரைக்கும் கிரவல் மண் போடப்பட்டு சுமார் 3 கிலோமீற்றர் தூரம் வீதிப் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகிறது (140)

# வெடி பொருட்களுடன் இரு சகோதரர்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெடி மருந்துகளை தம்வசம் வைத்திருந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு சகோதரர்களை பலாங்கொட பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து 25 கிலோ கிராம் வெடி மருந்தும் ஆயிரத்து 200 கிலோ கிராம் அமோனியமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் பலாங்கொட மொலபுரே ரஜவக்க பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர்.

இவர்கள் கருங்கல் உடைக்கும குவாரி ஒன்றை நடத்தி வந்துள்ளனர். அதற்கான அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட பிறகும் தம்மிடம் இருந்த வெடி மருந்துகளை மீள கையளிக்கவில்லை.

கைது செய்யப்பட்டவர்கள் பலாங்கொட நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

# தேனிலவுக்காக ஊட்டி சென்ற யாழ்.மாப்பிள்ளை நீரில் மூழ்கி பலி

கேரளா)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரீகன் என்ற இளைஞர் இந்தியாவின் ஊட்டி பிரதேசத்தில் உள்ள நீர்வீழ்ச்சி சுழலில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

தனது மனைவியுடன் தேனிலவுக்காக ஊட்டி சென்றிருந்த போது இந்த விபத்து நேர்ந்துள்ளது.

ஜெர்மனியில் பொறியியலாளராக பணியாற்றி வந்த 29 வயதான ரீகன் என்பவருக்கும் ஜான்சி என்பவருக்கும் கடந்த புதன்கிழமையன்று சென்னையில் வைத்துத் திருமணம் நடந்துள்ளது.

திருமணத்திற்குப் பின்னர் மனைவி மற்றும் உறவினர்கள் சிலருடன் ஊட்டிக்கு தேனிலவுக்காக இவர் சென்றுள்ளார்.

சனிக்கிழமை இரவு முதுமலை புலிகள் காப்பகம் சென்று பார்த்து விட்டு இரவு அங்கேயே தங்கினர்.

பின்னர் நேற்று முன்தினம் ஊட்டிக்கு வந்தனர். வழியில் கல்லட்டி நீர்வீழ்ச்சியில் அனைவரும் குளிக்கப் போயுள்ளனர். தொடர் மழை காரணமாக அங்கு பாறைகள் பாசி படர்ந்து இருந்தன. இதனால் ஒரு பாறையில் ரீகன் ஏறியபோது அது வழுக்கி கால் தடுமாறி கீழே இருந்த தண்ணீரில் விழுந்துள்ளார்.

தண்ணீர் வேகமாக போய்க் கொண்டிருந்ததாலும், சுழல் இருந்ததாலும் அதில் சிக்கிக் கொண்ட ரீகன் உதவிகோரி அலறினார். அவரது மனைவி உள்ளிட்டோரும் உதவி கேட்டு கதறினர். தீயணைப்புத் துறைக்கும் தகவல் போனது. ஆனால் ரீகன் தண்ணீருக்குள் போய் விட்டார். தீயணைப்புப் படையினர் நீண்ட நேரம் தேடியும் ரீகனை கண்டுபிடிக்க முடியவில்லை. நீண்ட போராட்டத்திற்குப் பின்னர் ரீகன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# 70 இலட்சம் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் மீட்பு

இலங்கையின் தெற்கில் மாலபே பிரதேசத்தில் ஒரு தொகை 2000 ரூபா போலி நாணயத தாள்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

குற்ற விசாரணைத் திணைக் களத்தின் விசேட பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் பெறுமதி சுமார் ஏழு மில்லியன் (70 இலட்சம்) என பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் இவற்றின் தொடர் இலகம 67799159 எனவும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு போலி 2000 ரூபா நாணயத்தாள்கள் பல அச்சிட்டு புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

எனவே 67799159 என்ற தொடரிலக்கத்தையுடைய 2000 ரூபா நாணயத் தாளாயின் அது போலி நாணயத்தாளாக இருக்கக்கூடும் எனவும், அதை உடனடியாக அருகில் உள்ள பொலிஸ நிலையத்தில் ஒப்படைக்குமாறும் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..................................................

முகவரி :- ..................................................

பிறந்த ஆண்டு :- ..................................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................



யாழ்ப்பாணம் ஈசிற்றி ஆங்கிலக் கல்லூரியில் பயின்று வெளியேறும் 10ஆவது பிரிவு மாணவர்களுடன் கல்லூரி தலைவர் லயன். ஜெ. ரஜீவன் மற்றும் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. ஜெயச்சந்திரமூர்த்தி ஆகியோர் காணப்படுகின்றனர்.

# வெள்ளத்தில் மிதக்கும் 4200 கிராமங்கள்

## ஆந்திராவில் 42 பேர் பலி



(ஆந்திரா)

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ஆந்திராவில் 4200 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ஆந்திராவில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது, இந்த வெள்ளம் ஊருக்குள் புகுந்துள்ளதால் 16 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

விசாகப்பட்டினம், விஜயநகரம், மேற்கு கோதாவரி, ஸ்ரீரிகாகுளம், மெடக், கரிம்நகர், கம்மம், பிரகாசம் உட்பட 14 மாவட்டங்களில் விவசாய பயிர்கள் முற்றிலும் தண்ணீரில் மூழ்கி அழிந்தது.

மேற்கு கோதாவரியில் 1150 வீடுகள் இடிந்து தரை மட்டமானது, இரண்டரை இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்ட நெல் பயிர்கள் மூழ்கியது.

இதே போன்று மெடக், கரிம்நகர், கம்மம் மாவட்டத்தில் நெல், பருத்தி, மிளகாய், மக்காச்சோளம் தண்ணீரில் மூழ்கி அழுகியது.

மழையால் மாநிலத்தில் ரூ. 1727 கோடி நட்டம் ஏற்பட்டு இருப்பதாக வருவாய்துறை மந்திரி ரகுவீராரெட்டி அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளம் பாதித்த நல்கொண்டா மாவட்டத்தை ஆய்வு செய்த பின் நிருபர்களிடம் கூறுகையில், மாநிலத்தில் 14 மாவட்டங்களில் உள்ள 521 மண்டலத்தில் 4200 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளது.

22 ஆயிரம் வீடுகள் இடிந்து சேதம் அடைந்து உள்ளது, 42 பேர் உயிர் இழந்துள்ளனர். பாதிகப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணப் பணிக்காக ரூ.1600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சீரமைப்பு பணிகள் முழு வீச்சில் நடந்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் விஜயநகரம் மற்றும் விஜயவாடா பகுதியில் பல் வேறு இடங்களில் தண்டவாளத்தில் தண்ணீர் தேங்கி உள்ளதால், கோரப்பள்ளி எக்ஸ் பிரஸ், திருப்பதி எக்ஸ்பிரஸ்,புவனேஸ்வரம் எக்ஸ்பிரஸ் உட்பட 7 ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது.

# உயரமான மனிதருக்கு விரைவில் திருமணம்



2.51 மீற்றர் (8 1/4 அடி) உயரத்துடன் உலகின் மிக உயரமான மனிதராக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளவர் சுல்தான் கோசென் என்ற துருக்கி நாட்டில் வாழும் விவசாய குடும்பத்தை சேர்ந்த இவர் திருமணம் செய்ய விரும்பி தகுந்த பெண்ணை தேடி வந்தார்.

ஆனால், இவரது உயரத்தை கண்டு மிரண்ட பல பெண்கள் இவரை திருமணம் செய்ய மறுத்து விட்டனர். தற்போது தனது 30ஆவது வயதில் மெர்வோ டிபோ என்ற பெண்ணை சந்தித்துள்ளார்.

முதல் சந்திப்பிலேயே காதல் வயப்பட்ட மெர்வோ டிபோ, சுல்தான் கோசென்னை திருமணம் செய்துக் கொள்ள அவர் சம்மதித்துள்ளார்.

இதனையடுத்து சுல்தான் கோசென் அவசர கதியில் திருமண ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

தன்னை விட 2 1/2 அடி (30 அங்குலம்) உயரம் குறைவான காதலியை மணம் முடிக்கும் விழாவுக்கு ஏராளமான வி.ஐ.பி.க்களையும் இவர் அழைத்துள்ளார்.

திருமண உடைகள் உள்ளிட்ட எல்லா வேலையையும் முடித்து விட்ட சுல்தான் கோசென் மனைவியை அழைத்துக் கொண்டு ஊர்வலம் போக உயரமான காரை தேடிக் கொண்டிருக்கிறார்.

# உலகின் மிகப்பெரிய விமானநிலையம்



பிரபல சுற்றுலா நகரமாக திகழும் துபாயில் உலகின் மிகப்பெரிய விமான நிலையம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

அல் மக்தூம் சர்வதேச விமான நிலையம் என பெயரிடப்பட்டுள்ள இந்த விமான நிலையத்தில் 2010 ஜுன் மாதத்தில் இருந்து சரக்கு போக்குவரத்து மட்டுமே கையாளப்பட்டு வந்தது.

இங்கிருந்து 50 கி.மீற்றர் தூரத்தில் உள்ள பழைய விமான நிலையத்தை கடந்த (2012) ஆண்டில் மட்டும் சுமார் ஐந்தே முக்கால் கோடி பயணிகள் பயன்படுத்தியுள்ளனர்.

கட்டுமானம் மற்றும் கட்டமைப்பு பணிகள் இன்னும் முழுமையாக நிறைவடையாத அல் மக்தூம் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் முதல் பயணிகள் விமானம் தரையிறங்கியது.

பணிகள் நிறைவடைந்த பின்னர் 5 ஓடுபாதைகள் கொண்ட இந்த புதிய விமான நிலையம் ஆண்டுக்கு 16 கோடி பயணிகளையும் 1.2 கோடி தொன் சரக்குகளையும் கையாளும் என எதிர் பார்க்கப்படுகிறது

# பாகிஸ்தான் மீதான அமெரிக்க தாக்குதலை படமாக்கிய இம்ரான்கானின் மனைவி

## நாளைக்கு திரைக்கு வருகிறது



பாகிஸ்தானில் மலைப் பகுதியில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்க உளவுத்துறை டிரோன் எனப்படும் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல்களை நடத்தி வருகிறது. அதில் தீவிரவாதிகளுடன் அப்பாவி பொது மக்களும், குழந்தைகளும் கொல்லப் படுகின்றனர்.

இதற்கு பாகிஸ்தான் மக்களிடம் கடும் எதிர்ப்பு கிளம்பியுளளது. இந்தத் தாக்குதலை நிறுத்தும்படி வலியுறுத்தி வருகின்றனர். பிரதமர் நவாஸ்செரீப், எதிர்க்கட்சி தலைவர் இம்ரான் கான் உள்ளிட்டோரும் இதே கருத்தையே தெரிவிக்கின்றனர்.


ஆனால் இத்தாக்குதலில் தீவிரவாதிகள் மட்டுமே கொல்லப்படுகின்றனர். அப்பாவி பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என அமெரிக்கா மறுத்து வருகிறது. இதை பொய்யாக்கும் வகையில் கிரிக்கெட் வீரரும், பாகிஸ்தான் தெக்ரிக் இன்சாப் கட்சி தலைவருமான இம்ரான் கானின் முன்னாள் மனைவி ஜெமீமா ஒரு ஆவண சினிமாப் படம் தயாரித்துள்ளார்.

அப்படம் நாளை இஸ்லாமாபாத்தில் பொதுமக்கள் மத்தியில் திரையிடப்படுகிறது. அப்படத்தில் அமெரிக்க ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணை வீச்சு நடத்திய முன்னாள் ஒப்ரேட்டர பிரான்டன் பிரையந்த், தாய் மற்றும் குழந்தைகளை இழந்த பள்ளி ஆசிரியர் ரபியுர் ரஷ்மான் ஆகியோரது பேட்டிகள் மற்றும் அனுபவங்கள் இடம் பெற்றுள்ளன.

இவை தவிர 'டிரோ[illegible] தாக்குதலில் பலியான 16 வயது சிறுவன் தரிக அஷிஷின் கண்ணீர கதையும் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சினிமா படத்தை இம்ரான்கானும் பார்க்கிறார். இப்படத்தை பார்த்த பிறகு மக்களின் மனநிலை மேலும் மாறும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# நாய்களுடன் நள்ளிரவில் உலாவரும் ராகுல் காந்தி



இந்தியாவில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்திக்கு தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் இருபபதால் அவருக்கு உச்சகட்ட பாதுகாப்பு அளிககப்பட்டுள்ளது.

அவர் எங்கு சென்றாலும் பாதுகாப்புபடை வீரர்களும் உடன் சென்று அவரை சூழ்ந்து நின்று பாதுகாப்பு அளிக்கிறார்கள்.

ஆனால் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு ராகுல காந்தி டில்லியில் தனது வீடு அமைந்துள்ள ரேஸ் கோர்ஸ் சாலையில் பாதுகாப்பு அதிகாரிகளோ சாரதியே இல்லாமல் தனியாக காரில் சென்ற தகவல் வெளியாகி உள்ளது.

டில்லியைச் சேர்ந்த ஒரு பெண் தனது நண்பர்களுடன் இரவு 10 மணி அளவில் நாய்களுடன் உலா வந்தார். ரேஸ் கோர்ஸ்சாலை சிக்னலில் வந்தபோது அங்கு ஒரு கார் நின்றிருந்தது. காரை ஓட்டி வந்தவர் திடீர் என்று கார் கண்ணாடியை இறக்கி விட்டு பெண்ணிடம் அவரது நாய்க் குட்டி பற்றி பேசினார்.

என்ன உணவு கொடுக்கிறீர்கள்? எப்படி அதன் உடல் நலத்தை பேணுகிறீர்கள்? என்று பெண்ணிடம் விசாரித்தார். அவரைப் பார்த்ததும் அந்தப் பெண்ணுக்கு ஆச்சரியம் காரணம் காரில் இருந்தவர் ராகுல் காந்தி.

சாரதி இருக்கையில் அமர்ந்து அவரே காரை ஓட்டிவந்தார். பாதுகாப்பு அதிகாரிகள் யாரும் இல்லை. காரில் அவருடன் விலை உயர்ந்த பிரவுனி ரக நாய்கள் இருந்தன. ராகுல்காந்தியும் தனது பிரவுனி பற்றி அந்தப் பெண்ணிடம் விவரித்தார்.

# சீனியால் ஆபத்து



நாம். அன்றாடம் பயன்படுத்தும் சீனி நச்சுத் தன்மை வாய்ந்தது என்ற போதிலும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டே வருகிறது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்று தான் சீனி. இது பல அபாயகரமான நோய்களுடன் தொடர்புகொண்டுள்ளது என பல ஆய்வுகளின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நீரழிவு, புற்று நோய் போன்ற பல நோய்களுக்கு வழிவகுக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்து.


சீனியிலுள்ள நச்சுத் தன்மையானது கலோரிஸ் அதிகரிப்பு என்பதைத் தாண்டி மனித இனத்திற்குப் பாதகமான விளைவுகளைத் தருகின்றது என டாக்டர் றொபேட் லூஸ்ரிக் என்பவர் தெரிவித்துள்ளதாக தொலைக் காட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் கனெடிய சுகாதாரத் துறையினர், கனெடிய உணவு உற்பத்தி நிறுவனங்கள் யாவும் உணவுகள் தயாரிக்கின்ற போது எவ்வளவு சீனி அதில் சேர்க்கப்பட்டது என்பது கண்டிப்பாக குறிப்பிட்டிருக்க வேண்டும என‌த் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சமீபத்திய ஆய்வின் படி, சராசரியாக ஒவ்வொரு கனெடியரும் 26 தேயிலைக்கரண்டி சீனியை ஒவ்வொரு நாளும் உட் கொள்கின்றார்கள் எனவும், அதன்படி ஒரு வருடத்திற்கு ஒருவர் 40 கிலோகிறாம் நிறையுள்ள சீனியை உட்கொள்கின்றார்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இதற்கிடையே தாங்கள் எடுத்துக் கொள்ளும் சீனியின் அளவைக் குறைத்துக் கொள்ளும்படி அமெரிக்க அரசு நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# முறை தவறிய குடியேற்றம்; மன்னார் பொன்தீவு கண்டலில் ஆர்ப்பாட்டம்



(மன்னார்)

மன்னார், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கத்தோலிக்க கிராமமான பொன் தீவு கண்டல் கிராம மக்கள் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

அரசியல் ரீதியாக வேற்று மத மக்களைக் குடியமர்த்தும் நட்வடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தக் கண்டன ஆர்ப் பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1866ஆம் ஆண்டு குடியேறிய நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குற்பட்ட பொன்தீவு கண்டல் கிராமத்தில் அரசியல் ரீதியாக மாற்று மதத்தைச் சார்ந்த மக்கள் தற்போது மீள் குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

இதற்கு நானாட்டான் பிரதேச செயலர் துணை போவதாகக் கூறி குறித்த கிராம மக்கள் நேற்றுக்காலை நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு முன் பதாதைகளை ஏந்தியவாறு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில், குறித்த பொன்தீவு கண்டல் கிராம மக்களின் பிரதி நிதிகளுக்கும் மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் எஸ்.சந்திரையாக்கும் இடையில் காலை 10.30 மணியளவில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது மன்னார் நகர சபை முதல்வர் எஸ்.ஞானப்பிரகாசம், நகரசபை உறுப்பினர் இரட்னசிங்கம் குமரேஸ், வட மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி பிரிமூஸ் சிராய்வா மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் இடம்பெற்ற பேர்ச்சுவார்த்தையின் பின் குறித்த பொன்தீவு கண்டல் கிராமத்தில் தற்போது இடம் பெற்று வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதாக நானாட்டான் பிரதேச செயலாளர் உறுதியளித்தார்.

தற்போது காணி வழங்கப்பட்ட வேற்று மத மக்களை மதங்களுக்கிடையில் பிரிவினை வாதம் ஏற்படாதவாறு குறித்த கிராமத்திற்கு அருகாமையில் உள்ள இடங்களில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாக நானாட்டான் பிரதேச செயலர் உறுதியளித்துள்ளார்.

தற்போது குறித்த பொன்தீவு கண்டல் கிராமத்திற்கு அருகாமையில் வேற்று மத மக்களை குடியமர்த்துவதற்காக அரச காணிகள் உள்ளதா என்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

குறித்த காணிகள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் அந்த மக்கள் அவ்விடத்திலேயே குடியேற்றம் செய்யப்படுவார்கள் என பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

## வலி.வடக்கு...

இராணுவத்தினர் உடைத்துத் தரைமட்டமாக்குவதை தாங்கள் கண்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்தார்.

அந்த வீடுகள் உடைக்கப்படுவதை எமமுடன் வந்திருந்த ஊடகவியலாளர்கள் படம் எடுத்தார்கள். அப்போது அங்கு வந்து, தன்னை பிரிகேட் கொமாண்டர் என அறிமுகப்படுத்திக் கொண்ட இராணுவ அதிகாரி ஒருவர் என்னை நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் பாராமல், என்மீதும், என்னுடன் வந்திருந்தவர்கள் மீதும் இராணுவ பலம் பிரயோகிக்கப்படும் என்று அச்சுறுத்தினார் என சரவணபவன் தெரிவித்தார்.

அந்த இராணுவ அதிகாரியுடன் இராணுவ வேலியைக் கடந்து நாங்கள் நின்றிருந்த இடத்திற்கு வந்த ஏழு எட்டு இராணுவத்தினர் படம் பிடித்த ஊடகவியலாளர்களைச் சுற்றி வளைத்து, அவர்களுடைய கமராக்கள், வீடியோ கமராக்கள் என்பவற்றைப் பலவந்தமாக பறித்தெடுத்து, எடுக்கப்பட்டிருந்த படங்களை அழித்தார்கள். இது ஜனநாயக விரோதச் செயலாகும் என்றும் அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்து பி.பி.சி.க்கு கருத்து வெளியிட்ட, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய, பலாத்காரமாகப் படங்களை அழித்ததாகக் கூறப்படுவதை மறுத்துரைத்தார். இராணுவத்திற்கென வழங்கப்பட்டுள்ள இடத்தில் இடம்பெறுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளைப் படம் பிடிப்பது இராணுவ பாதுகாப்புக்கு எதிரானது எனவே இங்கு படம் பிடிக்க வேண்டாம் என்று எடுத்துக் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எடுத்த படங்களை அழித்து விடுமாறுதான் கூறப்பட்டது, எடுக்கப்பட்ட படங்களைப் பலாத்காரமாக எவரும் அழிக்கவில்லை. அவ்வாறு கூறுவது பொய்ப்பிரசாரமாகும். இது எங்களுக்குக் கவலையளிக்கின்றது. முன்னர் அந்த இடங்கள் சிவிலியன்களுக்குச் சொந்தமானதாக இருந்திருக்கலாம். ஆனால் அந்த இடங்கள் பலாலி இராணுவ முகாமுக்கென இப்போது வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே இராணுவ முகாம் பகுதியில் இடம்பெறுகின்ற வேலைகளைப் படம் எடுப்பதற்கு எவருக்கும் அதிகாரமில்லை எனத் தெரிவித்தார்.

## என்றும்...

அரசியலமைப்பைப் பேணுவதும் வெளியுறவுக் கொள்கையை தீர்மானிப்பதும் பிரதமரே ஒழிய வேறு எவருமல்லர். எனவே இந்த விடயத்தில் எவரும் தலையிட முடியாது. மாநாட்டில் பங்குபற்றுவதா இல்லையா என்பதனை பிரதமரே தீர்மானிப்பார் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க வேண்டுமெனத் தெரிவித்துள்ள இரண்டாவது காங்கிரஸ் தலைவர் மணிசங்கர் ஐயராவார். ஏற்கனவே சுதர்சன நாச்சியப்பனும் இந்தியா பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புலம்பெயர்..

நோக்கங்களுக்காக அன்றி அவர்கள் சுயஇலாபத்திற்காக அரசியல் நடத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளராக தம்மைப் பெயரிட்ட போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்மை ஓரம் கட்டியதாகத் தெரிவித்துள்ளார்,

இந்த விடயம் குறித்து மன்னார் ஆயர் தலையீடு செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பத்திரிகை பேரவை விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சின் இலங்கை பத்திரிகை பேரவையில் உள்ள பதவிவெற்றிடங்களு க்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதவிகளான பத்திரிகை ஆணையாளர், உதவிப் பத்திரிகை ஆணையாளர், நிருவாக உத்தியோகத்தர், செய்தி ஆய்வு உத்தியோகத்தர் (தமிழ், ஆங்கிலம்), முகாமைத்துவ உதவியாளர் ஆகிய பதவிகள் உள்ளன.

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு க.பொ.த. உயர்தரம், க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் பத்திரிகை ஆணையாளர், இலங்கை பத்திரிகை பேரவை 155/15 காசல் வீதி, பொரளை, கொழும்பு - 08 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.(105)

# வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே போட்டிகள்



(முள்ளியவளை)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முல்லைத்தீவு முள்ளியவளை முதலாம் வட்டாரம் வெண்மலர் விளையாட்டுக் கழகத்தினரால் முள்ளியவளை முதலாம் வட்டாரத்தில் வதியும் மாணவர்களுக்கிடையிலான வாசிப்பு மற்றும் பேச்சுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை முள்ளியவளை அன்னை திரேசா ஆலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் மாணவர்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுக்களுக்குமிடையே வாசிப்பு மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக கூளாமுறிப்பு பங்குத்தந்தை அருட்திரு வின்சன் அடிகளார் பங்கு பற்றினார். (125)

# அடுத்த வருட பட்ஜெட்டில் ஜனாதிபதிக்கு 856 கோடி

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கு மட்டும் 856 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய 14 அமைச்சுக்களுக்கு 624 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐ.தே.க. பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்றத்தில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட வரவு செலவுத்திட்டம் தொடர்பான மதிப்பீட்டு வரைபில் தனிநபர் என்ற வகையில் ஜனாதிபதிக்காக மட்டும் 856 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் மாத்திரம் ஜனாதிபதிக்கான செலவுகள் 742 கோடி ரூபா இதனடிப்படையில் அவரது செலவுக்காக 2014 ஆம் ஆண்டு வரவு -செலவுத் திட்டத்தில் மேலதிமாக 114 கோடி ரூபா சேர்க்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பிரதமரின் செலவு இம்முறை இரண்டு கோடி ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் பிரதமருக்கு 32 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது.

அத்தோடு பசில் ராஜபக்ஷவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 10 ஆயிரத்து 600 கோடிரூபாவும், கோத்தாபய ராஜபக்ஷவின் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு 25 ஆயிரத்து 390 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் உள்ள சில அமைச்சுகளுக்காக 36 ஆயிரத்து 250 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஜனாதிபதி உட்பட அவரது சகோதரர்களின் அமைச்சுகளுக்காக மட்டும் 72 ஆயிரத்து 400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

14 அமைச்சுக்களுக்கான செலவுகளுக்காக வெறும் 624 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் தனி நபரான ஜனாதிபதிக்கு 852 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சீனி தொழிற்துறை அமைச்சருக்கு 9 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## பொதுநலவாய...

வடமாகாண சபையின் முதலாவது அமர்வு கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றதுடன், அடுத்த அமர்வு எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் முதல்வர் விக்னேஸ்வரன் கலந்து கொள்ளும் வகையிலேயே வடமாகாண சபையின் அடுத்த அமர்வு 11 ஆம் திகதிக்கு வைக்கப்பட்டதாகவும் அந்த பத்திரிகைத் தகவல்கள மேலும் தெரிவிக்கின்றன. இதேவேளை, பொதுநலவாய மாநாட்டை இந்தியா பகிஷ்கரிக்காது அதில் பங்குபற்ற வேண்டுமென விக்னேஸ்வரன் ஏற்கனவே கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொமன்வெல்த்...

தலைவருடனோ இருதரப்பு பேச்சுக்களை நடத்தாமல், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், தொடக்கவிழா முடிந்தவுடன் அல்லது மறுநாள் காலையிலேயே புதுடில்லிக்குத் திரும்பிச் செல்லக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தெற்காசிய நாடுகளுடனான ஒற்றுமையை வெளிப்படுத்தும் நோக்கில் மன்மோகன்சிங் இந்த நிகழ்வில் சம்பிரதாயமாக மட்டும் கலந்து கொள்ளக்கூடும் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அரியாலை...

என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிறு குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையின் பின்னர் மேற்படி நபரை யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

# முதலிடம் பிடித்தது யாழ்.பொது நூலகம்

இலங்கையின் மிகச் சிறந்த நூலகமாக யாழ்ப்பாண பெது நூலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் நூலகங்களுக்கு இடையில் போட்டி நடத்தப்பட்டது.

இதன்படி அகில இலங்கை ரீதியாக சிறந்த நூலகமாக யாழ்ப்பாண நூலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் இடத்தை நாவலப்பிட்டி நூலகமும், மூன்றாம் இடத்தை வாரியபொல நூலகமும் பெற்றுக் கொண்டுள்ளன. மாநகரசபைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட நூலகப் போட்டியில் யாழ்ப்பாண நூலகத்திற்கு முதலாம் இடம் கிடைக்கப்பெற்றுள்ளது.

# புலம்பெயர்ந்தோரின் தாளத்தால் சுயமுடிவு எடுக்க முடியாத நிலை

## கூட்டமைப்பின் நிலை குறித்து அரசாங்கம்

(கொழும்பு)

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் தாளத்திற்கு ஆடிப் பழகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் சுயமாக எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியவில்லையெனவும், நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் பகிஷ்கரிப்பதெனக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவு தவறானதெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினர், அன்று தொடக்கம் தாய்நாட்டிற்கும், மக்களுக்கும் எதிராகவே செயற்பட்டு வருகின்றனர்.

53 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ள, கொமன்வெல்த் மாநாட்டை கோலாகலமாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் இதனை எதிர்ப்பதாக அறிவித்திருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

யார் எந்தத் தீர்மானத்தை எடுத்தாலும், இது குறித்து மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

கொமன்வெல்த் மாநாட்டுக்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதனைத் திட்டமிட்டுப் புறக்கணிப்பது, தாய்நாட்டிற்கும் அவர்களை நம்பி வாக்களித்த மக்களுக்கும் இழைக்கும் மிகப் பெரிய துரோகமாகும்.

தற்போது இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைத்து வரும் பொருளாதார ரீதியான உதவிகளை நிறுத்தும் நோக்கிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு சிலர் தமிழ் தலைவர்களையே கொலை செய்த தீவிரவாதிகளுக்கு சாதகமாகச் செயற்பட்டவர்கள். இவர்களது வரலாறு கறைபடிந்த அத்தியாயமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உலக அரங்கில் அமெரிக்கா தனிமைப்படுத்தப்படும் நிலை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நட்பு நாடுகளின் அரச தலைவர்களது தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டதன் மூலம் அமெரிக்கா, உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படக் கூடிய அபாயத்தை எதிர்நோக்கி வருவதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜெர்மனி, பிரேஸில் போன்ற நாடுகளின் தலைவர்களது தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் நிலைமை அமெரிக்காவின் சர்வதேச உறவுகளுக்கு பாதகத்தையே ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு சுமத்தி வரும் அமெரிக்கா போன்ற நாடுகளின் இரட்டை நிலைப்பாட்டை உலகிற்கு அம்பலப்படுத்த வேண்டுமென சிரேஸ்ட சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையானது ஜனநாயக விரோதமானது மனித உரிமைகளை மீறும் வகையிலும் அமைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தொலைபேசி ஒட்டுக் கேட்டல் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என மாற்றுக் கொள்கைகளுக்காக கேந்திர மத்திய நிலையத்தின் தலைவர் டாக்டர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

ஏதேனும் காரணத்திற்காக தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டிருக்கலாம் என்ற போதிலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். எழுவைதீவு கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 15 பேரையும் தொடர்ந்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் எம்.எஸ். மகேந்திரராஜா உத்தரவிட்டுள்ளார்.

இந்திய புதுக்கோட்டை ஜனதா பட்டிணத்தைச் சேர்ந்த குறித்த 15 மீனவர்கள் நான்கு படகுகளில் கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை இரவு எழுவைதீவு கடற் பரப்பில் அத்துமீறி நுழைந்த போது காரைநகர் கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 15 மீனவர்களும் 4 படகுகளும் யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த ன, இதனையடுத்து, இவர்களை யாழ். மாவட்ட நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தினர் கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது, இந்த மீனவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். இந்த நிலையில், குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த 15 மீனவர்களையும் எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தொடர் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (25)


இலங்கையின் முதற்தர ஆங்கிலக் கல்லூரியின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன..........

City & Guilds APPROVED CENTRE

உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்கள்

SPOKEN ENGLISH

பகல் நேர பிரிவு (50 % கட்டணக்கழிவு)

திங்கள் - வெள்ளி வரை முழு நேரபாடநெறி காலம் 2மாதங்கள். (காலை 9.00-12.00 வரை)

சனி / ஞாயிறு பிரிவு (சீரமைக்கப்பட்ட நவீன பாடநெறி)

காலை 7.30 - 10.30 வரை

3மாதங்கள் மற்றும் 6 மாத கால பாடநெறி

ஆரம்பமும் அறிமுக நிகழ்வும்

03.11.2013 காலை 8.30 மணி

(தற்போது பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.)

எமது ஏனைய பாடநெறிகள்

IELTS

FRENCH

DEUTCH

SINHALA

COMPUTER



எங்கும் ஆங்கிலம் கற்க முடியும் ஆனால் எம்மிடம் மட்டுமே பேச முடியும் என்பது நருபிக்கப்பட்ட உண்மை

E-CITY 0773400418 /0774924166

COLLEGE OF ENGLISH

இல-372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.(வீரமாகாளி அம்மன்கோவில் அருகில்)


# யாழ்ப்பாணச் சிறுவர்கள் ஆஸி.க்கு கடத்தப்பட்டனரா?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுவர்கள் அவுஸ்ரேலியாவிற்கு கடத்தப்பட்ட நிலையில் மீளவும் அவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டது தொடர்பான தகவல் தேசிய சிறுவர் அதிகார சபைக்கு கிடைத்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

10, 11 மற்றும் 14 வயதுகளை உடைய ஆண் பிள்ளைகள் அவுஸ்ரேலியாவிலிருந்து மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட நிலையில் இவர்கள் கடத்தப்பட்ட தகவல் தெரியவந்துள்ளது.

அதிகாரசபையின் விசாரணைப் பிரிவு பொலிஸ் அதிகாரி பீ.டபிள்.யு. போபியகொட தெரிவித்துள்ளார். சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக அவுஸ்ரேலியாவுக்குச் சென்று பின்னர் நாடு கடத்தப்பட்ட சிலர் அண்மையில் தாயகம் திரும்பினர்.

அவர்களுள் குறித்த மூன்று சிறார்களும் இருந்துள்ளனர். பின்னர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அதிகாரிகளினால் அவர்கள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சிறார்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, அவர்கள் யாழ்ப்பாணத்தில் வசித்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

பின்னர் சிறார்களின் பெற்றோரை அழைத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், 2 இலட்சம் ரூபாவுக்காக ஒரு சிறுவனை, கடத்தலை மேற்கொண்டவரிடம் விற்றதாக வாக்கு மூலம் அளித்துள்ளனர்.

அவர்களை வளர்ப்பதற்காக அவுஸ்ரேலிய வாசிகளிடம் ஒப்படைக்கவுள்ளதாக கடத்தல்காரர் சிறார்களின் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

மூன்று சிறார்களையும் வானூர்தி ஊடாக அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு செல்லவுள்ளதாக கடத்தல்காரர், பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். எனினும், சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாகவே சிறார்கள் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையிலுள்ள சிறைகளில் சிரமப்படுகின்றனர் பெண்கள்

இலங்கையின் சிறைகளில் பெண்களுக்கு போதிய வசதிகள் இல்லை என ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான விசேட அறிக்கையாளர ரஷிடா மஞ்சு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள சில சிறைகளில் தடுப்பு அறைகளில் எலிகள் காணப்படுகின்றன.

அங்குள்ள பெண் கைதிகளுக்கு போதுமான படுக்கைகள், பாய்கள், தலையணைகள் குறைவாகவே உள்ளன.


அத்துடன் சிறையறைகளில் கடும் வெப்பம் காணப்படுவதுடன் அவர்களுக்கு மின் விசிறி வசதிகளும் இல்லாததால் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் ஐ.நா. பொதுச் சபையில் சமர்ப்பித்த காரணங்கள், நிபந்தனைகள் மற்றும் மகளிர் சிறைவைப்பின் விளைவுகள் தொடர்பான அறிக்கையில் மஞ்சு இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள சில சிறைகளில் 75 பெண் கைதிகள் பகிர்ந்து பயன்படுத்தும் வகையில் இரண்டு குளியலறைகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

75 பேர் வைக்கப்படக் கூடிய சிறையறைகளில் சுமார் 150 பேர் வைக்கப்பட்டுள்ளனர் என மஞ்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கூடங்குளம் அணு உலையால் இலங்கைக்கு பேராபத்து



(கொழும்பு)

தமிழகத்திலுள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தின் மூலம் இலங்கைக்கு அச்சுறுத்தல் நிலவுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளதாவது,

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக தகவல்களை இரு நாடுகளுக்கிடையேயும் பரிமாறிக் கொள்ளும் வகையிலான உடன்படிக்கையொன்றை செய்வது குறித்து அரசாங்கம் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றது.

ஆனால் எமது இந்த வேண்டுகோள் தொடர்பில் இந்தியா எவ்வித பொறுப்புக்கூறலையும் இதுவரை வழங்கவில்லை.

ஜப்பானின் புகுஷிமா அணு உலையில் ஏற்பட்ட விபத்து மாதிரி கூடங்குளத்தில் ஏற்படமாட்டாதென நாம் கவனயீனமாக இருக்க முடியாது. எனினும் எமது அதிகாரிகள் கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து அணுக்கசிவு ஏற்பட்டுள்ளதா என கண்டறிய தொடர்ச்சியாக பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை கூடங்குளம் அணு உலையில் அணுக்கசிவு ஏற் பட்டதாக தெரிவிக்கப்படும் செய்திகள் அப்பட்டமான பொய்யென கொழும்பிலுள்ள இந்தியத்தூதரகம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஒக்ரோபர் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.